
கல்கி
KALKI
15.7.1962
30 காசு


பாண்ட்ஸ்
ட்ரீம்ப்ளவர் டால்கம் பவுடர்
உபயோகித்து நாள் முழுவதும் குளுமையையும்
நறுமணத்தையும் அனுபவியுங்கள்
பட்டுப்போன்ற மென்மை, அன்றலர்ந்த மலரின் குளுமை, துல்லிய நறுமணம்—இவற்றின் சேர்க்கைதான் பாண்ட்ஸ் ட்ரீம்ப்ளவர் டால்கம் பவுடர்! அசௌகரியமான வியர்வையை விரைவில் உறிஞ்சுகிறது...நாள் முழுவதும் நறுமணத்தோடு இதமாக இருக்க உதவுகிறது. அதை வருஷம் பூராவும் உபயோகித்துப் பரவசமடையுங்கள்!
POND'S
POND'S
DREAMFLOWER TALC
DREAMFLOWER TALC
சீஸ்ப்ரோ-பாண்ட்ஸ் இன்கார்ப்பொரேடட்
(வரையறுக்கப்பட்ட பொறுப்புடன் யு.எஸ்.ஏ.யில் இணைக்கப்பட்டது)
JWT-P 3274

சுபகிருது, ஆனி 31௳


கல்கி

ஜூலை 15, 1962

பொருளடக்கம்



வர்ஜீனியா புகையிலை இறக்குமதியாகும் விதேசிப் பண்டமென்றே கருதப்படுகிறது. உண்மையில், நிலமும் சீதோஷ்ண நிலையும் ஒத்துக்கொள்ளுமேயானால், உலகின் எப்பகுதியிலும் உற்பத்தி செய்துகொள்ளக்கூடிய ஒருவகைப் புகையிலையே வர்ஜீனியா. இன்று சிகரெட் உற்பத்தியில் முதன்மையான நாடுகள் இந்தியப் புகையிலையைப் பெருமளவில் வாங்கிச் செல்வதைப் பார்க்கையில், இந்தியாவின் வர்ஜீனியா புகையிலை அதி உன்னதமானது என்பது நிருபணமாகிறது.



புகையிலையின் வரலாறு...6



பம்பாய்—57.

பாரதத்தில் இத்தகைய தேசிய ஸ்தாபனங்களில் மிகப் பெரியது.

பனமா

ஒரு நல்ல சிகரெட்—
இறுதிவரை இன்பமூட்டுவது

GT.706 TM



மலர் 21 | தமிழ்த்திரு நாடுதன்னைப் — பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார் | இதழ் 50

வருந்திப் பயனில்லை !

வரிகளை விதிக்கும் அரசாங்கங்கள் வெவ்வேறாக இருக்கலாம். வரிகளுக்காகத் தேர்ந்தெடுக்கப்படும் இனங்களும் வெவ்வேறாக இருக்கலாம்; விகிதங்களும் வெவ்வேறாக இருக்கலாம். ஆனால் இந்த வித்தியாசங்களால் பொதுமக்களுக்கென்னவோ ஒரு அநுகூலமும் இல்லை. யார், என்ன வரி, எந்த முறையில் விதித்தாலும், கடைசியில் அவற்றைக் கொடுப்பவர் சாதாரண மக்கள்தாம். சிலவற்றை நேரடியாகக் கொடுப்பார்கள். பெரும்பாலானவற்றைத் தெரியாமல் மறைமுகமாகக் கொடுப்பார்கள். தெரிந்து கொடுத்தாலும், தெரியாமல் கொடுத்தாலும் அவர்கள்தான் கஷ்டம் முழுவதும் அனுபவிக்க வேண்டும். ஒட்டிய வயிற்றை மேலும் இறுக்கி இந்தக் கஷ்டத்தை ஏற்கத் தமிழ்நாட்டு மக்கள் தயாராக வேண்டும். புது பட்ஜெட் வந்துவிட்டதல்லவா ?

தமிழக அரசாங்கத்தின் தற்போதைய வருமானம் 113 கோடி ரூபாய். பத்து ஆண்டுகளுக்கு முன் இது 50 கோடி ரூபாயாக இருந்தது. அப்போது ஆந்திரப் பிரதேசமும் சென்னை ராஜ்யத்துடன் சேர்ந்திருந்தது. அதாவது, இப்போது தமிழகப் பெருமக்கள் முன்னைப்போல இருமடங்குக்கும் அதிகமாக வரிப் பளுவைத் தாங்குகிறார்கள்.

இவ்வளவு வரிப் பணம் இவ்வளவு ஆண்டுகளாகச் செலுத்தியும் மக்கள் அடைந்த லாபம் என்ன? அரசாங்கப் புள்ளி விவரங்களின்படியே வறுமை ஒழியவில்லை. ரூபாயின் மதிப்புக் குறைந்து இப்போதுள்ள வருமானத்தின் உண்மை அளவு பத்து ஆண்டுகளுக்கு முன் இருந்த வருமானத்துக்கு அதிகமல்ல என்று அரசாங்கமே ஒப்புக்கொள்ளுகிறது. ஆகவே இதுவரையில் மக்கள் செலுத்திய வரிப் பணம் ஆற்றோடு போன மாதிரிதான்.

இந்த நிலையில்தான் சென்னை அரசாங்கம் இந்த ஆண்டுக்கு, ஏழரை கோடி ரூபாய்க்கு மேலும் வரிகள் விதித்திருக்கிறது. வரி விதிக்கப்படும் இனங்கள் அனைத்தும் மக்களை மேலும் கஷ்டத்துக்கு உள்ளாக்குபவை. பஸ் வரி, லாரி வரி மூலம் பஸ் கட்டணங்கள் உயரும்; மின்சாரம் உபயோகிப்பவர்களும்—முக்கியமாகத் தொழில் ஆலைகளும்—அதிகக் கட்டணம் செலுத்த வேண்டும்; ஸ்டாம்புக் கட்டணங்கள் கூடுதலாகின்றன. நஞ்செய் தீர்வையும், புஞ்செய் நீர்க் கூலியும் உயர்த்தப் பட்டிருக்கின்றன. இப்படிப் பலவிதங்களில் வரிகளின் சுமை ஏறுகின்றது.

இவை எல்லாமே ஆட்சேபகரமானவை. மின்சார சப்ளை அரசாங்கத்தின் ஏகபோக உரிமை. சர்க்காரின் மின்சார சப்ளையை நம்பித் தொழில் நடத்தினால் மின்சாரம் எப்போதும் கிடைக்கும் என்று உறுதி இல்லை. சென்ற வாரம் ஏற்பட்ட நெருக்கடியான நிலைமை இதை நினைவுபடுத்துகிறது. இந்த லட்சணத்தில் கட்டணங்களை உயர்த்துவதில் என்ன அர்த்தம் ? ஏகபோக உரிமை உள்ள விவகாரங்களில் எல்லாமே இப்படித்தான் இருக்கும். கட்டண உயர்வுகளும் சில தொழில்களுக்கு அதிக விகிதத்திலும் சிலவற்றுக்குக் குறைவாகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. இந்த அடிப்படைகள் பொருளாதார ரீதியில் நியாயமானவைதானா என்றே புரியவில்லை. ஸ்டாம்புக் கட்டண உயர்வுக்குச் சொத்துக்களின் மதிப்பு உயர்ந்துவிட்டதைக் காரணம் காட்டுகிறார்கள். சொத்து மதிப்பு உயர்ந்தால் அந்த அளவுக்குத் தற்போதுள்ள விகிதங்கள் மூலமே அரசாங்கத்துக்கு அதிக வருவாய்


கிடைக்குமே! விகிதங்களை எதற்காக உயர்த்த வேண்டும்? நீண்ட காலமாக ஸ்டாம்புக் கட்டணங்கள் உயர்த்தப் படாமலே இருக்கின்றனவாம். ஆகவே இப்போது உயர்த்தப்பட்டிருக்கின்றன! இப்படி ஒரு விசித்திர வாதம்! சென்னை சர்க்கார் மத்திய சர்க்காரின் கைப் பொம்மையாகிவிட்டது. அதன் பயனே இதுவெல்லாம்

நஞ்செய் தீர்வையும் புஞ்செய் தீர்க் கட்டணமும் நிலச் சொந்தக்காரர்கள் கொடுப்பவை. சுதந்திரக் கட்சியின் கருத்துக்குப் புறம்பாக நடக்க வேண்டும் என்ற ஒரே காரணத்துக்காக இவை இப்போது அதிகரிக்கப் பட்டிருக்கலாம். உணவுப் பொருள் உற்பத்தி இன்னமும் பின்தங்கியே உள்ளது என்பதைச் சர்க்கார் சமீபத்தில்கூட நினைவுபடுத்தியுள்ளது. ஊக்கமும் உற்சாகமும் தரவேண்டிய உழவர்களுக்கு எவ்வளவு ஆதரவு காட்டியிருக்கிறார்கள் பார்த்தீர்களா?

டிசம்பரில் சமர்ப்பித்த இடைக்கால பட்ஜெட்டையும் இப்போது சமர்ப்பிக்கப்பட்ட பட்ஜெட்டையும் ஒப்பு நோக்கினால், செலவு செய்வதற்குச் சர்க்கார் வசூலித்துள்ள வருமானம் எதிர்பார்த்ததை விட 14 கோடி ரூபாய் அதிகமே கிடைத்திருப்பது தெரியும். அப்படி இருந்தும் ஒன்பதரை கோடி ரூபாய் துண்டு விழுகிறது என்றால், பட்ஜெட் தயாரிப்பது எவ்வளவு மோசம் என்பதும், செலவினங்கள் எப்படி வரம்பு மீறிப் போகின்றன என்பதும் தெரிய வரும்.

எப்படியானால் என்ன? 'நூறு கோடி ரூபாய் கோல் போடத் தவறிவிட்டேன்' என்று முன்பு திரு சுப்பிரமணியம் குறைப் பட்டுக் கொண்டார். மக்களிடமிருந்து நூறு கோடி ரூபாய் சுட்டும் கைங்கரியத்தில் புது மந்திரி பக்தவத்ஸலம் அவர்கள் வெற்றி கண்டு விட்டார். மூன்றும் திட்ட காலத்தில் எவ்வளவு அதிக வரி எதிர்பார்க்கப்படுகிறதோ அதில் கணிசமான பகுதியை ஒரே ஆண்டில் விதித்துத் தமது துடிப்பையும் வெளிப்படுத்தி விட்டார். இதற்கெல்லாம் இப்போது நாம் வருந்தி என்ன பயன்? பேய்க்கு வாழ்க்கைப்பட்டால் புளிய மரத்தில் ஏறத்தானே வேண்டும்? திட்ட பகாசுரனுக்கு ஊட்டமளிக்கும் காங்கிரஸை அரியணையில் அமர்த்தினால் வரிப்பளுவை ஏற்கத்தானே வேண்டும்? வெளிநாட்டு உதவி இல்லாமற் போனாலும் திட்டம் அப்படியே இருக்கும் என்கிறார் மொரார்ஜியவர்கள். வரிக்குமேல் வரி போட்டு மக்களைக் கசக்கிப் பிழிவோம் என்றுதான் இதற்குப் பொருள். பேயை ஓட்ட வழி தேட வேண்டும்.

என்ன கருணை!



தீரர் மறைந்தார்

**துஞ்சும் பொழுதினும் தாயின் – பதத்
தொண்டு நினைந்திடும் வங்கத்தினோர்**

என்று பாடினார் பாரதியார். அதற்கேற்ப 'என் கண்கள் மீளாமல் துஞ்சும் வரை தாய்த் திரு நாட்டுக்காக நான் உழைக்க ஆண்டவன் அருளட்டும்' என்று ஆறுண்டுகளுக்கு முன்பு தமது எழுபத்தைந்தாவது ஆண்டு நிறைவு விழாவில் கூறினார் வங்கம் தந்த சிங்கமாகிய பிதன் சந்திர ராய் அவர்கள். அன்றைக்குச் சரியாக ஆறுண்டுகளுக்குப் பின் அவரது பிரார்த்தனை ஈடேறி விட்டது. மாசற்ற சந்திரனாக, கலைகள் தேயாத சந்திரனாகவே இறுதி வரையில் திகழ்ந்து அஸ்தமித்து விட்டார் பிதன சந்திரர்.

வைத்தியத் துறையில் நிபுணராகிய ஸ்ரீ பி. ஸி. ராய் அவர்கள் நாட்டைப் பிடித்த அடிமை நோயைத் தீர்ப்பதற்காக நாற்பதாண்டுகளுக்கு முன் தேசிய இயக்கத்தில் குதித்தார். அன்றிலிருந்து வங்கத்தின் முன்னணித் தலைவராக இருந்திருக்கிறார். 1948-லிருந்து தொடர்ச்சியாக நாலு பதவிக் காலங்கள் மேற்கு வங்காள முதன் மந்திரியாக அவர் அரும்பணி ஆற்றியுள்ளது அம் மக்கள் அவர் மீது கொண்டுள்ள பேரன்பைக் காட்டுகிறது. எல்லைப்புறத்திலுள்ள வங்காளம் தொல்லை மிகுந்த ஒரு ராஜ்யம். கம்யூனிஸக் கரடியும் சற்றுத் தன்னிச்சையாகச் சஞ்சாரம் செய்யும் பகுதி அது. அங்கு இரும்பு மனிதரான ஸ்ரீ ராயின் தலைமை இல்லாதது தற்போது நாட்டுக்கெல்லாம் கவலையை உண்டாக்கியுள்ளது.

பி. ஸி. ராய் அவர்களின் விசேஷ குண நலன் அவரது தீரமே யாகும். மத்திய சர்க்கார் இழுத்த இழுப்புக்கெல்லாம் வளைந்து கொடுக்காத வீரர் அவர். தமக்கு கவர்னர் பதவி அளிக்கப்பட்ட போது அதனை ஏற்க மறுத்த இந்த அதிசய காங்கிரஸ்காரரே பின்பு ஆகரிச முதன் மந்திரியானார். ராஜ்யத்தில் இருந்த கொந்தளிப்பை ஒட்டி 1960-ம் ஆண்டு சுதந்திரவிழாவே கொண்டாடாமல் இருக்குமளவுக்குத் துணிவுபெற்றிருந்தார் அவர். 'ஹிந்தியை ஆட்சிமொழியாகத் திணித்தால் வங்கா



ளத்தைத் தனி அரசாகப் பிரித்துக் கொண்டு செல்வேன்' என்று அவர் முழங்கியதாக ஸ்ரீ கேர் கமிஷன் யாதாஸ்து வெளியான காலத்தில் பிரஸ்தாபமிருந்தது நினைவிருக்கலாம். தில்லிக்குக் கைப்பொம்மையாகிவிட மறுத்த ஒரே ஒரு ராஜ்ய முதன் மந்திரியையும் இன்று இழந்து நிற்கிறோம்.


புருஷோத்தமர் பிரிவு

1961-ம் ஆண்டில் பி. ஸி. ராய் அவர்களுடனே பாரத ரத்ன விருது பெற்ற மற்றொரு பழம்பெரும் தேசபக்தரும் ராய் காலமான அன்றே நம்மை விட்டுப் பிரிந்து விட்டார். குடும்ப வாழ்வு ஏற்காமல் நாட்டு வாழ்வே தமது தனி வாழ்வாக இருந்தவர் ராய். பெரியதொரு குடும்பத்தின் தலைவராக இருந்தும் ராஜரிஷி என்று மதிக்கப்பட்டவர் புருஷோத்தமதாஸ் தண்டன் அவர்கள்.

நாட்டுப் பற்று, ஹிந்தி மொழிப் பிரசாரம் இவற்றுக்காகவே உயிர் வாழ்ந்தவர் தண்டன் அவர்கள். அதீதமான ஹிந்திப் பற்று கொண்டிருந்

தும், குறுகிய பிரதேச உணர்ச்சியின்றி நாடு முழுவதின் மீதும் அவர் அன்பு செலுத்தியது ஒரு புதிரேயாகும்.

ராய் அவர்களைப் போலவே அசாத்திய நெஞ்சுரம் படைத்தவர் தண்டன் அவர்கள். தாம் அலஹாபாத் நகர சபைத் தலைவராக இருக்கையில் தண்ணீர் பற்றாக்குறை ஏற்பட்ட போது ஆங்கிலேய கவர்னரின் குளியல் குளத்துக்கே நீர் விட மறுத்தவர் அவர். ஒத்துழையாமை, சட்ட மறுப்பு முதலிய போராட்டங்களில் விழுப்புண் வடுக்கள் பெற்ற இவர்தான் முதன் முதலாக ஜமீந்தாரி முறையை எதிர்த்துக் கிளர்ச்சி செய்தார். சுதந்திர இந்தியாவில் தமது அபிப்பிராயத்தை நேருஜி ஏற்காத போது, காங்கிரஸின் தலைவர் என்ற ரீதியில் தமக்கு உரிய மதிப்பை அளிக்கவில்லை எனக் கருதி அவர் ராஜிநாமா செய்தது பாராட்ட வேண்டிய செயலாகும்.



நீண்ட நாள் நோய் வாய்ப் பட்டிருந்த தண்டன் அவர்கள், துணிவு, எளிமை, சத்தியத்தில் நம்பிக்கை ஆகிய அருங் குணங்களைப் பெற்று மகாத்மாவின் உண்மைச் சீடராகவே வாழ்ந்து மறைந்து விட்டார்.

போதனை மொழிக்குச் சோதனை

உப ஜனாதிபதி டாக்டர் ஜாகிர் ஹுசேன், சர்வ கலாசாலைகளில் போதனாமொழி பிரதேச மொழியாகத்தான் இருக்க முடியும் என்று பேசியிருக்கிறார். கிழிந்த துணியைத் தைக்கக் கொண்டு வந்த ஊசியைக் கொண்டு, கண்ணைக் குத்திக் கொண்ட கதையாக முடிந்து விட்டதே என்ற உணர்ச்சி டாக்டர் ஜாகிர் ஹுசேனின் பேச்சைக் கேட்டவர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது.

'போதனா மொழி விஷயத்தில் இறுதிப் பொறுப்பு சர்வ கலாசாலைகளுக்குத்தான். அவைகளைக் கட்டுப்படுத்த அரசியல் நிர்ணயச் சட்டப்படி அரசினருக்கு எந்த அதிகாரமும் கிடையாது' என்று சென்னை சர்வகலாசாலை உப அத்யட்சகர் டாக்டர் ஏ. லட்சுமணசுவாமி முதலியார் அவர்கள் அழுத்தம் திருத்தமாகக் கூறியிருக்கிறார். அரசாங்கம் கட்டளை பிறப்பிக்கக் கூடாது என்பதோடு, அதில் பொறுப்புள்ள பதவிகளை வகிப்பவர்கள் இவ்விஷயத்தில் மனம்போனபடி பேசாமலிருப்பதும் முக்கியமாகும். ஆங்கிலத்தின் மூலம் படிப்பது ஒழிந்து போனால் படித்துத் தேர்ந்தவர்களுக்கு உத்தியோகம் திண்டாட்டமாகும். தேசம் முழுதும் ஒன்றாக இருந்தது போய் அந்தந்தப் பிரதேசத்தார் அந்த அந்தப் பிரதேசத்தில்தான் உத்தியோகம் தேட வேண்டியதாகும். மேல் படிப்புக்கு வசதியில்லாமலும் போகும். ஹிந்தியைப் புகுத்த இது ஒரு வழி. இந்தச் சதியை ஸ்ரீ லட்சுமணசுவாமி முதலியார் அவர்கள் எதிர்த்துப் பேசியது போற்றத் தக்கது.

இடமில்லை ! இடமில்லை !

இவ்வாண்டு பள்ளிகளிலோ கல்லூரிகளிலோ அட்மிஷனுக்காக அலைந்த பெற்றோர்களையும் உற்றோர்களையும் தமது அனுபவத்தைக் கட்டுரை வடிவில் ஆக்கிக் 'கல்கி'க்கு அனுப்புமாறு சென்ற இதழில் கோரியிருந்தோமல்லவா? நேயர்களின் விருப்பத்துக் கிணங்க, இந்தக் கட்டுரைகள் கல்கி காரியாலயத்துக்குக் கிடைக்கவேண்டிய தேதியை ஜூலை 20-ந் தேதியிலிருந்து ஜூலை 31ந் தேதிக்குத் தள்ளி வைத்திருக்கிறோம். கட்டுரை கல்கி இதழில் ஒரு பக்கத்துக்கு மேற்போகாமல் அமைய வேண்டுமென மீண்டும் நினைவுறுத்துகிறோம்.

என்ன சேதி?

ஒரு நல்ல செய்கை

பிரதமர் நேருஜி, காஷ்மீரில் ஓய்வு எடுத்துக் கொள்ளச் செல்வதற்கு முன் கல்கத்தா துறைமுகத்தில் நமக்காக வந்திறங்கிய இரண்டு கப்பல் (அதாவது இருபதினாயிரம் டன்) கோதுமையைக் கிழக்குப் பாகிஸ்தானுக்கு உடனடியாக அனுப்பி வைக்கும்படி உத்தரவு கொடுத்து விட்டுச் சென்றிருக்கிறார்.

கிழக்கு பாகிஸ்தானில் பஞ்சநிலைமை ஏற்பட்டிருக்கிறதாம். அவர்கள் நேற்றுவரை நம்முடைய சகோதரர்களாக இருந்தவர்கள் தாம். ஆகையால் அவர்களுக்கு வரும் கஷ்டம் நமக்கு வந்தாற் போல்தான். ஆனால் சமீப காலத்தில் பாகிஸ்தான் அரசாங்கம், சீனவுடன் கொஞ்சிக் குலவியும், காஷ்மீர்ப் பிரச்னையை மீண்டும் ஐ. நா. வில் கிளப்பியும் இந்திய சர்க்காரின் ஆத்திரத்துக்கும் கோபத்துக்கும் காரணமாகி யிருக்கிறது. அவற்றையெல்லாம் பொருட்படுத்தாமல், இந்திய சர்க்கார் கிழக்குப் பாகிஸ்தானுக்கு உணவு தானியம் அனுப்ப முன் வந்தது பாரத நாட்டில் பரவலாக எல்லாருக்குமே மகிழ்ச்சியளித்திருக்கிறது.


இன்னு செய்தார்க்கும் இனியவே செய்யாக்கால்
என்ன பயத்ததோ சால்பு

என்றார் குறளாசிரியர். அந்தச் சான்றாண்மை மிக்க நாடு பாரத நாடு என்ற நற்பெயரை மீண்டும் வாங்கித் தந்த பிரதமருக்கு மக்கள் நன்றி செலுத்துவர்.

ரேடியோவும் தமிழும்

டில்லி அகில இந்திய ரேடியோவில் வட இந்தியர்களுக்காகத் தமிழ்ப் பாடங்கள் நடத்தப் போகிறார்களாம்.

ரேடியோவின் மூலம், அதுவும் 26 பாடங்கள் மூலம் யாரும் தமிழ் கற்றுக் கொண்டு விட முடியாது. பல நூறு ஆண்டுகளாகத் தமிழ் நாட்டில் வசிக்கும் மார்வாரியர், குஜராத்தியர் இவர்களாலேயே இன்னும் சரியாகத் தமிழ் பேசவோ எழுதவோ முடியவில்லை. இப்படிச் சொல்லும்போது அம்மக்களைக் குறைசொன்னதாகக் கொள்ளக்கூடாது. பிறமொழி பயிலுவதன் கஷ்டத்தைத் தான் கூறுகிறோம். இவ்வளவு கஷ்டப் பட்டுத் தமிழ்மொழியை வட இந்தியர் கற்றுக் கொண்டாலும் அவர்கள் விசேஷப் பயன் எதுவும் அடையப் போவதில்லை. ஹிந்தியைத் திணிப்பதற்கு இது ஒரு சாக்கு; அவ்வளவே. ஆகவே, ரேடியோ மூலம் தமிழ் கற்பிக்கும் முயற்சி காலத்தை வீண் விரயமாக்குவதாகும்; பணத்தையும் வீண் செலவு செய்வதாகும்.



இரண்டாவது மண்டபம்

குட்டி கிருஷ்ணன்

பல ஆண்டுகளுக்கு முன்னால் நடந்தது.

''வெய்யில் தாழ்ந்தபிறகு மலைமேல் ஏறலாமே?'' என்று யாரோ சொன்னார்களாம்.

''நன்றாய்ச் சொன்னீர்கள்! நம்முடைய சௌகரியத்தைக் கருதிப் பழனி ஆண்டவனைக் காக்க வைப்பதா? கூடவே கூடாது. உடனே புறப்பட்டுத்தான் ஆக வேண்டும்'' என்று வரிந்து கட்டிக் கொண்டு கிளம்பி விட்டார் கல்கி அவர்கள். படிகளில் காலைப் பதித்து ஏறத் தொடங்கினார். சூடாவது சூடு! கால்கள் நர்த்தனமாட ஆரம்பித்தன. 'அப்பா! பழனியப்பா! கால் பழுத்து விட்டதடா அப்பா!' என்று நினைத்துத்தானோ என்னவோ, கல்கி அவர்கள் பக்கத்திலிருந்த கோயில் அதிகாரிகளிடம், ''இங்கே படிகளில் சில மண்டபங்களை எழுப்பலாமே! நிழலுக்கு நிழலும் ஆயிற்று; பக்தர்கள் ஆங்காங்கே இளைப்பாற வசதியும் ஆயிற்று'' என்றார்கள்.

அவருடைய கோரிக்கை நன்கு நிறைவேறியது மட்டுமல்ல; இன்று பழனியில் பலப்பல மண்டபங்களுக்கிடையில் 'கல்கி மண்டபம்' ஒன்றும் கம்பீரமாய்க் காட்சி தந்துகொண்டிருக்கிறது!

இந்த விவரத்தைச் சென்ற ஜூன் 28-ந் தேதி நடைபெற்ற கல்கி மண்டபத் திறப்பு விழாவின் போது கோயில் தர்மகர்த்தாக் குழுத் தலைவர் ஸ்ரீ லட்சுமிபதி ராஜு அவர்கள் வெளியிட்டார்.

சில வருஷங்களுக்கு முன்னால், ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மி அவர்கள் பழனியில் ஒரு கச்சேரி செய்தார். அதற்காகச் சன்மானம் ஏதும் பெற்றுக் கொள்ளாததோடு ஸ்ரீ சதாசிவம் தம்பதியர் மேலும் ஐயாயிரம் ரூபாயைக் கோயிலுக்கு வழங்கினர். கல்கி அவர்களுடைய பெயரால் மண்டபம் ஒன்று அமைக்குமாறு கேட்டுக் கொண்டனர். அத்துடன் தேவஸ்தானத்தினரும் பணம் போட்டு மொத்தம் பதினோராயிரம் ரூபாய் செலவில் கல்கி மண்டபத்தை எழுப்பி இருக்கின்றனர்.

மலைமேல் ஏறக் கோயில் யானை செல்லும் பாதை ஒன்றும் படிக்கட்டுகளும் ஆக இரண்டு வழிகள் உண்டு. படிக்கட்டுகளில் தான் சாதாரணமாக ஜனங்கள் ஏறிப் போவார்கள். 'பெரிய மனிதர்களாக' யாரேனும் வந்து சேர்ந்தால் அவர்கள் யானைப் பாதையைத் தேர்ந்தெடுப்பதில் அதிசயமில்லை.

இரண்டு பாதைகளும் ஓரிடத்தில் சந்திக்கின்றன: ஒன்றை ஒன்று கடந்து செல்கின்றன. அந்தச் சந்திப்பிலே அமைந்துள்ளது கல்கி மண்டபம். பின்னும் கல்கி ஸ்தாபனத்தின் சார்பிலே நன்றி தெரிவித்த ஸ்ரீ நா. பார்த்தசாரதி அவர்கள் மொழிந்தது போல, தமிழ் இலக்கிய வரலாற்றிலே ஒரு மறுமலர்ச்சியை உண்டாக்கிய கல்கி அவர்கள் பழமை இலக்கியத்திலிருந்து எளிதான புதுமை இலக்கியத்துக்கு ஒரு வழிகாட்டியாக இருந்ததற்குப் பொருத்தமாக, கடினமான படிக்கட்டு வழியிலிருந்து எளிமையான யானைப்பாதை பிரியும் இடத்திலேபொருந்தித் தோன்றுகிறது இந்தக் கல்கி மண்டபம்.

குன்றின்மீது மூன்றில் ஒருபங்கு உயரத்தில் மண்டபத்தினருகே அமைந்திருந்த பந்தலில் திறப்பு விழா நடைபெற்றது.

மண்டபத்தைத் திறந்து வைத்த மந்திரி திரு பக்தவத்ஸலம் அவர்கள் திருச்செந்தூரிலிருந்து பழனிக்கு வந்து சேர்ந்தார். அவருக்கு அமரர் கல்கியின் புதல்வரும் கல்கிப் பத்திரிகையின் துணை ஆசிரியருமான ஸ்ரீ கி. ராஜேந்திரன் அவர்கள் மாலை அணிவித்தார்.

கல்கி அவர்கள் தமிழுக்கு ஆற்றியுள்ள பணிகளை யெல்லாம் விரிவாக எடுத்துச் சொன்னார் அமைச்சர்.

தலைமை வகித்த மதுரை ஆதீனம் தவத்திரு ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய ஞானசம்பந்த தேசிக சுவாமி அவர்களை ஸ்ரீ சதாசிவம் அவர்கள் மாலை அணிவித்து வரவேற்றார். சுவாமிகள் பேசும்போது, ஸ்ரீ சதாசிவம் தம்பதியரைப் பாராட்டி ஆசி நல்கினார்கள். ஆன்மிகம் உலகெலாம் தழைக்க நல்லுபதேசங்களை வழங்கினார்கள்.

ஸ்ரீமதி எம். எஸ். அவர்கள் திருமுருகன் பேரில் அமரர் கல்கி அவர்கள் இயற்றிய பாடலை இனிக்கப் பாடி விழாவை இனிது முடித்துத் தந்தார்கள்.

கூட்டம் முடிந்ததும் மலை உச்சி ஏறிக் கோயிலை அடைந்து தண்டாயுதபாணிக்கு அபிஷேகங்களும் அலங்காரங்களும்நடைபெறுவதைக் கண்குளிரக் கண்டு மகிழ்ந்தோம்.

பால் வெண்ணீற்றை அள்ளிச் சொரியும் போது பால முருகனுடைய குனித்த புருவங்களும், குளிர் நயனங்களும், குமின் சிரிப்பும் ஒவ்வொன்றாக அடுத்தடுத்துத் தோன்றும் காட்சியை என்னென்பது! பாலபிஷேகத்தின் போது தும்பைப் பூ மேனியனாகத் திகழ்பவன் சந்தன அபிஷேகத்தின் போது பொன்னிறம் பெறும் அற்புதத்தை வார்த்தைகளால் எப்படி வர்ணிப்பது? இறுதியில் பார்ப்பவர் பரவசப்படும் புஷ்ப அலங்காரத்துடன் அருள்பாலிக்க அந்தத் திருக் கோலத்தைத் தான் எவ்வாறு எடுத்துக் கூறுவது?

கந்தபுராணம் பாடிய அடியாரின் உதவியை நாடவேண்டியதுதான்:

ஆயிரம் கோடி காமர்
அழகெலாம் திரண்டொன்றாகி
மேயின எனினும் செவ்வேள்
விமலமாம் சரணந் தன்னில்
தூயநல் எழிலுக் காற்றாது
என்றிடின், இனைய தொல்லோன்
மாயிரு வடிவுக் கெல்லாம்
உவமை யார் வகுக்க வல்லார் ?

கந்தபுராணத்தில் முருக வேளின் திருவுருவத்தைத் தரிசித்த சூரபன்மன் கூறுவதாக அமைந்தது இப்பாட்டு. பகைவனே இவ்வாறு போற்றுகின்றான் என்றால் பக்தர்களாகிய நம் பரவசத்துக்குக் கேட்பானேன்!

எப்படியோ எங்களை நாங்களே உலுக்கி எழுப்பிக்கொண்டுஅங்கிருந்துபுறப்பட்டோம். இறங்கி வருகையில் கல்கி அவர்களின் ஞாப












கார்த்தமாக ஸ்ரீ சதாசிவம் தம்பதியர் எழுப்பியிருக்கும் இரண்டாவது மண்டபத்தை அண்ணாந்து நோக்கினேன். சென்னையை அடுத்த திருநீர் மலையில் முதல் மண்டபத்தைப் பார்த்த கண்களால் இந்த இரண்டாவது மண்டபத்தையும் கண்டு களித்தேன்.

கல்கி பத்திரிகையின் முதல் சந்தாதாரராகச் சேர்ந்து அருளிய கணபதி மண்டபத்தின் மேலே இருந்து கொண்டு அபய ஹஸ்தம் காட்டி ஆசி நல்கினர். ''போய் வருகிறேன்'' என்று விடைபெற்றுக் கொண்டேன்.





‘ஓவர்லோட்’ கிடையாதா?

‘பிரயாணிகளையும், சரக்குகளையும் ஓர் அளவுக்கு மேல் ஏற்றிச் செல்வதை ‘ஓவர்லோட்’ சட்டம் தடுக்கிறதல்லவா? அதே போல்,, பஸ், லாரிகள் மீதுள்ள வரிகளையும் ஓர் அளவுக்கு மேல் ஏற்றாமலிருக்க ஓவர்லோட் சட்டம் இருக்கலாகாதா?’ என்ற எண்ணமே தமிழகத்தின் புது பட்ஜெட்டைக் காணும்போது ஏற்படுகிறது.

நிதி மந்திரி விதித்துள்ள புது வரிகளில் பிரயாணிகள் செல்லும் பஸ்கள் மீதும் சாமான் ஏற்றிச் செல்லும் லாரிகள் மீதும் சுமத்தப்பட்டுள்ள விகித உயர்வுகள் மிகவும் கடுமையானவை.

இந்த இரண்டு இனங்களின் மீது போடப்பட்ட வரிகளிலிருந்து நடக்கும் நிதி ஆண்டில் எஞ்சியுள்ள ஒன்பது மாதங்களில் சுமார் இரண்டு கோடி ரூபாய் வருமானம் கிடைக்கலாம் என்று அமைச்சர் கூறுகிறார். இது மிகவும் குறைவான மதிப்பீடாகும். தற்போது ஓடும் ஐயாயிரத்துக்கு மேற்பட்ட பஸ்கள், 11600 லாரிகளிலிருந்து நாலரை கோடி ரூபாய்க்கு மேல் கிடைக்கும் என்று சொல்லப்படுகிறது.

இரண்டு கோடியாக இருந்தாலும், நாலு கோடியாக இருந்தாலும், கட்டண உயர்வு என்ற உருவில் பாரம் முழுவதும் பொதுமக்களின் மீதுதான் விழும்.

வரி விகிதங்களினால் கட்டணங்கள் உயராது என்று உறுதி கூறப்படுகிறது. ஆனால் இது எவ்வாறு சாத்தியமாகும்? பஸ்களின் அடக்கவிலை பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன் சுமார் ரூ. 25000 ஆக இருந்தது. இப்போது இது ரூ. 47500 அல்லது 50,000 என்று உயர்ந்திருக்கிறது. தவிர, பெட்ரோல் விலையும், டீசல் எண்ணெய் விலையும், டயர், டியூப், இதர உறுப்புக்களின் விலையும் எல்லாமே விகிதப்படி உயர்ந்து தான் இருக்கின்றன. ஒரு நாளைக்குச் சராசரி 160 மைல் ஓடக்கூடிய பஸ்ஸுக்காகப் பிடிக்கும் நடைமுறைச் செலவு ஒரு ஆண்டுக்கு 5000 ரூபாயாக உயர்ந்துள்ளது. வரி உயர்வையும் சேர்த்துக் கொண்டால், ஆண்டொன்றுக்கு ஒரு பஸ்ஸுக்கு ஏறக்குறைய 8000 ரூபாய் செலவாகிறது. ‘இந்தத் தொகையை அனாயாசமாகச் செலுத்தக்கூடிய அளவுக்கு பஸ்கள் லாபம் சம்பாதிக்கின்றன, அதனால் கட்டணங்கள் உயர வழியில்லை’ என்று அரசாங்கம் எண்ணினால் அது மடமையே ஆகும். ஒரு மைலுக்கு இவ்வளவு நயா பைசா மட்டுமே கட்டணம் விதிக்கலாம் என்று உச்ச வரம்பு கட்டி, அதிகார அமுல் நடத்திவிடலாம். ஆனால் அப்படிச் செய்தால் ‘ஷெட்’டில் அடைத்து வைக்க வேண்டிய ‘கிழ’ வண்டிகளையும் சாலையில் ஓட விட்டு விபத்துக்களும் அதிகரிக்கும். கடுமையான வரி முறைகளுக்கும், விபத்துக்களுக்கும் சம்பந்தம் உண்டா என்று ஒருவரும் ஆராய்ச்சி நடத்தியதாகத் தெரியவில்லை. நடத்தினால் ருசிகரமான தகவல்கள் கிடைக்கலாம்.

வரி விதிப்புக்காகக் கூறப்படும் காரணங்கள் விசித்திரமானவை. நீண்ட தூரப் பிரயாணத்தில் ஓடும் பஸ்களுக்கு அதிக வருமானம் கிடைக்கிறதாம். ஆனாலும் குறைந்த தூரம் ஓடுகிற பஸ்கள் செலுத்தும் வரிகளைப் போல அதே அளவுதான் அவைகளும் செலுத்துகின்றனவாம். எனவே பிரயாண தூரத்தை மூன்று பிரிவுகளாகப் பாகுபாடு செய்து வரிவிகிதங்களை அரசாங்கம் ஒவ்வொரு படிவத்திலும் உயர்த்தி அமைத்திருக்கிறது. இந்த வாதம் அவ்வளவு பொருத்தமானதாகத் தோன்றவில்லை. உதாரணமாக, நகரத்தில் பத்து மைல் ஓடும் ஒரு பஸ், பத்து அல்லது பதினைந்து தடவை திரும்பித் திரும்பி ஓடும்போது, நீண்ட தூரம் ஒரே முறை பிரயாணம் செய்யும் ஒரு பஸ் செல்லும் அளவு ஓடி விடுகிறதே?

‘அதிகச் சுமை ஏற்றிச் செல்லும் ஒரு லாரியினால் ரஸ்தாவுக்கு ஏற்படும் தேய்மானம் குறைந்த சுமை ஏற்றிச் செல்லும் லாரிகளால் ஏற்படுவதில்லை. எனவே அதிக சுமை தாங்கிச் செல்லும் லாரிகள் மீது உயர்ந்த விகிதம் வரி போட வேண்டும்’ என்னும் வாதமும் ஒப்புக் கொள்ளக் கூடியது அல்ல. லாரியினால் ரஸ்தாவுக்கு ஏற்படும் சேதம் அதிலுள்ள சுமையை மட்டும் பொறுத்தது அல்ல. அதனுடைய டயர்களின் அகலத்தையும் பொறுத்தது.

லாரி உற்பத்தி செய்யும் மோட்டார்த் தொழிற்சாலைகள் இப்போதெல்லாம் பெரும்பாலும் 12 டன் எடையுள்ள கனரக லாரிகள் தயார் செய்கின்றன. இவற்றின் மீது தனி விகிதங்களின்படி வரி விதிப்பதாகப் பயமுறுத்தப்பட்டிருக்கிறது. அவ்வாறானால் இந்த ஆண்டு பட்ஜெட்டில் துண்டு விழும் ஒன்பது கோடி ரூபாய் முழுவதையுமே மோட்டார் போக்குவரத்து வரி மூலம் வசூலித்து விடக்கூடும். காங்கிரஸ் கட்சியைப் பதவியிலிருத்துவதற்குச் செல்வாக்காலும், பணத்தினாலும் பெருமளவுக்கு உதவியவர்கள் பஸ் போக்குவரத்துச் சொந்தக்காரர்கள் என்பது பகிரங்கமான தேர்தல் ரகசியம். அவர்கள் செய்த உதவிக்கு இப்போது பிரதி உபகாரம் கைமேல் கிடைத்து விட்டது!

ஜய ஜய சங்கர



ரா. கணபதி

வியாசராக வடிவெடுத்த விஷ்ணுவை வணங்குவோம்; விஷ்ணுவின் வடிவினரும், வேதக் கருவூலமும், வசிஷ்டரின் வழித் தோன்றலுமாகிய வியாசரை வணங்குவோம்.
— விஷ்ணு சகஸ்ரநாமம் : பூர்வ பாகம்.

10. துரோகமும் தண்டனையும்

சங்கர பகவத் பாதருக்குப் பதினாறு வயசு நிரம்பும் தருணம்.

ஒரு வயோதிகப் பிராமணர் அவரைத் தேடி வந்தார்.

''பிரம்ம சூத்திரத்துக்கு நீங்கள் பாஷ்யம் எழுதியிருப்பதாகக் கேள்விப் பட்டேன். நான் அந்தப் பிரம்ம சூத்திரத்திலேயே ஆழ்ந்து போனவன். பல வித அர்த்தங்களைத் தெரிந்து கொண்டவன். நம் இருவர் கருத்தும் ஒன்று என்று பார்த்துக் கொள்ளலாமா? எனக்கு ஏற்பட்டுள்ள ஐயங்களை நீங்கள் தீர்த்து வைக்க முடியுமா என்றும் பார்ப்போமா?'' என்று கேட்டார் கிழவர்.

கருத்துக்களைப் பரிமாறிக் கொள்வதில் அறிஞர்களுக்குத் தனிப்பட்ட மகிழ்ச்சி அல்லவா? பகவத் பாதர் சந்தோஷத்தோடு இசைந்தார்.

கிழவனார் பலே கைகாரப் பேர்வழியாக இருந்தார். 'கருத்துப் பரிவர்த்

தனை' 'சந்தேக நிவர்த்தி' என்றெல்லாம் கூறிக் கொண்டாலும் உண்மையில் அவர் வாதப் போரிட வந்திருப்பதாகவே தெரிந்தது.

பிரம்ம சூத்திரத்தின் மூன்றாம் அத்தியாயத்தைப் பற்றி வாதம். உடம்பு மரித்த பின் ஆவி என்ன ஆகிறது என்பதைப் பற்றி விவரிக்கும் 'தந்தர ப்ரகரண'த்தில் கிழவனார் மிகவும் சிக்கலான கேள்விகளைக் கேட்கலானார். சங்கரரும் தமது தருப்பை நுனிபோன்ற தீட்சண்யமான புத்தியால் அவற்றுக்கு அற்புதமாக விடையளித்து வந்தார். கிழவரோ விடுகிற வழியாக இல்லை. இவர் தட்டிக்குள் புகுந்தால் அவர் கோலத்துக்குள் புகுந்தார். அறிவுக் கடலாகவே தோன்றினார்.

வாதம் ஆரம்பித்து நாட்கள் ஆகிக் கொண்டேயிருக்கின்றன. இன்னமும்



அது முடிகிற வழியாக இல்லை! இது என்ன விந்தை என்று வியந்தார் பத்மபாதர். ஆசானையும், தாத்தாவையும் பார்த்தார். அவருக்குத் திடீரென்று ஸ்புரித்தது. வந்திருக்கும் கிழவர் சாதாரண மனிதர் இல்லை. பிரம்ம சூத்திரத்தை எழுதியவரும், பதினெண் புராணங்களைச் செய்தவரும், மகா பாரதத்தை இயற்றியவரும், வேதங்களைப் பகுத்தவருமாகிய சாட்சாத் வியாச பகவானே அவர் என்று பத்மபாதர் தெரிந்து கொண்டார். எவர் இல்லாவிடில் இந்து மதமே இருக்க முடியாதோ அந்த மகா புருஷரே வந்திருக்கிறார் எனக் கண்டு கொண்டார்.

வியாசர் விஷ்ணுவின் அம்ச பூதமானவர். பத்மபாதரும் அப்படியே! எனவே அவர் உண்மையைத் தெரிந்து கொண்டதில் வியப்பில்லை அல்லவா? தம் குருவான சங்கரர் யார் என்பதும் அவருக்குத் தெரியும். ஹரனும் ஹரியும் நடத்தும் வாதம் என்றால் கேட்பானேன்?

"சங்கரர் பரமசிவனாகிய சங்கரரே. பிராமணரோ வியாசர் என்ற விஷ்ணு. இவர்களுக்கிடையே நடக்கும் விவாதத்தில் கிங்கரனாகிய நான் என்ன செய்ய இருக்கிறது?" என்று ஒரு சுலோகமாகச் சொல்லி அவர்களை வணங்கினார் பத்மபாதர்.

சிஷ்யப் பிள்ளை இப்படிப் பாடிய உடன் சங்கரர் விம்மி விதிர் விதிர்த்துப் போனார்; கிழவரை வணங்கினார். வாதமும் அப்போது முடிந்தாகி விட்டது. கிழவருடைய கேள்விகள் எல்லாவற்றுக்கும் சங்கரர் தக்க விடை கூறியாயிற்று.

வியாசரிடம் பிரார்த்தித்தார் சங்கரர்: "நான் செய்துள்ள பாஷ்யம் தங்கள் இதயத்திலுள்ளதையே அனுசரித்ததானால் தங்கள் உண்மையான வடிவைத் தாங்கள் ஏற்று, ஆசி கூறி அருள வேண்டும்" என்று.

கிழவர் வியாசரானார்.

"இந்தச் சூத்திரத்துக்கு எத்தனை ஆட்சேபணைகள் எழலாம் என்றும் யோசித்து எல்லாவற்றுக்கும் அதிலேயே சமாதானமும் பொதிந்து வைத்திருந்தேன். நீ அவற்றை உள்ளபடியே தெரிந்து கொண்டிருக்கிறாய். மறைந்திருந்த உட்கருத்துக்களை உன் உரையில் மலர்த்தி மணம் வீச வைத்திருக்கிறாய். நானே உகந்த பாஷ்யம் இது என்று உலகு அறியவேண்டும் என்றே உன்னைப் பரிசோதித்தேன்" என்று அகமும் முகமும் மலரக் கூறினார் வியாசராகிய பாதராயணர்.

நம் பெரியோர்கள் ஒரு நூல் செய்யும்போது பூர்வபட்சம் என்ற பெயரில், அதற்கு எழக் கூடிய சகல எதிர்ப்புக்களையும் தாங்களே எதிர்பார்த்துக் கூறி அவைகளுக்கும் சமாதானம் சொல்லி விடுவார்கள். ஆசாரியர் தமது பாஷ்யங்களிலும் தாமே அருளிய பல பிரகரண கிரந்தங்களிலும் எதிர்த்தரப்பு வாதங்களையும் விரிவாக உருவாக்கி அவை யாவற்றையும் தீர்த்து

வைக்கும் சாதுரியத்தை விஷயம் தெரிந்தவர்கள் பெரிதும் கொண்டாடுவார்கள்.

சங்கரர் சொன்னார்: ''பாஷ்யங்கள் செய்தாயிற்று. அவற்றை மக்கள் அறிந்துகொண்டால் வைதிக மதம் தானாகவே புனர் வாழ்வு பெற்று விடும். எனக்கும் பதினாறு வயசு நிரம்பி விட்டது. உலகை விட்டுப் போகலாம் என்று நினைக்கிறேன். ஆமோதிக்க வேணும்.''

வியாசர் அந்த யோசனையை ஏற்க வில்லை. ''உரை எழுதினது போதாது. அதை மக்களிடையே பரப்ப உன்னைத் தவிர வேறு யாராலும் முடியாது. அதோடு பக்தி மார்க்கத்தையும் சீர் செய்ய வேண்டும். பக்தி கிரந்தங்கள் செய்ய வேண்டும். சாதாரண மக்களுக்கு அவைதான் பிரயோஜனப்படும்'' என்று கூறிவிட்டார் வியாச மகரிஷி.

அவருக்கு இன்னொரு உண்மை தெரிந்திருந்தது. முதலில் சங்கரர் எட்டே பிராயம்தான் உலகில் இருக்க எண்ணினார். அந்த வயசு பூர்த்தியாகும்போது முதலை காலைப் பிடித்துக் கொண்டதால் அன்னைக்காக வேறு ஆசிரமம் புகுந்தார். ஆயுசும் இருமடங்காகிப் பதினாறாயிற்று. இப்போது அதுவும் முடியும் தறுவாய். எனவே, வியாசர் சங்கரருக்கு மேலும் பதினாறு ஆண்டு ஆயுள் அளித்தார். பிரம்மாவை வியாசர் வரம் கேட்டதாகவும் சங்கரர் ஈசனேயாகையால் விருப்ப முள்ளவரை இவ்வுலகில் அவர் இருக்கலாம் எனப் பிரம்மன் கூறியதாகவும் சில வரலாறுகள் சொல்லும்.

எப்படியோ, குரு பரம்பரையில் மூத்த ரிஷி புங்கவரின் வார்த்தைக்குக் கட்டுப் பட்டார் ஜகத்குரு. நாடெங்கும் சுற்றி, அத்வைதத்தை நிலைநிறுத்தவும், இதர மதங்களை வாதத்தின் மூலம் நிராகரணம் செய்யவும் இசைந்தார். வியாசர் சங்கரரிடம் பிரியா விடை பெற்றார்.

''வியாசர் தமது பிரம்ம சூத்திரமெனும் நூலில் பல மணிமொழிகளைக் கோத்திருந்தார். பொருள்கிடைக்காததால் வெகுகாலம் வித்வான்கள் அந்த மணிகளின் பயனைப் பெறவில்லை. பகவத் பாதர்தான் பொருளைத் தந்து எல்லோரும் அம்மணிகளை அணிந்து கொள்ளச் செய்தார். அப்போதுதான் வியாஸாசாரியரும் தம்பணியின் பொருளை அடைந்



தார்'' என்று ஒரு சிலேடையான சுலோகமுண்டு.

வியாச பூர்ணிமையை ஒட்டி வரும் 'கல்கி' இதழில் அந்தக் கவிஞர் பெருமானை, ஞானச் செம்மலை, பக்தர் திலகத்தைப் பற்றி எழுத நேர்ந்தது பாக்கியம்.

சீடுகைத் துளைத்துக் கடலைப் புகுத்தியது போல் பெருங் கருத்துக்களைச் சின்னஞ்சிறு சூத்திரங்களில் உள்ளடக்கியது வியாசரின் பிரம்ம சூத்திரம். அதற்கு சங்கரர் பாஷ்யம் செய்தது மட்டுமில்லை. தசோபநிஷத்துக்கள் எனப்படும் ஈச — கேன —கட — பிரச்ன—முண்டக — மாண்டூக்ய— தைத்திரீய — ஐதரேய—சாந்தோக்ய— பிருஹதாரண்யக உபநிஷத்துக்களும் இறுதி தத்துவமாக அத்வைதத்தையே எடுத்துரைக்கின்றன என்பதை விளக்கியும் அவர் உரைகள் எழுதியாகி விட்டது.

தச உபநிஷத்துக்கள், பிரம்ம சூத்திரம், கீதை இவை பிரஸ்தான த்ரயம் எனப்படும். இவற்றை ஆதாரமாகக் கொண்டே விசிஷ்டாத்வைத, த்வைத சம்பிரதாயங்களும் எழுந்தன. அந்தக் கோட்பாடுகளை ஒட்டியும் பிரஸ்தான த்ரயத்துக்குப் பாஷ்யம் உண்டு.

ந்ருஸிம்ம பூர்வதாபனீயம், சுவேதாச்வதரம் என்ற உபநிஷதங்களுக்கும் சங்கரர் பாஷ்யம் செய்ததாகச் சொல்வர்.

மகாபாரதத்தில் பரதத்துவத்தைப் போதிக்கும் மூன்று முக்கிய உபதேசங்கள் உண்டு. ரஜோ குணம் மேலிட்ட வீரனாகிய அர்ஜுனனுக்குச் சாட்சாத் கண்ணபெருமான் கூறியருளிய கீதை, தமோ குணம் மேலோங்கிய திருதராஷ்டிரனுக்கு ஸநத்ஸுஜாதர் போதித்த ஸநத்ஸுஜாதீயம், ஸத்வ குண சம்பன்னனாகிய யுதிஷ்டிரனுக்கு பீஷ்மர் மொழிந்த விஷ்ணு சகஸ்ரநாமம் ஆகியன இவை. இம்மூன்றுக்கும் பகவத் பாதர் உரை எழுதினார். விஷ்ணு சகஸ்ரநாம உரைதான் அவரது முதல் கிரந்தம் என்று சொல்வதுண்டு. இதைப் பற்றி ஒரு கதை வழங்குகிறது.

அக்ஷரங்களின் ஸ்வரூபமாகிய அம்பிகையை முன் வைத்தே தமது பாஷ்யப் பணியைத் தொடங்க எண்ணினார் ஆசாரியர். எனவே லலிதாசகஸ்ரநாமத்

துக்கு முதலில்உரை எழுத உள்ளம் கொண்டார்.

''சகஸ்ரநாம நூலைக் கொண்டு வா'' என்று ஒரு சிஷ்யருக்குப் பணித்தார். அந்தச் சிஷ்யர் விஷ்ணு சகஸ்ரநாமச் சுவடிகளைக் கொணர்ந்து வைத்தார். மாயை, மாயை என்று தாம் விரித்து விளக்கிய தத்துவமாகிய தேவி செய்த மாயையை எண்ணி வியந்தார் சங்கரர். மாயவனாகிய மாலவனின் திருநாமங்களுக்கே உரையும் எழுதினார்.

ஆண்டியான இந்த ஆண்டவனின் செல்வமே அவரது உரைகள்தாம்—அவர் 'பாஷ்ய வித்தக குரு' என்று பாடுகிறார் பத்மபாதர். சங்கரருடைய பாஷ்யங்களில் காணப்படும் சொல்லழகும், பொருளாழமும், அறிவுக் கூர்மையும் உலகெங்குமுள்ள பேரறிஞர்களையும் வியக்க வைக்கின்றன. தெளிவும் ஆழமும்



கொண்ட அவரது நடையை 'பிரஸன்ன கம்பீர'மானதுஎன்பார்கள். அவருடைய பாஷ்யங்களிலேயே அவருக்கு 'நிர்க்குணப் பிரம்ம கவி' என்ற விருதும் ஏற்பட்டுள்ளது. கவி வர்ணிப்பவன். குணங்களே யில்லாத பிரம்மத்தை எப்படி வர்ணிப்பது? அதுவும் கவிதையிலன்றி. உரை நடையில்? அந்தக் காரியத்தைச் சாதித்து விட்டார் சங்கரர்.

தமது திக்விஜயத்தைத் தொடங்கினார் சங்கரர். காசியை விட்டுப்புறப்பட்டார். சத்தியத் தத்துவத்தை, நித்தியத் தத்துவத்தை, உலகறிய வேண்டும் என்பதற்காகக் கால் நோகச் சுற்றுப் பயணம் செய்ய ஆரம்பித்தார். வேதம் தேடும் தன் பாதத்தின் ஸ்பரிசத்தால் இந்நாடு முழுவதையும் பாவனப்படுத்த வேண்டுமென்று பதினாறு பிராயத்து இளம் சிங்கம் கிளம்பிற்று.

கிழக்கு நோக்கிப் பிரயாணம் தொடங்கியது. பிரயாகை என்றும் திரிவேணி என்றும் வழங்கும் புனித ஸ்தலத்துக்கு வந்து சேர்ந்தார்.

கங்கையும், யமுனையும், கண்ணுக்குப் புலனாகாத அந்தர்வாஹினியான சரஸ்வதியும் கலக்கும் இடம் அது. வேணி மாதவனும், சோமேசுவரனும் கருணை பாலிக்கும் திவ்விய க்ஷேத்திரம்.

பிரயாகை முழுதும் ஒரே பேச்சாக இருந்தது, குமாரிலபட்டர் துஷாக்கினி பிரவேசம் பண்ணியிருக்கிறார் என்று.

யார் இந்தக் குமாரிலபட்டர்?

துஷாக்கினிப் பிரவேசம் என்றால் என்ன?

பட்டரைப் பற்றிக் கூற வேண்டியது சற்றுஅதிகம்; எனவே முதலில் துஷாக்கினிப் பிரவேசத்தைப் பற்றித் தெரிந்து கொள்வோம்.

துஷம் என்றால் உமி. உமியை நிறைய சேகரித்து அதற்கு நெருப்பிட்டு, கொஞ்சம் கொஞ்சமாக எரியும் அந்தத் தீயை அவ்வப்போது மூட்டிக் கொண்டு அந்த அக்கினியில் உடலை இட்டுக் கருக்கிக் கொள்வதே துஷாக்கினிப் பிரவேசம். சாவதற்குத்தான் எத்தனை பயங்கரமான வழி? இப்பேர்ப்பட்ட கொடூர மரணத்தை ஏற்றுக் கொண்டிருக்கிறார் குமாரில பட்டர். எதற்காக? குருத் துரோகம் செய்ததற்குத் தண்டனையாக. அவர் எந்தக் குருவை எப்போது துரோகம் செய்தார் என்று அறிந்தால் அவர் கதையும் தெரிந்துவிடும்.

குமாரிலபட்டர் வேதத்தின் ஒரு பிரிவாகிய கர்மகாண்டத்தை மட்டும்

ஆதரிக்கும் பூர்வ மீமாம்சைக் கொள்கையைச் சேர்ந்தவர். இக்கொள்கையின் ஸ்தாபகர் ஜைமினி மகரிஷி. பூர்வ மீமாம்சகர்கள் வேதத்தில் கூறியுள்ள சடங்குகளைத் தவறாமல் செய்வார்கள். ஆனால், உபநிஷதமாகிய அதன் ஞான காண்டத்தை ஒப்புக் கொள்ள மாட்டார்கள். இவர்களைக் கர்மமார்க்கக்காரர்கள் என்று சொல்வது உண்டு.

மீமாம்சகர்களுக்குக் கடவுள் கிடையாது. 'கர்மாவே பயன் அளிக்கும். ஒரு செயலைச்செய்தால் தன்னால் விளைவு நேர்கிறது. இதற்குக் கடவுள் அவசியமல்லவே! கடவுள் என்று ஒருவர் இருந்தால் நன்மையும் தீமையும் ஏன் வந்தன?' என்பது இவர்கள் கட்சி. மனித இனத்தைப் போலவே தேவர்கள் என்று ஓர் இனம் இருப்பதாக அவர்கள் ஒப்புக் கொள்வார்கள். அவர்களுக்கு அவிர்ப்பாகம் அளித்து யாக யக்ஞமும் செய்வார்கள். என்றாலும் பலனளிப்பது யாகம் என்ற கர்மம்தானே ஒழிய தேவர்கள் அல்ல என்பார்கள்.

'தர்ம நியாயமான கர்மங்களைச் செய்ய வேண்டும்; எனவே அநாதியான வேதம் கூறும் கர்மங்களை அநுஷ்டிப்போம். ஆனால் அதன் ஞான காண்டத்தால் — உபநிஷதங்களால் — ஆக வேண்டியது ஒன்றும் இல்லை. ஒரு செயலில் மக்களை ஈடுபடுத்தும் வேத வாக்கியங்கள்தாம் பொருளுடையவை. உபநிஷதத்தில் ஒரு செயலும் கிடையாது. ஆத்மாவைப் பற்றியும் பிரம்மத்தைப் பற்றியும் விசாரிப்பதோடு சரி. உபநிஷதங்களை உபமான ரீதியில் பொருள் கொள்ள வேண்டுமே ஒழிய வாழ் முறையாகக் கடைப்பிடிக்க அதில் ஏதுமில்லை' என்பர் மீமாம்சகர்கள்.

'ஆத்மாக்கள் பல; வேதம் சொல்லும் கடமைகளை விருப்பு வெறுப்பு இல்லாமல் ஆற்றுவதாலேயே வினைப் பயனைக் கழித்துப் பிறப்பற்றவராகலாம்' என்பது அவர்கள் வாதம். ஆத்ம விடுதலை என்றால் என்ன, அந்நிலையில் ஜீவன் என்ன ஆகிறான் என்ற பிரச்னைகளை மீமாம்சை விவாதிக்காது.

வேத மந்திரங்களுக்கு எவ்வாறு பொருள் கொள்ள வேண்டும் என்பதை ஆராய்வது மீமாம்சையின் முக்கியமான நோக்கம். இவ்வாறு அர்த்தம் செய்வதை வைத்தே வேதத்தில் எது அநுஷ்டானத்துக்கு உகந்தது, எது அவசியமில்லாதது என்று அந்த சாஸ்திரம் முடிவு கட்டும்.

வேதம் கூறும் கடவுள் மட்டும் மீமாம்சகர்களுக்குக் கிடையாது. பௌத்தர்களுக்கோ அதில் கண்டுள்ள அநுஷ்டானங்களும் கிடையா. எனவே கர்மாநுஷ்டானங்களை வலியுறுத்திய மீமாம்சகர்களுக்குப் பௌத்தர்கள் முதல் எதிரியாவர்.

பௌத்த மதத்தை நிராகரணம் செய்வதென்றே குமாரிலபட்டர் கங்கணம் கட்டிக் கொண்டார். அவர்களை நன்றாகக் கண்டனம் செய்வதென்றால் அவர்களுடைய கொள்கைகள் யாவற்றையும் அறிந்திருக்க வேண்டும். இதற்காக அவர் ஒரு யுக்தி செய்தார்.

தாமே ஒரு பௌத்தராகி விட்டார். அதாவது அப்படி வேஷம் போட்டார். பிரயாகையிலிருந்த ஒரு பெரிய புத்த விஹாரத்தில் சேர்ந்து அம்மதக் கோட்பாடுகளைக் கற்கலானார்.

உள்ளொன்றும் புறமொன்றுமாக வாழும் அந்த வாழ்க்கை அவரை வறுத்தெடுக்க ஆரம்பித்தது. பௌத்தர்களிடம் வித்தியாப்பியாசம் பெறுகையில் வேதத்தையும், வேத கர்மாக்களையும் அவர்கள் தூஷிப்பதைக் கேட்டுக்கேட்டு மனம் புண்ணாவார் பட்டர். அவர்கள் மீமாம்சகக் கொள்கைகளைப் பலமாகக் கண்டிக்கும் போது அவர் கண்களில் நீர் துளும்பும். ''என்ன அழகான யுக்தியால் மீமாம்சையைக் கண்டிக்கிறீர்கள்! சந்தோஷத்தில் கண்ணீர் முட்டுகிறது!'' என்று கூறிச் சமாளித்துக் கொள்வார்.

எங்கு இருக்க வேண்டியவன் எங்கு வந்து வேஷம் போடும்படியாகிவிட்டது என உள்ளூற வேதனையில் வெதும்பினாலும், எப்படியோ பலகாலம் அந்தப் பௌத்தர்களுடனேயே ஒருவராக உண்டு உறங்கி வந்தார்.

அந்த விஹாரத்தைச் சேர்ந்தவர்களில் சில எத்தர்கள் இருந்தார்கள். நாளாவட்டத்தில் அவர்கள் பட்டரைக் குறித்து, 'ஒரு மாதிரி' தெரிந்து கொண்டார்கள். பாழும் பிராமணன் தங்களை ஏமாற்றி மதக் கோட்பாடு முழுவதையும் கற்றுக் கொண்டு விட்டானே என்று கோபம் கொண்டார்கள். கொஞ்சமாகத் தெரிந்து கொண்டிருந்தால் விஹாரத்தில் வைத்திருப்பது தவறு; இவனோ அதிகமாகத் தெரிந்து கொண்டு விட்டதால் உலகில் வைத்திருப்பதே தவறு என்று தீர்மானித்தார்கள் அந்த அஹிம்சாவாதிகள்.

எனவே அவரை நயவஞ்சகமாக விஹாரத்தின் ஏழாவது மாடத்துக்கு அழைத்துச் சென்றார்கள். அங்கிருந்து ஏதோ வேடிக்கை காட்டுவது போல் விளிம்புக்கு அழைத்துச் சென்று...ஆகா! அப்படியே கீழே தள்ளி விட்டார்கள்.

ஏழாவது மாடியிலிருந்து விழுந்து கொண்டிருக்கிறார் பட்டர். மரண தேவதையின் கரங்கள் தம்மை நெருங்கும் அத்தருணத்திலும் வேதத்தில் அவருக்

குள்ள நம்பிக்கை போகவில்லை: 'வேதங்கள் உண்மையானால் எனக்குத் தீங்கு நேரக் கூடாது' என்று அலறிய படியே விழுகிறார் பட்டர்.

உடலைக் காப்பாற்றிக் கொண்டு ஆக வேண்டியது ஒன்றுமில்லை. இருந்தாலும் தம்மைப் போல் புத்த மதத்தை நன்கறிந்து அவற்றைக் கண்டனம் செய்து, வைதிக கர்மங்களை நிலைநிறுத்த வேறு யாரால் முடியும்? தமது பிரயாசை வீணாகலாகாது என்பதற்காகவேனும் தாம் பிழைத்தாக வேண்டுமே!

பூமியில் வந்து விழுந்தார் குமாரில பட்டர்! ஆச்சரியம்! அவ்வளவு உயரத்திலிருந்து விழுந்தும் அவர் உடல் நொறுங்கிப் போகவில்லை! கை, கால் கூட முறியவில்லை. நன்றாகச் சுவாசித்துக் கொண்டிருக்கிறார்.

ஆனாலும்... இதெல்லாம் அவருக்குத் தெரியவில்லை. ஒரு கண்ணில் மட்டும் உண்டான குத்தல் வலியொன்று தான் அவருக்குத் தெரிந்தது. எப்படியோ அதில் ஒரு கல் பொத்துக் கொண்டு இருக்கிறது.

பிழைத்ததில் அவருக்கு ஆச்சரியமில்லை. வேதத்தில் அவ்வளவு நம்பிக்கை! கண்ணில் ஊனமுண்டானது தான் அவருக்கு அதிசயம்.

'வேதத்தைப் பூரணமாக நம்பியுமா எனக்கு இந்தக் கஷ்டம்?' என்று ஆத்திரத்துடன் எண்ணினார் பட்டர்.

''வேதத்தை நீ பூரணமாக நம்பினாயா? இல்லையே!'' என்றது அசரீரி.

என்ன? அவரா வேதத்தை நம்பவில்லை?

''நீ வேதத்தை நம்பத்தான் செய்தாய்! என்றாலும் பூரணமாக நம்பவில்லை. 'வேதம் உண்மையானால் நான் பிழைக்கவேண்டும்' என்று ஒரு 'ஆனால்' போட்டுக் கொண்டுதானே விழுந்தாய்? வேதம் உண்மை என்பதில் உனக்குச் சிறிது ஐயம் இருந்ததைத்தானே அது காட்டுகிறது? 'வேதம் உண்மையானதால் காப்பாற்றப்படுவேன்' என்று நீ எண்ணவில்லையே! என்றாலும் உனக்கு வேதத்தில் உள்ள நம்பிக்கை பெரிது. அதனால்தான் நீ இந்த மட்டும் உயிர் தப்பியது'' என்றது அசரீரி.

நம் கண்ணால் காண முடியாத தத்துவங்களை உள்ளுணர்ச்சியால் அறிந்து கூறும் வேத ரிஷிகளின் வாக்கைவிட நம்பிக்கைக்கு உகந்தது எதுவுண்டு?

குமாரில பட்டர் மீமாம்சக மதத்தைப் பிரசாரம் செய்யத் தொடங்கினார். பூர்வ மீமாம்சகர்களின் முக்கிய புருஷர்களில் ஒருவரானார் பட்டர். இவர் வலியுறுத்திய கோட்பாடுகள் பாட்ட மதம் என்றே பெயர் பெற்றன. ஏராளமான பௌத்தரை வாதிட்டு வென்றார் பட்டர். தாம் செய்ய வேண்டியதெல்லாம் செய்தாயிற்று என்று கண்டார். இனி உடல் தரித்துப் பயனில்லை; உயிரை விடவேண்டியதுதான் என்று முடிவு செய்தார்.

அவருடைய உள்ளத்தில் ஒரு பெரும் வேதனை! நொந்து கொண்டிருந்தார், வெந்து கொண்டிருந்தார்! பொய் வேஷம் போட்டபோது அந்தப் புத்த குருமார்களை ஏமாற்றினோமே! இது தமக்கு அழகா என்று எண்ணி வருந்தினார். அது குருத்துரோகம் இல்லையா என்று கிலேசப்பட்டார்.

'அந்தப் புத்தவிஹாரத்தைச் சேர்ந்தவர்கள் சென்ற வழி தவறாக இருக்கலாம்; எனினும் தம்மை அவர்களில் ஒருவராகக் கருதி அவர்களில் பலர் காட்டிய பரிவெல்லாம்? அதுகூடவா பொய்? தமக்குப் பிடிக்காத சூழலாயினும் தாம் அதை விரும்புவதாக எண்ணித் தமக்கு உணவும், உடையும், இருக்கையும் அளித்தார்களே, அந்தப் பௌத்தர்கள்! அதையெல்லாம் அநுபவித்துக் கபட நாடகமல்லவா நடித்தோம்? பிறகு உண்ட வீட்டுக்கு இரண்டகமாக அவர்களையே அல்லவா கண்டனம் செய்தோம்! 'கர்மாவே பலன் தரும்' என்று உபதேசிக்கும் தாம் இந்தப் போலிக் கர்மாக்கள் தம்மைத் தொடாது என்று துணிவு பெற்று விட்டோமா?'

பாரெங்கும் புகழ் பெற்றும் பட்டர் தமக்குள் குன்றிப் போனார்; குமுறினார். கடவுள் தத்துவத்தை உணர்ந்திருந்தாலாவது அவனது கருணையை நாடிக் கர்ம வினையைக் கழித்திருப்பார். அந்தப் பாக்கியமும் செய்யாததால் பூர்வ கர்மத்துக்குப் பிரதியாகத் தாமே இப்போது தண்டனை ஏற்கவேண்டுமெனத் தீர்மானித்தார்.

இந்த மன வேக்காடு போக உடலை வேக வைத்தே சாவது என்று முடிவு கட்டினார். பச்சாத்தாபம் இங்கு உண்மைத் தாபமாகவே ஆயிற்று.

தன்னால் உலகுக்கு ஒரு காரியம் ஆக வேண்டுமென்பதற்காக முன்பு விஹாரத்திலிருந்து விழும் போது உயிர்ப் பிச்சை கேட்டவர் இப்போது தாமாகவே உடலை மிகமிகத் துன்புறுத்திப் பிராணனை விடுவது என்று நிச்சயித்தார். அதன்படியே தான் அவர் உமிக் காந்தல் தீயில் இறங்கியதும்.

அவரைக் காண ஓடோடி வந்தார் சங்கரர்.

(தொடரும்)


'ஜய ஜய சங்கர' தொடரில் சென்ற இதழ் 12–ம் பக்கத்தில் முதல் பத்தி நான்காம் பாராவில் 'அயனும் காணமுடியாத இறைவனின் திருமுடி' 'திருமாலும் காண இயலாத சங்கரனின் அடிகள்' என்று திருத்திப் படிக்கவும்.

சுதந்திரம் வந்தது! அமைதி வரவேண்டும்

பிரஞ்சுக்காரர்களின் ஆதிக்கத்தின் கீழ் சுதந்திரமிழந்து வாழ்ந்து வந்த அல்ஜீரியாப் பிரதேசம் ஏழரை ஆண்டு நடத்திய கடுமையான போராட்டத்தின் விளைவாக இப்போது சுதந்திரம் அடைந்து விட்டது. போராட்ட காலத்தில் அல்ஜீரிய மக்கள் புரிந்த வீர தீரச் செயல்களும், காட்டிய ஒற்றுமை உணர்ச்சியும், இதர அராபிய நாடுகள் அல்ஜீரிய மக்களின் கோரிக்கைகளுக்கு அளித்த ஆதரவும், பிரான்ஸின் தலைமைப் பீடத்திலுள்ள ஜெனரல் டிகால் காட்டிய ராஜ தந்திர அறிவும் தாராள மனப்பான்மையும் ஒருங்கே சேர்ந்து, திருப்திகரமான இந்த முடிவுக்கு வகை செய்தன. விரிவான ஒரு சாம்ராஜ்யத்தைச் சிதைக்க எந்த அரசாங்கமும் சுலபமாகச் சம்மதிக்காது. இந்தியாவுக்குச் சுதந்திரம் வழங்க மறுத்த வின்ஸ்டன் சர்ச்சில், பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தைக் குலைத்த பிரதம மந்திரி என்ற இழிச் சொல்லை ஏற்கத் தாம் தயாராக இல்லை என்று சொன்னது நமக்குத் தெரியும். அதே நிலைமையில் தான் பிரான்ஸின் தலைவர் டிகாலும் இருந்தார். ஆனால் அவருடைய ராஜதந்திரம் முடிவில் வெற்றி பெற்றது. சுதந்திரம் பெற்ற அல்ஜீரிய மக்களுக்கு நமது வாழ்த்துக் களைக் கூறுகிறோம்.

அல்ஜீரியா பிரதேசம் ஆப்பிரிக்காவின் வட கோடியிலுள்ளது. மத்திய தரைக் கடலை வடக்கு எல்லையாகக் கொண்டு 650 மைல் நீளத்துக்குப் பரவியுள்ளது. கிழக்கு எல்லையாக டுனீஷியா என்ற நாடும், மேற்கே மொராக்கோ என்ற தேசமும் எல்லைகளாக உள்ளன. தெற்கே ஸஹாரா பாலைவனம் கண்ணுக்கு எட்டிய தூரம் வியாபித்திருப்பதால், நாட்டின் வளமும், ஜனத்தொகையும் பெரும்பாலும் வடக்குப் பாதியில் தான் குவிந்துள்ளன. தலைநகரமான ஆல்ஜியர்ஸ் உள்பட, முக்கியமான நகரங்கள் எல்லாமே, மத்திய தரைக் கடல் ஓரத்தில்தான் அமைந்திருக்கின்றன. எட்டு லட்சம் சதுர மைல் பரப்புள்ள பிரதேசமானாலும், ஜனத்தொகை மிகக் குறைவு. நூறு லட்சம் பேர்களே இங்கே யிருக்கின்றனர். பிரான்ஸின் காலனியாகச் சென்ற 132 ஆண்டுகளாகத் தொடர்பு கொண்டிருந்தமையால் சுமார் பத்து லட்சம் பிரஞ்சுக்காரர்கள் இங்கே உள்ளனர். மற்றவர்கள் அராபியர்கள்; இஸ்லாமியக் கொள்கையைப் பின்பற்றுபவர்கள்.

கோதுமை, பார்லி, புகையிலை போன்ற விவசாயப் பண்டங்களும், பழ வகைகளும் இங்கு ஏராளமாக விளைகின்றன. இவைதான் இந்நாட்டின் முக்கியமான ஏற்றுமதிப் பண்டங்களாகும். வாழ்க்கைக்குத் தேவைப்படும் முக்கிய பொருள்களாகிய ஜவுளி வகைகள், காப்பி, சர்க்கரை, தேயிலை முதலியனவும், தொழிற்சாலைகளுக்குத் தேவையான யந்திரச் சாமான்களும், நிலக்கரி, இரும்பு, எஃகு, பெட்ரோலியம் போன்ற பொருள்களும் இறக்குமதி செய்யப்பட்டுத் தான் கிடைக்கின்றன. வர்த்தகம், பொருளாதாரம் இவ்விரண்டிலும் காலனி முறை ஆட்சியின் இதர இடங்களில் காணப்படுவது போலவே, தாய்நாட்டுடன் தொடர்பு அதிகம். பிரஞ்சுக்காரர்களின் ஆள் பலம் மிகுதியா யிருந்ததுடன், அதிகார ஆட்சி பலமும் இங்கே வேரூன்றிக் கிடந்தது.



அல்ஜீரிய தேசிய விடுதலை இயக்கமே இந்த அதிகார பலத்தின் கொடுங்கோன்மையினால்தான் எழுந்தது. பிரஞ்சு ஆட்சி ஒழிய வேண்டும், பிரஞ்சு ராணுவம் நாட்டை விட்டு வெளியேற வேண்டும் என்ற உணர்ச்சி பல ஆண்டுகளுக்கு முன்னரே ஆரம்பித்தது. அல்ஜீரிய தேசிய விடுதலை முன்னணி இந்த இயக்கத்துக்குத் தலைமை தாங்கிப் போராட்டத்தை நடத்தியது. ஆரம்ப காலங்களில் சட்ட பூர்வமான ரீதியில் தான் முயற்சிகள் எடுக்கப்பட்டன. 1957-ம் ஆண்டில் ஐ. நா. பொதுச் சபையில் கூட அராபிய ஆசிய நாடுகளின் பிரேரணையின் பேரில் அல்ஜீரிய சுதந்திரப் பிரச்னை சமாதான முறையில்தான் விவாதிக்கப்பட்டது.

ஐ. நா. மூலம் ஒரு பிரச்னைக்குத் தீர்வு காண வேண்டுமானால் அசாதாரணப் பொறுமையும் மற்ற நாடுகளின் பக்க பலமும் வேண்டும். — ஆனால் அல்ஜீரிய அராபியர்களாகட்டும், பிரஞ்சு அதிகார வர்க்கத்தினராகட்டும், சாத்வீக வாதிகளோ, அஹிம்சாவாதிகளோ அல்ல. தங்களுடைய பலத்திலே நம்பிக்கை உடையவர்கள். தேசியவாதிகளுக்கும், அதிகார ராணுவ பலத்திற்கு மிடையே மோதல்கள் ஏற்பட்ட துப்பாக்கிப் பிரயோகம், கொலை, கலகம், பலாத்காரம், வெடி குண்டு வைத்தல்,—இவை யெல்லாம் சர்வ சகஜமான சம்பவங்களாயின. விடுதலை இயக்கத்தின் வேகத்தையும் அடக்குமுறையின் அகம்பாவத்தையும் ஒட்டி இந்த மோதலின் பயங்கரம் வலுத்துக் கொண்டே வந்தது.

இவ்வாறு சுமார் ஏழரை ஆண்டுகள் போராட்டம் நடந்தது. இரு தரப்பிலும் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை லட்சக்கணக்கானது. கலகத்தில் பங்கு கொண்டவர்கள் மட்டுமின்றிப் பலரும் பிரஞ்சுத் துப்பாக்கிகளுக்கு இலக்காகி உயிர் துறக்க வேண்டியிருந்தது. கடைசியில் ஒருவழியாக அல்ஜீரியாவைப் பிடித்த சனியனும் விட்டது! போராட்டம் முடிவு பெற்றது. அல்ஜீரியாவுக்குச் சுதந்திரம் கிடைத்து விட்டது. ஆனால் இப்போது புது சோதனைகளும் தொடங்கி விட்டன. பிரதமர் யூஸுப் கெத்தாவின் கோஷ்டிக்கும், உப பிரதமர் பென்பெல்லா கோஷ்டிக்கு மிடையே கருத்து வேற்றுமை வலுவாக இருப்பதால் உள்நாட்டுக் கலகம் விளையுமோ என்ற அச்சம் ஒருபுறம்; பிரஞ்சுத் தொழிலதிபர்களும், உத்தியோகஸ்தர்களும், தொழிலாளிகளும், திறமை வாய்ந்த நிர்வாகஸ்தர்களும், கலகத்துக்குப் பயந்து நாட்டை விட்டு ஓடி விட்டதனால், ஆக்க வேலைகளுக்கு அனுபவமுள்ள ஆட்கள் கிடைக்காமல் வேலை தடைப்படுமோ என்ற கவலை ஒரு புறம்; ஓடிப் போன பிரஞ்சுக்காரர்கள், 'கல்லுளிமங்கன் போன வழி, காடு மேடெல்லாம் தவிடுபொடி' என்பதுபோல அல்ஜீரியாவில் செய்துள்ள நாசவேலைகள் ஒருபக்கம்; பிரஞ்சு ராணுவத்தினர் சிலர் இன்னமும் உள்நாட்டிலேயே தங்கிக் கலகங்கள் மூட்டி, மெல்ல மெல்ல, பிரஞ்சுக்காரர்களுக்கு மறுபடியும் நுழைய இடம் உண்டாக்கிக் கொடுத்து விடுவார்களோ என்ற பயம் ஒரு பக்கம்; எல்லாவற்றுக்கும் மேலாக, வல்லரசுக் கோஷ்டிகளுக்குள்ள பலப் போட்டிக்கும் பிளவுகளுக்கும், புது நாடாகிய அல்ஜீரியா ஒரு சோதனைக் களமாக ஆகாது பார்த்துக் கொள்ள வேண்டும்—இவை அனைத்தையும் சமாளித்து முன்னேற வேண்டிய பொறுப்பு புது அல்ஜீரிய சர்க்கார் மீது சுமந்துள்ளது. ஆக்கத்திறனும் ஊக்கமுமுள்ள அல்ஜீரிய மக்கள் இந்த இடுக்கண்களுக்கு ஈடு கொடுத்து, விடுதலை வாழ்வைப் பெருமையுடன் அநுபவிப்பார்களாக.

வடபழனி ஆண்டவர் கோடி அர்ச்சனை

அருணகிரியார் தென்பழனியாண்டவனைப் பாடும்போது 'சததளும் பல கோலாகல பூஜையும்' பற்றிக் கூறினார். அந்தத் தென் பழனியாண்டவனே சென்னை மாம்பதியை வடபழனியாக்கி அருள்பாலிக்கும்போது இங்கு சததளும் பல கோலாகல பூஜையும் செழிப்பதற்குக் கேட்கவா வேண்டும்? வடபழனியாண்டவனுக்குச் சென்ற டிசம்பர் 7-ந் தேதியிலிருந்து ஆனந்தமாகக் கோடி அர்ச்சனை நடந்து வருகிறது. இது வரையில் நாற்பது லட்சம் அர்ச்சனைகள் பூர்த்தியாகியிருக்கின்றன. அன்பர் யாவரும் ஒரு சகஸ்ரநாம அர்ச்சனைக்கு ரூ. 10 விதம் தந்து இந்தக் கோடி அர்ச்சனையைப் பூர்த்தி செய்து தர வேண்டும் என்று மீண்டும் வேண்டிக் கொள்கிறோம். பணம் செலுத்திப் பதிவு செய்து கொள்பவர்களுக்கு அவர்கள் பெயரில் அர்ச்சனை நடைபெறும் கிழமையும், நேரமும் குறிப்பிட்டு முன்னதாகத் தகவல் கொடுக்கப்படும். வெளியூர் அன்பர்களுக்குத் தபால் மூலம் பிரசாதம் அனுப்பி வைக்கப்படும்.

தொகை அனுப்ப வேண்டிய முகவரி: பொருளாளர், கோடி அர்ச்சனைக் குழு. 4, வெல்டர்ஸ் தெரு, மவுண்டுரோடு போஸ்டு, சென்னை—2.

சிந்தனை மேடை

அரவிந்தன்

6. பொதுக்கூட்டங்கள்

பொதுக் கூட்டங்களும், சொற்பொழிவுகளும், இப்போது ஏராளமாக நடக்கிற வேகத்தைப் பார்த்தால் எதிர் காலத்திலே வேறொரு விநோதமான சூழ்நிலை ஏற்பட்டு விடுமோ என்று கூடப் பயப்படுவதற்கு இடமிருக்கிறது.

பேச்சைக் கேட்கிறவர்கள் பலராகவும், நிகழ்த்துகிறவர்கள் சிலராகவுமுள்ள இன்றைய சூழ்நிலை மாறி உலகத்தில் பிரசங்கம் செய்கிறவர்கள் மட்டுமே பெருகி, பிரசங்கம் கேட்கிறவர்கள் எல்லாருமே அழிந்துப் போய்விட்டால் என்ன ஆகும் என்று வேடிக்கையாக ஆராய்ந்து பார்க்கலாமே!

இன்னார் இறை வணக்கம் பாடுவார். இன்னார் தலைமை வகிப்பார். இன்னார் சொற்பொழிவாற்றுவார் என்று இப்போது நிகழ்ச்சி நிரல் அச்சிடுகிறாற் போல எதிர்காலத்தில் இன்னின்னார் மட்டும் கடைசி வரையிருந்து சொற்பொழிவுகளைக் கேட்பதற்கு இசைந்துள்ளார்கள் — என்று வேறு விதமாக நிகழ்ச்சி நிரல் அச்சிடுவதற்கும் நேரலாம். கேட்டு அநுபவிக்கிறவர்கள் அதிகமாகவும், பேசுகிறவர்கள் குறைவாகவும் இருந்த காலத்தில் பேச்சாளர் பெயரை மட்டும் நிகழ்ச்சி நிரலில் அச்சிட்டது பொருத்தமாயிருந்தது. கேட்கிறவர்கள், அல்லது கேட்கத் தயாராயிருக்கிறவர்கள், மிகமிகக் குறைவாகிப் போய்ப் பேசுகிறவர்கள் தொகை அதிகமாகி விடும் காலத்தில் நிகழ்ச்சிநிரலிலே கேட்கிறவர்கள் பெயரை மட்டும் அச்சிடுவதுதான் பொருத்தமாயிருக்கும். இப்போது இருக்கிற சூழ்நிலையைப் பார்த்தால் அப்படியும் ஒரு காலம் வரும் போலத் தான் தோன்றுகிறது. தினசரிப் பத்திரிகைகளில் ஏதாவது ஒரு பக்கத்தில் ஏதாவது ஒரு மூலையில் 'இன்றைய சொற்பொழிவு நிகழ்ச்சிகள்' என்று சிறிய எழுத்துக்களில் மங்கலாக அச்சிடுவதற்குப் பதில் இன்றைய சொற்பொழிவு நிகழ்ச்சிகளை மட்டும் அச்சிட்டாலும் அதுவே ஒரு முழுப் பத்திரிகையை நிரப்பி விடும் என்பது போல் இருக்கிறது சூழ்நிலை. அவ்வளவு அதிகமான கூட்டங்கள் நாள்தோறும் நடைபெறுகின்றன.

குதிரைப் பந்தயத்துக்கு 'ரேஸ் டிப்ஸ்' வெளியீடுகள் மாதிரி சொற்பொழிவுகளுக்கும் தனித் தனி வெளியீடுகள் வரலாம். 'இன்ன குதிரை வெற்றிபெறும். இன்ன குதிரை வெற்றிபெறாது என்று பந்தய முடிவுகளைப் பற்றி ஜோஸ்யம் கூறுவதைப் போல இன்றைய தினம் பேச்சில் இன்னார் வெற்றி பெறுவார்—இன்னார் வெற்றி பெற மாட்டார் — என்று சொற்பொழிவுக் குதிரைகளுக்கு (வேகமாகப் பேசும் ஆவேசப் பேச்சாளர்களுக்கு இந்தப் பெயர் மிக மிகப் பொருந்தும்) ஜோஸ்யம் கூறும் வெளியீடுகளும் வரலாம்.

கூட்டம் பலவிதம்

இந்த நாட்களில் பொதுக்கூட்டங்கள் பலவகையாக நடைபெறுகின்றன. இலக்கியக் கூட்டம், அரசியல் கூட்டம், பாராட்டுக் கூட்டம், கண்டனக் கூட்டம், அநுதாபக் கூட்டம் என்று பேர்கள் தாம் வேறு வேறாக இருக்கின்றன. எல்லாக் கூட்டத்துக்கும் பேசுபவர்கள் உண்டு என்பது மட்டும் சர்வ நிச்சயம். கேட்பவர்கள்?... இந்த இரண்டாவது தேவையைப் பற்றி மட்டும் நிச்சயம் சொல்ல முடியாது. ஏனென்றால் பேசுகிறவர்களை விடக் கேட்கிறவர்களுக்குச் சுதந்திரம் அதிகம். பேசுகிறவர்கள் கூட்டத்துக்குக் கண்டிப்பாக வந்துதான் ஆக வேண்டும். கேட்கிறவர்கள் அப்படி இல்லை. ஒரு கூட்டத்துக்கு ஆர்வத்தோடு வந்து கேட்பதில் அவர்களுக்கு எத்தனை சுதந்திரம் உண்டோ, அத்தனை சுதந்திரம் வந்து கேட்காமல் புறக்கணித்து விடுவதிலும் உண்டு. மேடைச் சொற்பொழிவு என்பது கடைவீதியைப் போன்றது. 'எல்லாக் கடைக்காரர்களும் தங்களிடமுள்ள பொருள்களை விற்பதற்குத் தயாராகத்தான் இருப்பார்கள். ஆனால் எந்தக் கடையில் எதை வாங்கலாம் என்பது வாங்குகிறவர்களைப் பொறுத்தது தான். பிரசங்கம் கேட்கிறவர்கள் எல்லாரும் வாங்குகிறவர்களைப் போன்றவர்கள்.



கூட்டத்திலமர்ந்து கேட்பவர்களின் பக்குவமறிந்து பேசி அவர்களை மகிழ்விக்கிற பேச்சாளன் எந்த இடத்தில் பூத்தாலும் அந்த இடத்தைச் சூழ மணந்து கொண்டிருக்கிற உயர்ந்த சாதிப் பூவைப் போன்றவன். மேடையில் நின்றபடியே மரமரப் பார்த்த வண்ணம் கூட்டத்தைக் கவர்ந்து கொண்டு பேசுகிற பேச்சாளனின் பேச்சு கேட்கிறவர்களின் வாயைக் கட்டி அடக்கி விடும் உயர்ந்த சங்கீதத்தைப் போன்றது. இப்படிப் பேசும் சக்தி வாய்ந்தவர்கள் எவ்வளவு நேரம் பேசினாலும். கேட்பவர்

களுக்கு நேரமே தெரியாது. அப்போதுதான் பேசுவதற்குத் தொடங்கினாற் போன்று அந்தப்பேச்சில் ஒரு கவர்ச்சி முடிவின்றி நிலைத்திருக்கும்.

ஒவ்வொரு கூட்டத்துக்கும் ஒரொரு விதமான சூழ்நிலை உண்டு. அநுதாபக் கூட்டங்களில் தலைமை வகிப்பவர் முதல் பேச்சாளர்கள் வரையில் எவரும் மறந்தும்கூட நகைச்சுவையைப் பயன்படுத்தக் கூடாது. கண்டனக் கூட்டங்களுக்கு ஒருவிதமான கடுமைத் தன்மை வேண்டும். அநுதாபக் கூட்டம், பாராட்டுக் கூட்டம் இரண்டிலுமே மொத்தத்தில் புகழுரைகள் தாம் அதிகமாயிருக்கும். ஆனால் ஒரே ஒரு வேறுபாடு உண்டு. அநுதாபக் கூட்டத்துப் புகழுரைகளில் நகைச்சுவை கலவாது. பாராட்டுக் கூட்டத்துப் புகழுரைகளில் நகைச்சுவையும் கலந்து பேசப்படும். கண்டனக் கூட்டத்திலும் குத்தலான நகைச்சுவை இடம் பெற வழியுண்டு. அரசியல் கூட்டங்களுக்கும் புள்ளி விவரங்களுக்கும் தொடர்பு அதிகம். இலக்கியக் கூட்டங்களுக்கும் மேற்கோள்களுக்கும் நெருக்கம் மிகுதி. கதா காலட்சேபக் கூட்டங்களுக்கு உபகதைகள் உயிர்நாடி போன்றவை. சமையலுக்கு அவசியமாகத் தேவையான உப்பு, அளவுக்கு அதிகமாகி விட்டால் அதுவே சமையலைக் கெடுத்துப் பாழாக்கி விடுவதைப் போலச் சொல்லும் கதையை விஞ்சிக் காடு மண்டினாற் போன்ற அதிக உபகதைகள் முக்கிய நோக்கத்தின் சுவையைக் குறைத்தும் விடலாம்.

பேச்சுக் குழப்பம்

சில கூட்டங்களில் பேச்சாளர்களைச் சகித்துக் கொள்ள முடியாமல் கேட்பவர்கள் குழப்பம் விளைவிப்பதைப் போல் கேட்பவர்கள் புரிந்து கொள்ள வழியின்றிப் பேச்சாளர்களே குழப்பம் விளைவிப்பதும் உண்டு. ஒன்றரை மணி நேரத்துக்குள் நடத்தி முடிக்க வேண்டிய ஒரு கூட்டத்தில் 'வரவேற்புரை' கூற வேண்டியவரே முக்கால் மணி நேரத்தை விழுங்கி விட்டால் தலைமையுரை சொற்பொழிவுகள், நன்றியுரை எல்லாவற்றையும் இட்டமாகச் செய்வதற்கு நேரம் இல்லாமல் போய் விடும். 'வரவேற்புரை' கூறுகிறவர் தம் நீண்ட வரவேற்புரையைக் கூறி முடிப்பதற்குள் தலைவர் தமக்கு அணிவிக்கப்பட்ட முழு நீள ரோஜாப்பூ மாலையை ஒவ்வோர் இதழாக மென்று தின்று விடலாம் போல் அவ்வளவு நேரம் செலவழியும். வரவேற்புரை கூறிக் கொண்டிருக்கும் போதே திரும்பிப் போய் விடலாம் போலக் கூட்டத்தினரை அலுக்கச் செய்து விடுவார்கள் சில 'வரவேர்ப்பு' (இப்படிப்பட்ட வரவேற்பு உரையாளர்கள் பேசப் பேசக் கூட்டத்தினருக்கு வேர்த்துக் கொட்டுமாதலால் இவர்கள் செய்வதை 'வர வேர்ப்பு' என்றே கூறி விடலாம்!) உரையாளர்கள். இதே அலுப்பை நன்றிகூறலை நீட்டி முழக்கும் சிலரும் செய்ய முடியும். நன்றியை அதிகமான வார்த்தைகளால் புகழ்ந்து சொல்வதே அதன் கௌரவத்தைக் குறைப்பதாகும் என்று உணர வேண்டாமோ?



எனக்குத் தெரிந்த ஒரு நிகழ்ச்சியை இங்கே சொல்ல எண்ணுகிறேன். நல்ல தை மாதத்து வெள்ளிக்கிழமை நாளில் மாதர் சங்கக் கூட்டம் ஒன்றில் பேசுவதற்கு ஒரு பேராசிரியரை அழைத்திருந்தார்கள். பேச்சைக் கேட்பதற்குக் கூடியிருந்த அத்தனை பேரும் சுமங்கலிகள். பேராசிரியரோ கொஞ்சம் அசடு. ''சகோதரிகளே! திலகமிழந்து திருமாங்கல்யமுமின்றி மூளிக் கைகளோடு பிச்சைக்கு வரும் அநாதைப் பெண்களைப் பார்க்க நேரும்போது எல்லாம் எனக்கு உங்கள் சங்கத்தின் பணிகள் நினைவுக்கு வரும். நமது நாட்டில் ஒரு காலத்தில் பெண்மைக்கு எவ்வளவு பெருமை இருந்தது?'' என்று பேச்சைத் தொடங்கியபோதே ''சிவ, சிவா! தை வெள்ளிக்கிழமையும் அதுவுமாக விளக்கேற்றுகிற நேரத்தில் இந்த அமங்கலமான பேச்சைக் கேட்பதற்காகவா நாம் இங்கே வந்தோம்?'' என்று கூடியிருப்பவர்கள் கூசும்படி எவ்விதமாகவோ பேச்சைத் தொடங்கினார் அவர். இப்படிச் சந்தர்ப்பத்துக்கும் இடத்துக்கும் பொருந்தாமல் தொடங்கப்படுகிற பேச்சு – வெறுக்கப்படும். நல்ல ஆரம்பம்–கணீரென்ற எடுப்பு–இவை ஒரு சிறந்த சொற்பொழிவுக்கு முதலில் வேண்டிய அடையாளங்கள்.

கூட்டத்தில் தான் பேச வேண்டிய பொருளைப் பற்றி முழுவதும் மறந்து போய் விட்டுத் தனக்கு முன் பேசியவர் தம் பேச்சில் விட்டுப் போயிருந்த பிரச்னைகளை எடுத்துக் கிண்டிக் கிளறி அறுத்துக் கொள்கிற பேச்சாளர்களும் உண்டு. மேலே கூறிய மாதர் சங்கத்தில் அந்தப் பேராசிரியர் தை வெள்ளிக்கிழமையும் அதுவுமாக இப்படிப் பேசிய நிகழ்ச்சிக்குப் பின் அச்சங்கத்தில் ஆண் பிள்ளைகளையே பேசக் கூப்பிடுவதில்லை என்று தீர்மானம் செய்து விட்டார்கள். பின் வேறென்ன செய்வார்கள்?

தடுமாறும் சொற்கள்

பொதுக் கூட்டங்களில் பேசும் போது சில கற்றுக்குட்டிப் பேச்சாளர்கள் என்ன சொல்லிச் சொல்லுகிறோம் என்பதையே உணராமல் தடுமாறிப் போய்ப் பேசுவதுண்டு.

'இத்துடன் நான் பேச எடுத்துக் கொண்ட காலம் முடிந்து விட்டதனால் என் பேச்சை முடித்துக் கொள்கிறேன்' என்று சொல்ல வேண்டிய இடத்தில், 'இத்துடன் என் காலம் முடிந்து விட்டதனால் சொற்பொழிவை முடித்துக் கொள்கிறேன்' என்று சொல்லிக் கூட்டத்தைத் திகைக்க அடித்தார் ஓர் இளைஞர். 'இன்மை லாஸ்ட் டேய்ஸ்' என்று பதவி விலகிப் போகும் ஒருவர் ஆங்கிலத்தில் தொடங்கிய பேச்சை அருகிலிருந்த மொழி பெயர்ப்பாளர், 'எனது இந்த அந்திம நாட்களில்' என்று மொழிபெயர்த்துப் பேசியவர் ஏதோ மரணப் படுக்கையிலிருந்து கொண்டு பேசுவதைப் போன்ற களையை உண்டாக்கினார்.

இன்னொரு கூட்டத்தில் ஊரெல்லாம். இப்படிப் பிரலாபமாக இருக்கிறது என்பதைச் சொல்ல வந்த பேச்சாளர் ஒருவர் வாய் குழறி, 'ஊரெல்லாம் இப்படிப் பிரசவமாக இருக்கிறது' என்று சொல்லிக் கூட்டத்தில் இருந்தவர்கள் 'கொல்'லென்று சிரிக்கும் படி செய்தார். இன்னும் இப்படி எத்தனை எத்தனையோ தடுமாற்றங்கள் நிகழ்வதுண்டு. ஒருவர் காலஞ்சென்றதை யொட்டி நடைபெற்ற அநுதாபக் கூட்டம் ஒன்றில் இப்படி ஒரு குழப்பத்தைப் பேச்சாளர் ஒருவர் உண்டாக்கினர். அந்தப் பாழாய்ப் போன பேச்சாளருக்குக் காலஞ்சென்றுவிட்ட பிரமுகரின் பெயரைக் காட்டிலும் அவருக்காகக் கூட்டிய அநுதாபக் கூட்டத்துக்குத் தலைமை வகித்துக்கொண்டிருந்த பிரமுகரின் பெயர்தான் நன்றாக நினைவு இருந்தது. எனவே குறிப்பிட்ட பேச்சாளர் பேசும் போது, 'இன்றைக்குக் காலம் சென்ற....' என்று தொடங்கி உயிரோடு குத்துக் கல்லாய் நாற்காலியில் வீற்றிருந்த தலைவரின் பெயரைச் சொல்லி விட்டார். அந்தப் பேச்சாளர் இப்படி வாய் குழறி இரண்டு மூன்று முறைகள் சொல்லிய பின்பே கூட்டத்தில் சிலர் சிரித்தும், சிலர் முகத்தைச் சுளித்தும் ஆரவாரப்படுத்திப் பேச்சாளரை எச்சரித்து அவருக்குத் தன் நினைவு வரச் செய்தார்கள்.



வேறு சில பேச்சாளர்கள் ஏதோ ஓர் அர்த்தத்தில் நினைத்து ஏதோ ஓர் அர்த்தத்தில் வாக்கியத்தைக் குழப்பிப் பேசி விடுவார்கள்.

'பயனில சொல்லாமை என்பது ஒரு குற்றம் என்று திருவள்ளுவர் கூறியிருப்பது உங்களுக்கெல்லாம் தெரியும்' என்று ஒருவர் கூட்டத்துப் பேச்சின் அவசரத்தில் சொல்லும் வாக்கியமானது ஒழுங்கான அர்த்தத்தில், அமைய வேண்டுமானால் 'பயனில சொல்லுதல் என்பது ஒரு குற்றம் என்று திருவள்ளுவர் கூறியிருப்பது உங்களுக்கெல்லாம் தெரியும்' என்று இருக்கவேண்டும். உற்று உணர்ந்தால் தான் இந்தப் பிழைகள் எல்லாம் தெரியும்.

எப்போது முடியும்?

குறிப்பிட்ட நேரத்துக்குக் கூட்டம் தொடங்கப்பெறுதபட்சத்தில் 'அது எப்போது தொடங்கும்' என்று பேச்சுக் கேட்க வந்தவர்கள் காத்திருப்பார்கள். ஒவ்வொரு பேச்சாளராய்த் தத்தம் கருத்துக்களைக் கேட்பவருடைய மண்டையில் ஊளைச் செய்தபின் 'கூட்டம் எப்போது முடியும்?' என்று எல்லார் மனத்திலும் ஆவல் எழும். இந்த இரண்டு கேள்விகளில் முதலாவது கேள்வி ஒரு கூட்டத்தின் நுனி. இரண்டாவது கேள்வி ஒரு கூட்டத்தின் மறு நுனி. நாகரிகமடைந்துவிட்ட புதிய சமுதாயத்தின் அன்றாட நிகழ்ச்சிகளில் பொதுக் கூட்டங்களும், சொற்பொழிவுகளும் கூட முக்கியமானவையாகி விட்டன. சொற்பொழிவாளர்கள் என்ன பேசப் போகிறார்கள் என்பதைக் கேட்க நேரமின்றி அடுத்த கூட்டத்துக்கும் பறந்து கொண்டு ஓடும் அவசரத் தலைவர்கள், தலைவர் உரையை முழுவதும் கேட்கிற அளவுக்கு முன் கூட்டியே வர முடியாமல் தாம் பேச வேண்டிய நேரத்துக்கு மட்டுமே ஓடி வர முடிந்த அவசரச் சொற்பொழிவாளர்கள்.

பொதுக் கூட்டங்களின் உறுதியான நற்பலன் கூட்டங்களை ஏற்பாடு செய்கிறவர்கள் தலைவருக்கும் பேச்சாளருக்கும் அணிவது மாலையாகத்தான் இருக்கும் என்பது. உறுதி சொல்ல முடியாத பலன் கூட்டத்தில் இருந்து கேட்பவர்கள் என்ன தருவார்கள் என்பது. கைதட்டல் (தொடர வேணும் என்ற அர்த்தத்திலும் இருக்கலாம்—முடிக்க வேணும் என்ற அர்த்தத்திலும் இருக்கலாம்) கல் தட்டல், விசில், ஆய், ஊய், எது வேண்டுமானாலும் கேட்பவர்களிடமிருந்து பேசுகிறவனுக்குக் கிடைக்கலாம். பேசுவதற்குச் சாமர்த்தியம் இல்லை என்றாலும் கேட்கிறவர்கள் தன்னை என்ன செய்யச் சொல்லிக் கையைத் தட்டுகிறார்கள் என்பதைப் புரிந்து கொள்வதற்காகவாவது ஒரு பேச்சாளனுக்குச் சாமர்த்தியம் வேணும். கைதட்டலின் தொனி நோக்கி அந்த அர்த்தத்தைப் புரிந்து கொள்ளலாம். சிலர் ஆரம்பித்த பேச்சை எப்போது முடிப்பது என்று தெரியாமல் வளர்த்துக்கொண்டே தவித்தும், கேட்பவர்களைத் தவிக்கச் செய்தும் வேதனைப்படுவது போல் மற்றும் சிலர் ஆரம்பித்துவிட்ட பேச்சை எப்படி முடிப்பது என்று தெரியாமல் வளர்த்துக் கொண்டே முடிவு தெரிகிற வரை தடுமாறிப் பேச்சைக் குழப்பிக் கொண்டிருப்பார்கள். சிலர் கூட்டம் முடிகிற சமயத்தில் நன்றியுரை கூறுகிறபோது இப்படி முடிக்கத் தெரியாமல் தவித்துத் தவித்து நன்றியைக் கூறிக் கொண்டே இருப்பதுண்டு. ிக்கல் விழுந்துவிட்ட நூல் கற்றையைப் போல் மறு நுனி தெரியாமல் வழவழவென்று போய்க் கொண்டே இருக்கும் இந்தப் பேச்சு. இப்படி 'முடிவில்லாத' நன்றியை இந்த மனித ஆசாபாசங்கள் நிறைந்த உலகில் அடைவது அரிதென்றாலும்—அது பொருத்தமான இடத்தில் முடியுமென்று தெரிந்தால் அப்படிக் கச்சிதமாக முடிக்கிற நன்றியுரைக்கு நாம் நூறு தரம் நன்றி கூறலாம்.

தத்துவ ரீதியாகச் சொன்னால் இந்த உலகமேகூட ஒரு பெரிய பொதுக் கூட்டம் தான். விதி என்ற மேடையில் இன்பமும், துன்பமும் மாறி மாறிப் பேசுகிற நிகழ்ச்சி நிரலை யார் அமைத்தார்களோ; தெரியவில்லை. சுகதுக்கப் பேச்சாளர்கள் மாறி மாறிப் பேசும் இந்த உலகப் பொதுக் கூட்டத்தில் ஒவ்வொருவரும் பேச்சாளர்தான். இன்னும் நன்கு கூறினால் ஒவ்வொருவரும் கூடக் கேட்பவர் தான். சுகமோ, துக்கமோ, கூடப் பேசுவது குறையப் பேசுவதுதான் அவரவர் பாக்கியத்தைப் பொறுத்த விஷயம்.

பாவவிமோசனம்

நா. அனந்தகிருஷ்ணன்



இரவு போய் விட்டது. பகல் இன்னும் வரவில்லை. வைகறைப் பொழுது. வானத்தை அண்ணாந்து பார்த்தால் முழுதும் கருப்பாகவும் இல்லை. வெள்ளையாகவும் இல்லை. அங்கங்கே பொத்தல் ஏற்பட்ட மாதிரி வெண்மை. மற்றப்படி கரும் போர்வை. நட்சத்திரங்கள் அங்கொன்றும் இங்கொன்றுமாகச் சிதறிக் கிடந்தன. பனியைப் பெய்ததனாலோ என்னவோ அவற்றைப் பார்க்கும்போது கரைந்து போகிற ஐஸ்கிரீம் மாதிரி தோற்றம் அளித்தது.

காற்று குளிர்ந்து வீசியது. மின்சார ரயில் ஓட ஆரம்பித்து விட்ட சத்தம் கேட்டது. ஜன்னல் திரை படபடத்தது. ரெவரண்ட் ஞானசாமி எழுந்தார். அவருக்கு உறக்கம் கலைந்துவிட்டது. வழக்கப்படி இன்னும் ஒரு மணி நேரம் உறக்கம் உண்டு அவருக்கு. ஆனால் ஏனோ தெரியவில்லை. இப்படித் திடீரென்று விழிப்பு...

படுக்கையில் இருந்தபடியே அவர் கண்களை மூடித் தியானித்தார். தம்மையறியாமல் அவர் வாய் முணுமுணுத்தது. தாவீதின் ஸ்தோத்திரம் அது;

'என்னில் பரிசுத்தமான மனசை உண்டாக்கும் கடவுளே! என்னில் நேர்மையான ஆவியைப் புதுப்பியும். உம்முடைய சந்நிதானத்திலிருந்து ஒதுக்கித் தள்ளாதேயும். உம்முடைய பரிசுத்த ஆவியை என்னிலிருந்து எடுத்து விடாதேயும். உம்மால் விமோசனம் செய்விக்கப்படுகிற சந்தோஷத்தில் என்னைச் சேர்த்துக் கொள்ளும்....'

தோத்திரத்தின் கடைசிப் பகுதியைச் சொல்லும்போது அவரை அறியாமலே உரத்த குரலில் சொன்னார்.

இருட்டுக்கே உரிய அமைதியைக் கிழித்துக் கொண்டு ஞானசாமியின் குரல் வெளியில் கேட்டது. அப்பொழுது தான் உறக்கம் கலைந்த தோட்டக்காரன் அந்தோணி திடுக்கிட்டுத் தன்னையறியாமல் குரிசில் அடையாளம் செய்து கொண்டான்.

ஞானசாமி ஸ்விச்சை அழுத்தியதும் அந்த அறை முழுதும் வெளிச்சம் பரவியது. அவர் கண்ணில் முதன் முதலாகப் பட்டது ஏசுநாதரின் படம் தான். அதைப் பார்த்ததும் ஒரு முறை குரிசில் அடையாளம் செய்து கொண்டார். பின் படுக்கையை விட்டு எழுந்து செருப்பை அணிந்து கொண்டு அந்த அறையை விட்டு வெளியேறப் போனவர் ஏனோ சட்டென நின்றார். அந்த ஏசுநாதர் படத்தருகே வந்தார். அந்தப் படத்தையே பார்த்துக் கொண்டிருந்தார்.

தேவகுமாரனான ஏசுவின் ஓவியம் அழகாகத் தீட்டப்பட்டிருந்தது. முள்முடி. பின்பக்கம் நிழல் போலக் குரிசில். கருணை வடியும் கண்கள். அஞ்சேல் என்ற அபய முத்திரையுடன் கூடிய கைகள். உண்மையாகவே அழகு மிக்க ஓவியம். ஞானசாமி அதையே வெகு நேரம் பார்த்துக் கொண்டிருந்தார்...அவர் கண்களில் மெல்ல நீர் திரையிட்டது. 'ஏசு... ஏசு....ஏசு...' என்று அவர் குழந்தை மாதிரித் தேம்பித் தேம்பிக் கூறினார். பின், என்ன தோன்றிற்றோ அந்த ஓவியத்தைக் கழற்றி மார்போடு அணைத்துக் கொண்டு தம் இதழ்களைப் பதித்தார். தம் நினைவு வந்தவராக அந்த ஓவியத்தை அதன் இடத்தில் மாட்டப் போனார். அவர் கரங்கள் தம்மையறியாமல் நடுங்கின. படார் — அந்த ஓவியம் கைதவறிக் கீழே விழுந்து கண்ணாடி உடைந்து சுக்கு நூறாகி விட்டது. ஞானசாமி திடுக்கிட்டார். அவர் இதை எதிர்பார்க்கவில்லை. 'பிதாவே, என்னை மன்னியும்' என்று முணு

முணுத்தார். பின் தோட்டத்துப் பக்க ஜன்னலைத் திறந்து 'அந்தோனி....' என்று அழைத்தார். சில நிமிஷங்கள் அறையின் குறுக்கும் நெடுக்குமாக நடந்தார். அந்தோனி வந்து சேர்ந்தான். 'குட்மார்னிங்!' ஞானச்சாமி திரும்பி வணக்கம் செலுத்தினார். 'இதை வாரிக் கொண்டு போடு' என்று கண்ணாடித் துண்டுகளைப் பார்த்துக் கையைக் காட்டினார். அந்தோனி அவற்றைத் திரட்ட ஆரம்பித்த சில விநாடிகளுக்கெல்லாம் ஞானச்சாமி அவ்வறையை விட்டு வெளியேறினார்.

காலைக் கடன்களை முடித்துக் கொண்டு வந்து மெழுகுவத்தியை ஏற்றி வைத்துவிட்டுப் பைபிளைப் பிரித்துப் படிக்க ஆரம்பித்தார். தூய யோவானின் சுவிசேஷம். அதில் ஞானச்சாமிக்குத் தனியான ஈடுபாடு உண்டு. அவர் கண்கள் புத்தகத்தின் மீது பதிந்தன; அவர் மனம் பதியவில்லை. ஏன் என்று புரியவில்லை அவருக்கு. ஏசுவின் படம் உடைந்துபோனதா? ஊஹூம்.... அல்ல, அல்ல. வேறு ஏதோ ஒன்று... அதுதான் அவருடைய உறக்கத்தைக் கலைத்தது. அவருடைய செய்கை



களில் அவருக்கும் புரியாத மயக்கத்தை உண்டாக்கியது. அது....அது... என்ன.....?

ஞானச்சாமி புத்தகத்தை மூடி வைத்தார். இதற்குள் நன்றாக விடிந்து விட்டது. செருப்பை மாட்டிக் கொண்டு வெளிக் கிளம்பினார் அவர். மெல்ல அடி மேல் அடி வைத்துத் தோட்டத்தைத் தாண்டி வேலிக்கு வெளியே வந்து சேர்ந்தார் அவர்.

கேட்டுக்கு வெளியே நின்றுகொண்டு ஆகாயத்தைப் பார்த்தார் அவர். மெல்ல மெல்ல வெளிறிக் கொண்டிருந்தது. ஞானச்சாமி அந்தச் சூனியத்தில் எதையோ கண்டுவிட்டார். அவர் மெல்ல விழிப்பெய்தினார். அவருக்கு மூச்சுத் திணறியது. இதேமாதிரி ஒரு தடவை இத்தனை அதிகாலையில் ஆகாயத்தை அண்ணாந்து பார்த்துக்கொண்டு தாம் நின்றதாக அவருக்குத் தோன்றியது. அழுக்கடைந்த டிராயரும் கிழிந்த பெரிய சட்டையும் போட்டுக் கொண்டு... இதே போல் ஒரு கேட்டுக்குப் பக்கத்தில்.....

ஞானச்சாமிக்கு மயக்கம் வரும் போல் இருந்தது. சட்டெனக் கேட்டைப் பிடித்துக் கொண்டார். அவரால் ஓரடி கூட எடுத்து வைக்க முடியாது. அந்தோணியைக் கூப்பிடவும் நா எழவில்லை. சில விநாடிகள் அப்படியே கேட்டில் சாய்ந்து கொண்டு நின்றார். திரும்பவும் தலை நிமிர்ந்து ஆகாயத்தைப் பார்த்தார். ஆமாம்! பயந்து கொண்டே பார்த்தார். திரும்பவும் மயக்கம் வருகிறாற் போல் இருந்தது.

ஞானச்சாமி தம் நினைவுகளை நசுக்க முயன்றார். முடியவில்லை. அப்படியே அந்தக் கேட்டில் சாய்ந்தபடியே அவர் நின்ற போது அலை வரிசையாக வந்தன....

ஞானச்சாமி ஞானச்சாமி யாவதற்கு முன்பு பரதனாக இருந்தார்; அல்லது இருந்தான். அதாவது சின்ன வயது. பதின்மூன்று. எட்டாம் வகுப்புத் தாண்டி ஒன்பதாம் வகுப்புக்கு வந்ததும் பரதனுடைய அப்பா புன்னியான் சொல்லி விட்டான்: 'நீ படிச்சது போதும்லே. நீ களனிக்குப் போய் வேலை வெட்டி செய்யணும்லே' என்று. பரதன் இதை எதிர்பார்க்கவில்லை. அவனுடைய உலகமே சரித்திரம் பூகோளம், ஹைஹயஸ்ட் மார்க், பிராகிரஸ்-ரிப்போர்ட் இவற்றில்தான் இருந்தது. நல்ல அறிவாளி. எல்லாவற்றிலும் முதல் மார்க். ஆசிரியர்களும் பரதனிடம் அன்போடுதான் இருந்தார்கள். ஆகவே தன் தந்தை தன் படிப்புக்கு முட்டுக்கட்டை போடுவதை வில்லியம்ஸ் வாத்தியாரிடம் சொன்னான் பரதன். வில்லியம்ஸ் அவனுடைய ஆங்கில ஆசிரியர். அவருக்குப் பரதன் மீது தனி அன்பு உண்டு. சில நாட்கள் இரவில் வில்லியம்ஸ் பரதனைத் தம்முடைய வீட்டுக்கு அழைத்துச் சென்று ஆங்கிலம் சொல்லித் தருவார். இரவு வெகு நேரமாகி விடும். பரதன் தனியாகச் செல்லப் பயப்படக் கூடுமாகையால் வாத்தியார் வீட்டிலேயே படுத்து உறங்கி விடுவான். வாத்தியார் வீட்டிலே வேறு யாரும் கிடையாது. வாத்தியார் கலியாணம் ஆகாதவர். ஆகவே வாத்தியார் வீட்டிலே படுத்துக் கொள்வதனாலே யாருக்கும் எந்தவிதமான தொந்தரவும் கிடையாது.

வில்லியம்ஸ் பையனுடைய கதையைக் கேட்டார். அவனுடைய தந்தையைப் பார்த்துப் பேசுவது என்று தீர்மானம் செய்து கொண்டார். அப்படியே பார்க்கவும் செய்தார். ஆனால் புன்னியானோ பிடிவாதமாக இருந்தான் — 'உம்... அவன் படிச்சு என்ன ஆகப் போறது? இம்புட்டுப் படிச்சதே போதும். நாங்களாம் என்ன படிச்சோம்? எங்களுக்கு என்ன கொறஞ்சி போயிட்டுது.' இன்னும் என்ன என்னவோ சொன்னான். வில்லியம்ஸ் வாத்தியாரால் கல்வியின் பயன்களையும் அறியாமையால் விளையும் கேடுகளையும் பற்றி விளக்கிப் புன்னியானை நம்பவைக்க முடியவில்லை. வாத்தியாருக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. இதற்கிடையில் பரதன் ஒரு நாள் வந்து சொன்னான். தன் அப்பன் தன்னை அடித்துத் துன்புறுத்துவதாகவும் பள்ளிக்கூடம் போகக் கூடாது என்று தடுப்பதாகவும் சொன்னான். அப்பொழுது வில்லியம்ஸ் கேட்டார்: "நீ பட்டணம் போறியா? அங்கே போய்ப் படிக்கிறியா?"

பரதன் ஆசையோடு சொன்னான்: "ஆமாட்டும் சார். எங்கே வேணுன்னாலும் போறேன், சார்." வில்லியம்ஸ் சந்தோஷத்துடன் வினவினார். "உங்க அப்பா சம்மதிப்பாரா?"

பரதன் முனு முனுத்தான். "அவர் மாட்டேம்பாரு சார். நான் அவருகிட்டே சொல்லாமலே போயிடறேன் சார்."

வில்லியம்ஸ் கடுகடுப்புடன் சொன்னார். "சை அது தப்பு இல்லே. வீட்டை விட்டு ஓடிப் போறதுதான் நல்ல புள்ளைக்கு அடையாளமோ?"

"பின்னே என்ன சார். ஒரு அப்பா தன் மகனுக்கு வைக்கக் கூடிய சிறந்த செல்வம் கல்வி அப்படின்னு தமிழ் வாத்தியார் சொல்வாரே. எங்க அப்பா அதுக்குச் சம்மதிக்கலேன்னு... நான் என்ன சார் பண்றது?" — பரதன் விக்கி விக்கி அழ ஆரம்பித்தான்.

"சரி அழாதே. உன் இஷ்டப்படியே செய். உம்....பட்டணத்திலே நான் ஒருத்தருக்குக் கடுதாசி தருகிறேன். அவர் ஒரு பள்ளிக்கூடமே நடத்துகிறார். நீ அவங்க வீட்டிலேயே தங்கிப் படிக்கலாம். உம்....அப்பாகிட்டே இல்லேன்னாலும் அம்மாகிட்டேயாவது சொல்லிட்டுப் போ. இன்னைக்குத் திங்கக் கிழமையா. புதன் கிழமை விடியற்காலே ரயிலேறிடு. உம். ரயில் சார்ஜ் எல்லாம் நான் தரேன். அங்கே போய் நல்லா படி...." வில்லியம்ஸ் அவனை வீட்டுக்கு அனுப்பினார்.

பரதன் தன் தாயிடம் தன் கருத்தைப் பக்குவமாகத் தெரிவித்தான். மாரியாத்தாளுக்குத் தன்மகன் படிப்பதிலேதான் விருப்பம். ஆனால் அவன் அத்தனை தூரம் கடந்து போய்ப் படிப்பதா என்று அந்தத் தாய் மனம் வருந்தியது. பரதன் எப்படியோ சம்மதிக்க வைத்து விட்டான்.

புதன் கிழமை காலையிலே பழஞ்சோறு பொதி கட்டிக் கொடுத்து, நெற்றியிலே பாலத்தடி மாடசாமி கோவில் விபூதியையும் இட்டு, மகனை வழியனுப்பினாள் மாரியாத்தா. விடியக் கருக்கலில் நேரே ஸ்டேஷனை அடைந்தான் பரதன். வில்லியம்ஸ் அங்கே தயாராகக் காத்துக் கொண்டிருந்தார். மப்பும் அதுவும் இதுவுமாக ஆள் அடையாளமே தெரியவில்லை. அவன் கையில் டிக்கட்டையும் கொடுத்துப் பத்து ரூபாயையும் தந்தார் அவர். "சாக்கிரதையாகப் போய்ச் சேர். நீ கடுதாசி எழுத வேண்டாம். நான் கடிதம் தந்திருக்கேனே அவரே எழுது வாரு. அப்போ .... வண்டி வந்ததும் ஏறிக்க. நான் இங்கே நின்னு சரிப்படாது. உம். வரட்டா...."— அவர் அவ்விடத்தை விட்டு அகன்றதும் பரதனுடைய நெஞ்சிலே யாரோ பெரிய பாறாங்கல்லைத் தூக்கி வைத்த மாதிரி இருந்தது. 'வீட்டில் அம்மா என்ன செய்கிறாளோ, அழுவாளா? பாவம் அப்பன்....அவனிடம் சொல்லாமல் வந்தது தப்பு. அப்பன் வெகு சீக்கிரமே எழுந்து கழனிக்குப் போய்விட்டான். இப்போ என்ன செய்வது? ஓடிப் போய் அப்பனிடம் சொல்லி விட்டு வந்தால்... அதற்குள் ரயில் வந்து விடும். வரட்டுமே. நாளைக்குப் போகலாம். ஊஹூம். வில்லியம்ஸ் கோபித்துக் கொள்வார். அப்பனும் விட மாட்டான்.'

பரதன் எண்ணப் புழுக்களால் கொட்டப்பட்டுக் கொண்டிருக்கும் பொழுதே ரயில் வந்து விட்டது. மூச்சுக் காட்டாமல் ஏறி உட்கார்ந்து கொண்டான். ரயில் நகர்ந்தது.

இருபத்தைந்து வருஷங்களுக்கு முன்பு இதே மாதிரி ஓர் அதிகாலையில் அந்தச்சிறுவன் பரதன் இதுபோல ஒரு வீட்டுக் கேட்டருகில் நின்றான். அவனுக்குப் பயம். இனந் தெரியாத நிலை. வானத்தையும் பூமியையும் மாறி மாறிப் பார்த்தபடி கேட்டைத் திறக்க வழி தெரியாமல் நின்று கொண்டிருந்தான். என்ன செய்வதென்று தெரியவில்லை. அவன் அழ ஆரம்பித்தான். திடீரென்று அவன் தோள்பட்டையில் யாரோ கை வைத்தாற் போல் இருந்தது. திடுக்கிட்டுத் திரும்பினான். அங்கே தாடியும் மீசையுமாக ஒருவர் நின்று கொண்டிருந்தார். தம் மேலெல்லாம் வெள்ளைத்துணியால் மறைத்துக் கொண்டிருந்தார். பரதனுக்குத் தெரிந்தது. அவர் ஒரு பாதிரி என்று. புன்னகையுடன் அவனைத் தட்டிக் கொடுத்துக் கேட்டை நன்றாகத்திறந்து அவனை மெல்ல உள்ளே நகர்த்திக் கொண்டு வந்தார். "தம்பி! அழலாமா? உம்....எங்கே நான் சொல்வதைத் திருப்பிச் சொல், பார்ப்போம். உம்....சர்வ வல்லமையுள்ள எங்கள் கடவுளே எனக்குத் தைரியத்தையும் நம்பிக்கையையும் தாரும்." பரதன் யந்திரம் போல் முணுமுணுத்தான். சட்டென்று அவன் கண்ணீர் நின்றது. அவனுக்குத் திடீரென்று தைரியமும் நம்பிக்கையும் ஏற்பட்டு விட்டாற் போல் ஓர் உணர்ச்சி. அவன் இலேசாகச் சிரித்தான்.


பாதிரியார் அவனைப் பார்த்தார். "தம்பி, உன் பெயர் பரதன் தானே? வில்லியம்ஸ் எனக்குக் கடிதம் எழுதியிருக்கிறார். உனக்குப் படிக்க விருப்பந்தானே?" என்றார்.

"ஆமாங்க. படிக்கணும்னு ரொம்ப ஆசை!" — பரதன் பட்டென்று சொல்லி விட்டான். அப்புறம் தன்னையறியாமல் வெட்கம் வந்து விட்டது அவனுக்கு.

வில்லியம்ஸ் தன்னிடம் தந்து அனுப்பியிருந்த கடிதத்தை அவரிடம் கொடுத்தான் பரதன். அது ஆங்கிலத்தில் எழுதப்பட்டிருந்தது. "நான் தங்களுக்கு முன்பே எழுதியிருந்த பரதன் இவனே. இவன் விவசாயக் குடும்பம். ஏழைத் தந்தை இவனைப் படிக்கவைக்க விரும்பவில்லை. நல்ல அறிவுள்ள பையன். எனக்கு மிகவும் பிடித்த பையன். இவனை முன்னேறச் செய்யத் தங்களால் இயன்றதைச் செய்யுங்கள். மதமாற்றம் இப்பொழுது அவசியமில்லை — ஏதாவது தகராறுகள் நேரிடலாம். பையன் மேஜரான பிறகு உங்கள் உசிதப்படி செய்யுங்கள்."

பரதன் பாதிரியின் வீட்டிலேயே இருந்து கொண்டு படிக்க ஆரம்பித்தான். பாதிரியாரே அவனுடைய திறமையைக் கண்டு வியந்தார். அவருடைய மகளான ரோஸிக்கும் பரதனை மிகவும் பிடித்துப் போய் விட்டது.

அழகான மீசை. இரண்ட புருவங்கள். அகன்ற நெற்றி - யாரும் சொல்ல மாட்டார்கள், பரதன் பரம்பரை பரம்பரையாகக் கல்வி வாசனையில்லாத குலத்தைச் சேர்ந்தவன் என்று. படித்துப் பட்டமும் பெற்றான்;



இதற்கிடையில் கிராமத்திலே எவ்வளவோ நடந்து விட்டது.

புள்ளியான் கழனியிலே யிருந்து வந்ததும் மகனைக் காணுமல் சத்தம் போட்டது; மாரியாத்தாள் தனக்குத் தெரியவே தெரியாதென்று சாதித்தது; பிள்ளையைப் பற்றின கவலையைக் கொஞ்சங் கொஞ்சமாகப் புள்ளியான் கைவிட்டது. மாரியாத்தாளுக்கு உடம்பு சரியில்லாமல் போய் வில்லியம்ஸ் பரதனுக்குக் கடிதம் எழுதினபோது அவனுக்குச் சர்க்கார் பரீட்சையாக இருந்ததால் அவன் வர முடியாமற் போனது; மாரியாத்தாள் செத்தது.

இந்த நிகழ்ச்சிகளிலுவெல்லாம் உலகம் நின்றுவிடுகிறதா என்ன? பதின்மூன்று வயதுச் சிறுவனுகப் பாதிரியார் வீட்டில் நுழைந்த பரதன் மதமதவென்று வளர்ந்து இருபத்து மூன்று வயதுக் கட்டிளங்காளையாக நின்ற பொழுது மொட்டவிழ்ந்து மலராளுள் ரோஸி. அவள் பாதிரியாரின் தாயில்லாப் பெண். பத்தாண்டாகக் கூட வளர்ந்த பாசம். பருவம் வந்ததும் காதல் என்ற தனிப் பெயர் கொண்டது. ரோஸிக்கு மட்டும் ஆசையில்லையா என்ன? ஆனுல் பரதன் அவிச்வாசி. அதாவது கிறிஸ்துவனல்ல. பாதிரியார் வில்லியம்ஸ் எழுதி யிருந்தபடி பையனுடைய மத மாற்றத்தைப் பற்றிப் பேச்சே எடுக்கவில்லே. வில்லியம்ஸ் இறந்த பிறகும்கூட அவர் அதைக் காப்பாற்றி வந்தார். பதினெட்டு வயதிலிருந்து இரண்டு மூன்று வருஷங்கள் பரதன் ஒரு மாதிரியாக இருந்தான். 'கடவுளாவது? இடவுளாவது? மண்ணுங்கட்டி.....' என்று இந்த ரீதியில் பேசி வந்தான். பாதிரியாருக்குக் கொஞ்சம் கவலேதான், நச்சுப் பாம்பை மார்பிலே போட்டு வளர்த்த மாதிரி ஆகி விடுமோ என்று.

கடைசியிலே இவன் இந்த மதமும் இல்லாமல் அந்த மதமும் இல்லாமல் நாஸ்திகனுகத் தலேயெடுத்து விடுவானே என்று பயம். ஆனுல் கொஞ்ச நாட்களில் சரியாகி விட்டது. ரோஸியைத் தான் கல்யாணம் செய்து கொள்ளப் போவதாகப் பரதன் சொன்னதும் வேறு வழியில்லே; பாதிரியார் கூறி விட்டார்: ''மதம் மாறினுல் தான் திருமணம் செய்து கொள்ளலாம்'' — என்று. பரதன் அப்பொழுது இருந்த நிலேமையிலே எதுவும் செய்யத் தயாராக இருந்தான். மொத்தத்தில் பரதன் ஞானச்சாமியானுன். ரோஸியின் கணவனும் ஆனுன்.

ஞானச்சாமி தன் நினைவு வந்தவராகக் கேட்டை விட்டு மெல்ல அடிமேல் அடிவைத்து வீட்டையடைந்தார். வழக்கமாக ஓர் அரைமணி நேரம் உலாவுவது உண்டு. இன்று அது இல்லே. வந்து தம் அறையில் அமர்ந்தார். கண்களை மூடினுர்.

நான் பரதனு? ஞானச்சாமியா? படிப்புக்காகப் பாதிரியார் வீட்டையடைந்தேன். நான் அப்படி அடையா விட்டால் ஞானச்சாமி ஆகியிருப்பேனு? ஏன் என் கடவுள் அதைத் தடுக்கவில்லே? என் அப்பனுக்கு நல்ல புத்தியை ஏன் அந்தக் கடவுள் கொடுக்கவில்லே? நான் நிசமாகவே ஞானச்சாமி தானு? இல்லே. நான் ஞானச்சாமி இல்லே. ரோஸிக்காக ஞானச்சாமியானேனு? நான் பரதனும் இல்லே. இதோ இருபது வருஷங்களாக, 'கர்த்தரை நம்புங்கள், அவரே நமக்கு விமோசனமளிப்பவர்.' 'செத்தவர்களைப் புதைக்கட்டும். நீங்கள் கர்த்தரிடம் வாருங்கள்' என்று கொள்கைகளைப் பரப்பி வந்த நான் பரதனு? இல்லே, ஞானச்சாமி. பரதன் எப்படி ஞானச்சாமியானுன்? படிக்க வசதி கிடைத்ததனுலா? ரோஸியைக் காதலித்ததனுலா? இல்லே, இல்லே. ''கர்த்தரே! பாபிகளை மன்னிப்பதற்காக நீர் ரத்தம் சிந்தினீர். உம்முடைய ரத்தத்தாலே எங்களுடைய பாபப் புண்களைக் கழுவிச் சுத்தம் செய்கிறீர், கர்த்தரே! என்னே மன்னியும்....'' ஞானச்சாமி தம்மையறியாமல் மண்டியிட்டார். அவர் கண்கள் தற்செயலாகச் சுவரில் தொங்கிக் கொண்டிருந்த ஏக படத்தில் பதிந்தன. கண்ணுடி முழுதும் நீக்கப்பட்டு—, வெறும் சட்டத்துடன் தொங்கிக்கொண்டிருந்தது அது. ''கர்த்தரே! உமக்கும் எனக்கும் இடையில் இப்பொழுது ஒன்றும் இல்லே. உம்மை நான் தெளிவாகக் காண்கிறேன்.'' வாய்விட்டு உரக்கச் சொன்னுர் அவர்.

''உள்ளே வரலாமா?''

ஞானச்சாமி தலே நிமிர்ந்தார். அன்னி நின்று கொண்டிருந்தாள். ''வா குழந்தாய், வா. உள்ளே வா.'' அவள் ஞானச்சாமிக்கு வணக்கம் செலுத்தினுள்.

இரண்டு பேருமே ஒன்றும் பேசவில்லே.

''குழந்தாய்.....!'' ஞானச்சாமியின் குரல் நடுங்கியது.

அன்னி தலே நிமிர்ந்தாள். ''குழந்தாய்! ஏசுவே உனக்குக் கதியென்று நம்புகிறுயா? தாவீது சொன்னுற் போல் வறண்ட பூமியைப்

போன்று உன் ஜீவன் கர்த்தருக்காகத் தாகத் துடனிருக்கிறதா? 'அரச குமாரர்களிடமும் நம்பிக்கை வைக்காமல் தன்னுடைய எஜமான னுகிய கர்த்தரிடம் விசுவாசம் வைத்திருப் பவன் பாக்கியவான்; அவன் சந்தோஷத்தை யடைவான்' என்பதை உணர்கிறாயா?'' — கோவிலில் பிரசங்கம் செய்கிறது போல் பேசிக் கொண்டு போகிறோமோ என்று அவருக்கே தோன்றியது போலிருக்கிறது.

அன்னி குனிந்த தலை நிமிராமல் நின்ருள். அவள் கண்களில் இரண்டு கண்ணீர்த்துளிகள் மெல்ல மெல்ல உருண்டு மெழுகுவத்தியில் மெழுகு உருகி வழிகிறது போல் கன்னத் தோடு வழிந்தது......

''அப்படியானுல்?'' அவளால் பேசத்தான் முடியவில்லையோ, அல்லது பேச விருப்பந்தான் இல்லையோ? அவள் நிறுத்தி விட்டாள்.

''நீ முருகனை மறந்து விட வேண்டியது தான்!'' — ஞானச்சாமி தொண்டை அடைக் கத்தான் கூறினர்.

''நான் எப்படி மறப்பேன் அவரை? என் ஏசுவை நான் நம்புகிறேன். ஆனுல் இந்த உலகத்திலும் எனக்கு ஒரு துணை — அவர்.... அவர்தான் — முருகன்!'' — அன்னி விக்கி விக்கிச் சொன்னுள்.

''இல்லை, அன்னி! ஊஹூம். கூடாது. இந்த உலகத்திலும் மறு உலகத்திலும் உனக் குத் துணை தேவகுமாரனுன ஏசுதான். முருகன் மதம் மாறி உன்னை மணக்கத் தயாராக இருக்கலாம். ஆனுல்....ஆனுல்..நான் சம்மதித் தேனுனுல் ஏசுவுக்குத் துரோகம் செய்வதற்கு உடன் பட்டவனுவேன். யூதாஸ் இஸ்காரியத் தினும் கடைப்பட்டவனுவேன்!''

''துரோகமா?'' — அன்னிக்கு உண்மை யாகவே புரியவில்லை. இத்தனை வருஷங்களா கத் தன் ஆசிரியராகவும் தங்கள் கோவில் குருவாகவும் இருந்த ஞானச்சாமி யூதாஸா?

ஞானச்சாமி தொடர்ந்தார்: ''ஆமாம்.... முருகன் மதம் மாறுவான். வில்லியம்ஸ்— என்றே ஸ்டீபென்ஸ் என்றே பெயர் வைத்துக் கொள்வான். ஆனுல் அவன் உள் மனம் இந்த மண்ணேடு ஒட்டிப் புழுதி ஏறி யிருப்பது. அந்த இதயச் சுவரிலே தும்பிக்கை விநாய கனும் நாலு கை விஷ்ணுவும் லட்சுமியும் சரஸ்வதியும் கோணல் மாணலாக வரையப் பட்டிருக்கிறது. அதை யழிக்க முடியாது. அதையழிக்காமல் அதன் மேல் தேவகுமார னின் திவ்ய சித்திரத்தை வரைவது முடியாத காரியம்... உம்..! அவன் மதம் மாறுவான். ஆனுல் ஏசுவுக்காக அல்ல. பாபிகளுடைய விமோசனத்துக்காக அவர் சிந்திய இரத்தத் துக்காக அல்ல. குரிசிலேச் சுமந்து தழும்பு ஏறின அந்தத் தோளுக்காக அல்ல....உம் அல்ல அல்ல....வெறும் உனக்காக....இந்தச் சதைக்காக....ஆமாம்...பரதன் ஞானச்சாமி யானதைப்போல....ஆமாம் அதைப்போல..''

ஞானச்சாமி வெறி பிடித்தவர் போலக் கத்தினர். அன்னி பயந்து போய் விட்டாள்.

களைத்துப் போய்ப் படுக்கையில் அமர்ந்தார் ஞானச்சாமி. அன்னி மௌனமாக அவரை வணங்கி விட்டுச் சோகம் ததும்ப அடி மேலடி வைத்து அங்கிருந்து அகன்ருள்.

யாரோ ஒருவருக்கு

சமீபத்தில் ஒருநாள் முன்னிரவு வேளை. கடிகாரம் ஒன்பதரை மணியைக் காண்பித்துக் கொண்டிருந்தது.

தியாகராய நகர் கோபதி நாராயணசாமி செட்டி சாலைப் பகுதியில் எழும்பூர் பக்கம் போகும் பஸ்ஸுக்காகக் காத்திருந்து ஏற்கனவே கால் மணி நேரம் ஓடினதுதான் மிச்சம். பஸ் ஓடவில்லை. நேரம் ஓடிக் கொண்டிருந்தது.

நான் மாத்திரம் நின்று கொண்டிருந்தால் கவலைப்பட்டிருக்க மாட்டேன். ஆனால் என் கூடக் குழந்தைகள் இருவர் இருந்தார்கள்!

இனி பஸ்ஸை எதிர்பார்த்துக் காத்திருப்பதில் லாபம் இல்லை என்ற எண்ணத்துடன், அவ்வழியே வந்த காலி டாக்ஸியைப் பார்த்துக் கைதட்டினேன்! நிச்சயமாக அந்த டாக்ஸி ஓட்டிக்குக் காது செவிடில்லை. திரும்பி என்னைப் பார்த்து விட்டு, வண்டியை நிறுத்தாமலே ஓட்டிக் கொண்டு போய்ப் பார்வையிலிருந்தே மறைந்து விட்டார். என்னைப் பார்த்தால் அவருக்கு டாக்ஸி ஏற அருகதையற்ற நபராகத் தோன்றவில்லையோ என்னவோ?



அப்புறம் ஓடிய இரண்டு டாக்ஸி ஓட்டிகள் கைத் தட்டலுக்குத் திரும்பிப் பார்க்கும் சிரமத்தைக் கூட எடுத்துக் கொள்ளவில்லை. கடிகாரம் என்னவோ என் சிரமத்தைப் பார்க்காமல் ஒன்பதே முக்காலைக் காட்டியது!

ஒரு டாக்ஸி ஓட்டி என் அழைப்புக்குச் செவிசாய்த்து வண்டியை அருகில் கொண்டு வந்து நிறுத்தினார். கதவுக் கைப்பிடியில் கையை வைத்தேன்.

''எங்கே ஸார் போகணும்?'' என்று கேட்டார் இதமாகவே. எனக்கு அப்போதே பாதி தூரம் டாக்ஸியில் போய் விட்டதுபோலத் தோன்றியது. ''புரசவாக்கம்'' என்றேன்.

''வராது சார்! நான் அபிராமபுரம் ஷெட்டுக்குப் போய்க் கொண்டிருக்கிறேன்'' என்று சொல்லி ஆக்ஸிலரேட்டரை மிதித்து விட்டார். பத்து மணி சுமாருக்கு ஒரு டாக்ஸி தென்பட்டது. ஓட்டி என் குரலுக்கு மதிப்புக் கொடுத்தாலும் என் குரலை விடப் பணத்துக்குத்தான் அதிக மதிப்புக் கொடுக்க விரும்பினார். ''மீட்டருக்கு மேலே ஒரு ரூபாய் கொடுப்பீங்களா?'' என்றார். அந்தப் பயமுறுத்தலுக்கு நான் பணிய விரும்பவில்லை. ''நமக்குக் கட்டாது, நான் வரவில்லை'' என்று சொல்லி விட்டேன்.

நல்ல வேளையாகப் பத்து பத்திற்கு ஒரு பஸ் வந்து எங்களை அள்ளிப் போட்டுக் கொண்டு வந்தது. எழும்பூரில் இறங்கி வீடு போய்ச் சேர்ந்தோம்.

பொது ஜனங்களுக்கு டாக்ஸிகள் எவ்வளவு தூரம் பயன் அளிக்கின்றன என்பதற்கு இது ஒரு சிறு உதாரணம்.

இரவு பத்து மணியோடு, நகர பஸ் ஓட்டத்தோடு போட்டி போட்டுக் கொண்டு டாக்ஸி ஓட்டமும் நின்று விடுகிறது. பஸ் கிடைக்காதவர்கள் தவித்துக் கொண்டே இருக்க வேண்டியிருக்கிறதே தவிர அவர்களுக்கு டாக்ஸிகள் அபயம் அளிப்பதில்லை. எட்டரை மணிக்கே 'ஷெட்டுக்கு' என்னும் போர்டை மாட்டி விடுகிறார்கள் சிலர். அன்று ஒருநாள் மௌண்ட்ரோட்டில் 'பெரம்பூர் ஷெட்' என்ற போர்டுடன் நின்ற டாக்ஸி ஓட்டியை, புரசவாக்கம் வர முடியுமாவென்று கேட்டேன். பெரம்பூர் போகும் வழியில் தானே புரசவாக்கம் இருக்கிறது என்ற நம்பிக்கையில் தான் கேட்டேன். ''ஓனர் சாப்பிடப் போயிருக்காருங்க! அவர் எப்போ வருவாரோ?'' என்று சொல்லி என்னை மெதுவாகத் தட்டிக் கழித்து விட்டார் அந்தக் கார் ஓட்டி.

பொதுவாக, பெண் வீட்டுச் சம்பந்தி பிள்ளை வீட்டுச் சம்பந்திக்குக் கொடுக்கும் மதிப்புடனும் செய்யும் உபசாரத்துடனும் தான் டாக்ஸிகளை அழைக்கிறோம்; ஏற்றிச் செல்ல வேண்டுகிறோம். ஆனால் அவர்கள் என்னவோ எப்போதுமே ஒரு மாப்பிள்ளை முறைப்புடன்தான் ஓடுகிறார்கள்.

பஸ்ஸுக்காக நாம் தவம் கிடந்து ஸ்டாப்புக்களில் நிற்கும் போது, அனேகமாகப் பஸ்கள் நிறைய ஓடும் நேரங்களில் டாக்ஸிக்காரர்கள், பிரயாணிகளின் தயவுக்காக மெதுவாக ஊர்ந்து கூட்டத்தைக் கவனித்து, பிரயாணிகளின் கவனத்தையும் தயவையும் எதிர்பார்த்து டாக்ஸியை ஓட்டுகிறார்கள். ஆனால், பஸ் ஓடாத பாதைகளிலும், ரயிலுக்குப் போக வேண்டிய அவசர வேளைகளிலும், இரவு வேளைகளிலும், அவர்கள் பொதுஜனங்களைப் பழி வாங்குவது போல நடந்து கொள்கிறார்கள்.

எல்லோருமே, ராயபுரத்திலிருந்து அடையாற்றுக்கும் திருவல்லிக்கேணியிலிருந்து ஐயனாவரத்துக்கும், ஷெனாய் நகரிலிருந்து பாரிஸ் கார்னருக்கும் மாத்திரம் டாக்ஸியை உபயோகிக்க முடியுமா? இரண்டு ரூபாய் கட்டணத்துக்குக் குறைந்து வரும் எந்தத் தூரத்துக்கும் வண்டி ஓட்டுவது கௌரவக் குறைவு என்று சிலருக்கு எண்ணமோ?

காலை வேளைகளில், ரயிலில் வந்து இறங்கும் பிரயாணிகளோ, இரவில் சினிமாப் பார்த்து விட்டு, வீட்டுக்குப் போகத் துடிக்கும் நபர்களோ, டாக்ஸிகளின் கருணைக்காக ஏங்கித் தவிப்பது கண்ணராவியாகத் தான் இருக்கிறது.

இதையெல்லாம் விட ஒரு பெரிய வேடிக்கை. டாக்ஸியிலிருந்து இறங்கியதும் மீட்டரில் காட்டும் தொகைக்கு உங்களிடம் சில்லறையில்லாமல் முழு ரூபாயைக் கொடுத்தால் உங்களுக்கு— நான்கணா பாக்கி தர வேணுமானால் பெரும்பாலான டிரைவர்களிடம் ஒன்பதணாவோ பத்தணாவோ தான் இருக்கும். பத்தணா பாக்கி தர வேணுமானால் எட்டரையணாவோ ஆறணாவோ தான் இருக்கும். இப்படி உங்களுக்கு எவ்வளவு பாக்கி தரவேணுமோ அதைவிட நான்கணாவோ இரண்டணாவோ குறைவாகத் தான் டிரைவரிடம் இருக்கும். கொடுக்க வேண்டியதற்கு மேல் இரண்டணாவோ நாலணாவோ அதிகமாகக் கொடுத்துவிட்டுச் சில்லறைக்காகக் காத்து நின்றால் ஒரு சல்யூட் அடித்து விட்டு டாக்ஸியைக் கிளப்பி விடுவார்கள். டாக்ஸி டிரைவர்களின் பாக்கெட்டில் ஏதோ மாயம் இருக்கும் போலிருக்கிறது!

கடமை, இரக்கம், நியாயம், எல்லாவற்றுக்கும் மேலாக, எப்படியாவது பணம் தட்ட வேண்டும் என்ற ஆசை மேலோங்கி நிற்கிறதே! டாக்ஸியில் தர்ம நியாயமாக மீட்டர் இருக்கிறது. இவ்வளவு தூரத்துக்கு இவ்வளவு கட்டணம் என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. இதை மீற வேண்டும் என்ற கொள்கையைக் கடைப் பிடிப்பவர்கள் சமூகத்துக்கு நல்லது செய்பவர்கள் என்று எண்ண முடியவில்லையே!

சில சமயங்களில் எதிர்பாராத விதமாக நமக்கு டாக்ஸி கிடைத்துச் சேர வேண்டிய இடத்தில் இறங்கி மீட்டரைப் பார்த்துச் சில்லறை கொடுக்கும் போது நமக்குப் பிரமாத மகிழ்ச்சி ஏற்படுகிறது. காரணம் டாக்ஸி டிரைவர், சில பஸ் கண்டக்டர்களைப் போல் விரல் முழுதும் எச்சிலாக்கி அதை டிக்கட்டில் தடவி நம்மிடம் கொடுக்க முடியாதல்லவா?

பொதுவாக இருபது டாக்ஸி ஓட்டிகளுக்கு, ஒரு டாக்ஸி ஓட்டி, இன்முகத்துடனும், கடமை உணர்ச்சியுடனும், நியாய மனப்பான்மையுடனும் நடந்து நல்ல சேவை புரியத்தான் செய்கிறார்கள். அவர்களை நாம் பாராட்டுகிறோம்; மற்றப் பத்தொன்பது பேர்களுக்கு அந்த ஒரு நபர் பைத்தியக்காரனாகவும் பிழைக்கத் தெரியாதவனாகவும் தோன்றலாம்.

ஆனால் பொதுமக்கள், அந்த ஓர் ஆசாமியைப் போல் மற்றப் பத்தொன்பது பேர்களும் இருக்கக் கூடாதா என்று தான் பெருமூச்சு விடுகிறார்கள்!

யாரோ எழுதியது



ஐயா, இடம் கொடுங்கள்!



"கோன்"




1. மாணவனின் பெயர்
2. மாணவனின் தந்தை, தந்தையைப் பெற்ற தாத்தாவின் பெயர்கள்
3. மாணவன், அவன் தந்தை, அவன் தாத்தா பிறந்த தேதிகள் [நேரத்துடன்]



4. தந்தை, தாத்தாவின் படிப்பு விவரங்கள் [தகுந்த அத்தாட்சிகளுடன்]
5. தந்தையின் மாத வருமானமும், தாத்தாவின் பென்ஷனும்
6. மதம், ஜாதி, இனம், பிரிவு, சைவம், அசைவம்



7. மாணவன் பிறந்த இடம், அதன் ஜனத்தொகை
8. எந்த வகுப்பில் அட்மிஷன் தேவை? முந்திய வகுப்பில் பெற்ற மதிப்பெண்கள்
9. சில பாடங்களில் குறைவாகவும் சிலவற்றில் அதிகமாகவும் வாங்கியிருப்பதற்கு விளக்கம்
10. விளையாட்டுப் போட்டிகளில் ஈடுபாடு உண்டா? அப்படியானால் எந்தெந்த விளையாட்டுக்கள் உங்களுக்குத் தெரியும்? [பக்கத்து வீடு அல்லது எதிர் வீட்டுக்காரர்களிடமிருந்து அவர்களுடைய சொத்துக்கு எந்தவித சேதமும் விளைவித்ததில்லை என்று அவசியம் இரண்டுக்குக் குறையாத நற்சாட்சிப் பத்திரங்கள் இத்துடன் இணைக்கப்பட வேண்டும்]



11. உங்கள் உறவினர்கள் யாராவது ஏற்கனவே இந்தப் பள்ளிக்கூடத்தில் கல்வி கற்றிருக்கிறார்களா? அப்படியானால் அவர்களுடைய தற்கால நிலைமை என்ன?
12. இந்தப் பள்ளிக்கூடத்தில்தான் சேரவேண்டும் என்பதற்கு முக்கிய நோக்கம் என்ன? அதில் ஏதாவது விசேஷமுண்டா? [பள்ளிக்கூடம் உங்கள் வீட்டுக்குப் பக்கத்திலேயே இருக்கிறது என்ற ஒரு காரணத்தை மட்டும் வைத்துக்கொண்டு விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. மேற்கொண்டும் அதற்குத் தகுந்த விளக்கம் அளித்தாக வேண்டும்.]



மேலே கொடுக்கப்பட்ட தகவல்கள் யாவும் உண்மை. இந்த வகுப்பில் அந்தக் காலத்தில் நானோ, பையனுக்குத் தாத்தாவோ பெயிலாகப் போனதில்லை என்று உறுதி கூறுகிறேன். இந்த விண்ணப்பப் பாரத்தில் இரண்டு கெஜட்டட் ஆபீசர்கள் கையெழுத்தையும் ஒரு மாகாண முதன் மந்திரியின் கையெழுத்தையும் அத்தாட்சியாக வாங்கி இத்துடன் இணைத்து அனுப்பியிருக்கிறேன்.


கையொப்பம்: (தந்தை / போஷகர்)
தேதி:

மேலே எனது அப்பாவாலும் எனது மாமாவாலும் கொடுக்கப்பட்டிருக்கும் தகவல்கள் யாவும் உண்மை. தங்களது பள்ளியில் நூறு நோட்டுப் புத்தகங்கள் வாங்க வேண்டும் என்றாலும் மறுநாளே வாங்கிவந்து விடுவேன் என்று உறுதி கூறுகிறேன்.



கையொப்பம்: (மாணவன்)
தேதி:

[முதல் மூன்று வகுப்புக்களில் சேர விரும்பும் மாணவர்களுக்குக்கூட, சில பள்ளிகள் இப்படி விண்ணப்ப பாரம் தயாரித்தாலும் ஆச்சரியப் படுவதற்கில்லை]!



சுத்தமான
வைரங்கள்
பாபாலால் அண்டு கோ
பொன் வெள்ளி நகை வியாபாரிகள்
ரட்டன் பஜார் சென்னை.3

நந்தவனம்

28. மனம் புரிந்தது

“சித்திர வேலை முழுதும் சீராக முடிந்து விட்டது என்று கேள்விப்படுகிறேன், வக்கீலையா! அந்த வகையில் எனக்கு முழுத் திருப்தி!” என்றார் அனவரத புவனபதி.

“கேள்விப்படுகிறீர்களா? அப்படியானால் நீங்கள் அங்கே போய் இன்னும் பார்க்கவில்லையா?” என்று கேட்டார் திவான்பகதூர் செந்தில்நாயகம்.



“அரை குறையாக இருக்கும் போது போய்ப் பார்த்தது. முழுதும் முடிந்த பிறகு போகவில்லை. ஆனால் மிகவும் அற்புதமாக இருக்கிறது என்று பட்டரும் கம்பரும் சொல்லுகிறார்கள்!” என்று கூறினார் ஜமீந்தார்.

“பட்டரும் கம்பரும் இங்கே வந்தார்களா?” என்று கேட்டார் திவான் பகதூர் செந்தில்நாயகம்.

“ஆமாம், வந்தார்கள். செண்பக நாயகி கோவிலின் திருப்பணி இத்தனை சிறப்பாக முடிந்ததில் அவர்கள் இருவருக்கும் ஒரே ஆனந்தம். ஒரே உற்சாகத்தில் கும்மாளி போட்டுக் கொண்டு பேசினார்கள். சித்திரங்கள் ஒவ்வொன்றும் அபாரமாக இருப்பதாக அவர்களுக்குக் கொண்டாட்டம்!” என்றார் ஜமீன்தார்.

“இருக்கத்தானே செய்யும்? இரண்டு பேருமே நல்ல ரசிகர்கள். கலையின் அருமை பெருமைகளை நன்றாக உணரக் கூடியவர்கள். அதனால் அந்தச் சித்திர நேர்த்தியைப் பார்த்ததும் அதை உடனே வந்து இங்கே தெரிவிக்க வேண்டும் என்று பட்டிருக்கிறது அவர்களுக்கு!” என்று சொல்லித் திவான்பகதூர் தமது கூர்மையான பார்வையை ஜமீந்தாரின் கண்களிலேயே செலுத்தி, என்ன உணர்ச்சிகள் அவருடைய முகத்திலே துலங்குகின்றன என்று நோக்கினார்! ஜமீந்தார் புன்முறுவல் செய்து கொண்டே சொன்னார் :—

“வக்கீலையா! சித்திர வேலை பூர்த்தி அடைந்ததில் அவர்களுக்கு உண்மையிலேயே ஒரு மகிழ்ச்சி தான். ஆனால் அவர்கள் இருவரும் இங்கே வந்ததற்கு இன்னொரு காரணமும் உண்டு. அதை அவர்கள் வெளியிட்டுச் சொல்லவில்லை. ஆனால் அது எனக்குத் தெரியும்!” என்றார் ஜமீந்தார் அனவரத புவனபதி.

திவான் பகதூர் வியப்பை வரவழைத்துக் கொண்டு ஜமீந்தாரின் முகத்தையே பார்த்தார்.

“அதென்ன காரணம்? எனக்குப் புரியவில்லையே!” என்றார் திவான்பகதூர் செந்தில்நாயகம்.

“கம்பருக்கும் பட்டருக்கும் அந்தப் பையன் விஸ்வநாதனிடம் ஒரு மதிப்பு. அளவுகடந்த ஒரு பற்று. அதனால் அவ

ளைப் பற்றி இவர்கள் இருவருக்கும் ஒரு கவலை!'' என்றார் ஜமீந்தார்.

''கவலையா? அது எதற்காக?'' என்று பக்குவமாகக் கேட்டார் திவான் பகதூர் செந்தில்நாயகம்.

''இளம் பிள்ளை, ஏதோ வயதின் கோளாறு, ஒரு தினுசாக நடந்துகொண்டிருக்கிறான். இந்தச் செய்தி என் காதுக்கு எட்டியிருக்க வேண்டும் என்று அவர்களுக்குத் தெரியும். அதனால் என்னுடைய மன நிலை எப்படியிருக்கிறது என்பதை நேரிலே நோட்டம் பார்த்து விட்டுப் போகலாம் என்று வந்திருக்கிறார்கள்!''

இப்படிச் சொல்லும்போது ஜமீந்தார் புன்முறுவல் செய்தார். வக்கீல் கேட்டார்:

''அவர்களுக்கு ஏன் இந்தக் கவலை எல்லாம். அற்புதமாகச் சித்திரம் வரையக் கூடிய இளைஞனை இந்த ஜமீனில் எப்படிக் கௌரவப்படுத்துவீர்கள் என்பது அவர்களுக்கு ஏன் தெரியாமல் போய் விட்டது?''

''தெரியும் வக்கீலையா! ஆனாலும் பையனுடைய நடவடிக்கைகள் என்னை எவ்வளவு தூரம் கோபப்படுத்தியிருக்கின்றன என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும்என்று அவர்களுக்கு ஒருஆவல்! அது இயல்புதானே?'' என்றார் ஜமீந்தார்.

''தகப்பனாரிடம் வாக்குறுதி செய்து கொடுத்து, மகனை இவ்வளவு உரிமையோடு சென்னைப் பட்டணத்திலிருந்து இங்கே அழைத்துக் கொண்டு வந்திருக்கிறீர்கள். உங்களுக்கு இல்லாத அக்கறை இவர்களுக்கு என்ன வந்தது? வேடிக்கையாக இருக்கிறதே!'' என்று சொல்லி, முகத்தில் ஒரு வியப்பு கலந்த நகைப்பை ஓடவிட்டார் திவான்பகதூர்.

ஜமீந்தார் மௌனமாக இருந்தார். சற்று நேரம் கழித்து வக்கீல் கேட்டார்: ''அது சரி! நீங்கள் அவர்களிடம் என்ன சொன்னீர்களோ?''

''என்ன சொல்லுவேன்! நீங்களும் நானும் இருந்து ஒரு விஷயத்தைப் பற்றிப் பேசுவது போலவா, அவர்களிடம் பேச முடியும்? எதுவுமே தெரிந்ததாகக் காட்டிக் கொள்ளவில்லை. சித்திரப் பணியை இத்தனை உன்னதமாக முடித்தது பற்றி மகிழ்ச்சி அடைவதாகவும், வில்வநாதனைச் சென்னைக்கு அனுப்பும் போது கலைக் கல்லூரி சம்பந்தமான நன்கொடைப் பத்திரங்களையும், மற்ற வசதிகளுக்கான பணத்தையும் அவனிடம் கொடுத்து அனுப்பப் போவதாகவும் சொன்னேன். இதைக் கேட்டதும் அவர்கள் இருவருக்கும் மிகுந்த மகிழ்ச்சி. அந்த மகிழ்ச்சியிலே சென்றிருக்கிறார்கள்!'' என்றார் ஜமீந்தார்.

''நல்ல காரியம்! கலையை அனுபவிக்கக் கூடிய இரண்டு ரசிகர்களிடம் முதன் முதலாக உங்களுடைய கலை நன்கொடையை அறிவித்ததில் ஒரு பொருத்தம் இருக்கிறது. வேறு யாரிடமாவது சொல்லியிருந்தால், இந்தக் காலத்தில் இப்படி ஒரு செலவு எதற்கு என்று முட்டுக்கட்டை போட்டிருப்பார்கள்!''

வக்கீல் இப்படிச் சொன்னதும் பளிச்சென்று ஜமீந்தார் மறுமொழி கூறினார்:

''முட்டுக்கட்டையா! இந்த அகில உலகமே வந்து முட்டுக்கட்டை போட்டாலும் என்னுடைய முடிவை மாற்றி விட முடியுமா, வக்கீலையா! வில்வநாதனே மறுத்தாலும், அல்லது விபரீதமாக நடந்து கொண்டாலும், என்னுடைய நன்கொடையை நிறுத்திவிடுவேனு! நம்முடைய வாக்கை நாம் நிறைவேற்றுகிறோம். நம்முடைய முன்னோர்களின் ஒரு பழைய கனவு இத்தனை கலை அழகோடு நிறைவேறும்போது, அதற்காக நாம் நம்முடைய கடமையைச் செய்ய வேண்டுமல்லவா? இன்னொருவருக்காகவா நாம் இதைச் செய்கிறோம்? இல்லையே! சிவகாமிநாதன் எத்தனை உத்தமமான பெரிய மனிதர்! அவருடைய ஆன்ம சாந்திக்காக நாம் செய்கிற ஒரு மகத்தான வேள்வி அல்லவா இந்தக் கலைக் கல்லூரி! இன்னும் இதோடு நின்று விடாமல், அந்தக் கலைக் கல்லூரி மேலும் மேலும் வளர்ந்து, ஆண்டுதோறும் பல மாணவர்களை உலகத்துக்கு வழங்கிக் கொண்டே இருக்க வேண்டும் என்பதல்லவா நம்முடைய ஆசை! அதற்கு உரிய முறையில் இந்தக் கல்லூரியை நடத்துவதற்கு வேண்டிய ஏற்பாடுகளையும் செய்ய வேண்டும் வக்கீலையா! எனக்கு என்னவோ இத்தனை ஏற்பாடுகளையும் இந்தப் பையன் நிறைவேற்றுவான் என்ற நம்பிக்கை இல்லை! அவனைச் சென்னைக்கு அனுப்பியதும், நானும் ஒரு மாதம் அங்கே போய் இருந்து, சரியான ஆசிரியர்களைத் தேர்ந்தெடுத்து, நிர்வாகத்துக்கு வேண்டிய மனிதர்களையும் நியமிக்க வேண்டும். எல்லாம் செல்வியின் கல்யாணம் முடியட்டும் என்று காத்திருக்கிறேன். அது முடிந்ததும் நமக்குச் சிங்கம்புத்தூரில் என்ன வேலை! இங்குள்ள பொறுப்புக்களையெல்லாம் பொன்னுத்துரையிடம் ஒப்படைத்து விட்டு, நான் சென்னைக்குப் போய்ச் சில நாட்கள் தங்கியிருந்தால்தான், இந்த ஏற்பாடுகளெல்லாம் சரியான முறையில் நடக்கும். அதற்கெல்லாம் திட்டம் போட்டுத்தான்

வைத்திருக்கிறேன். என்றாலும் இந்தப் பையனைப் பற்றி அடிக்கடி ஒரு கவலை வருகிறது!''

இப்படிச் சொல்லும்போது ஜமீந்தாரின் முகத்தில் மெய்யாகவே ஒரு சோகக் குறி படர்ந்ததை வக்கீல் கவனித்தார்.

''இந்தப் பையன் வில்வநாதனைப் பற்றி அவ்வளவு தூரம் நீங்கள் கவலைப் படுவதற்கு என்ன இருக்கிறது? அவ்வளவு தூரம் பொறுப்பற்ற ஒரு பையனா அவன்?'' என்று கேட்டார் திவான் பகதூர் செந்தில்நாயகம்.

''வக்கீலையா! உங்களிடம் எந்தச் செய்தியையும் நான் இதுவரை மறைத்த தில்லை. இப்பொழுது மட்டும் ஏன் மறைத்துப் பேச வேண்டும்! அவசியமில்லை. இந்தப் பையனை நான் இங்கே அழைத்து வந்த போது ஏதேதோ ஆசைக் கனவுகள் கண்டேன். செல்விக்கு அவன் ஓவியக் கலை கற்றுக் கொடுக்க ஆரம்பித்த போது, உண்மையிலேயே என் மனசில் மட்டில்லாத மகிழ்ச்சியிருந்தது. ஆகாயக் கோட்டைகள் எல்லாம் கட்டினேன். ஆனால் அத்தனை கோட்டைகளும் இடிந்து விழுந்து விட்டன. செல்வி அவனிடம் சித்திரக் கலையைக் கற்றுக் கொண்டாளோ இல்லையோ, மனித மனம் என்றால் என்ன என்பதை நன்றாகக் கற்றுக் கொண்டு விட்டாள். அது அவளுக்கு ஒரு பெரிய கல்வி. இந்தக் கல்வி இனிமேல் அவளுக்கு வாழ்க்கை முழுதும் நினைவிலே இருக்கும்—''

இப்படிச் சொல்லி விட்டுப் பெருமூச்சு விட்டார் ஜமீந்தார். பிறகு சொல்லுவார்:

''வக்கீலையா! செல்வியின் மனத்தில் ஒரு மாபெரும் மாறுதல் இப்பொழுது ஏற்பட்டிருக்கிறது. இந்த மாறுதல் முதலில் எனக்குத் திகைப்பைத் தந்தது. பிறகு யோசித்துப் பார்த்ததில், அவளுடைய அறிவுடைமையை எண்ணி எண்ணி நான் மனசுக்குள் ஆனந்தம் அடைந்த வண்ணமாக இருக்கிறேன். பொன்னுத்துரையைத் திருமணம் செய்து கொள்ளப் போவதாக அவளே தான் முடிவு செய்தாள். அவளேதான் தாயாரிடமும் இந்த முடிவை உறுதியோடு கூறினாள். எத்தனையோ வருஷ அனுபவத்துக்குப் பிறகு வர வேண்டிய ஒரு மனத்தெளிவு, அவளுக்கு இவ்வளவு எளிதாக வந்ததே என்று எனக்கு ஒரு பெரிய நிம்மதி. அந்த நிம்மதியோடு தான் உங்களிடம் இத்தனை செய்திகளையும் அமைதியாகச் சொல்லுகிறேன்!'' என்றார் அனவரத புவனபதி.

திவான்பகதூர் செந்தில்நாயகம் மறுமொழி சொல்லாமல் மௌனமாக இருந்தார். ஏதேதோ சாமர்த்தியமாகக் கேள்விகள் போட்டு, என்னென்னவோ செய்திகளையெல்லாம் ஜமீந்தாரிடம் தெரிந்து கொள்ள வேண்டும் என்று பேச ஆரம்பித்த வக்கீலுக்கு, ஜமீந்தாரின் பெருந்தன்மை உள்ளத்தை உருக்



லையது. எத்தனையோ பல ஆண்டுகளாக வழி வழியாக நிலவி வருகிற ஒரு பெருந் தன்மை அல்லவா அது! அதில் சிறுமைக்கும், கபடத்துக்கும் இடம் ஏது? இவ்வாறு எண்ணிக் கொண்டே, நெகிழ்ந்த மனத்தோடு ஜமீந்தாரின் வார்த்தைகளையே கேட்டுக் கொண்டு மௌனமாக இருந்தார் வக்கீல். ஜமீந்தார் சொன்னார்:

''வக்கீலையா! செல்வியின் எதிர் காலம் எப்படி அமையுமோ என்று இது வரை ஒரு பெரிய கவலை இருந்து வந்தது. ஆனால் இப்பொழுது அந்தக் கவலை இருந்த இடம் தெரியாமல் மறைந்து விட்டது. இனிமேல் என் கவலை, வில்வநாதனின் எதிர்காலம் எப்படி அமையப் போகிறதோ என்று தான்! ஏனென்றால், நல்லதுக்கோ கெட்டதற்கோ அவனை என்னிடம் ஒப்படைத்தார் அவனுடைய தகப்பனார்! அவர் யோகசாலி. இறந்து விட்டார். அவர் பார்க்காத காட்சிகளையெல்லாம் நான் பார்க்கும்படி ஆகி விட்டது! எந்தக் காரியத்தைத் தம்முடைய மகன் செய்யக் கூடாது என்று அவர் எண்ணினாரோ, அதே காரியத்தை அவன் செய்கிறான். அதை நானும் என் கண்ணால் பார்த்து விட்டேன்! அதுதான் என் நெஞ்சை வேதனை செய்கிறது!''



இப்படி ஜமீந்தார் சொன்னபோது, அவருடைய குரலில் துயரமும், ஆழ்ந்த அனுதாபமும் ஒலி செய்தன. வக்கீல் இதைக் கண்டு மனம் நொந்தவராக ஆறுதல் சொல்ல ஆரம்பித்தார்:

''உங்களுடைய மன நிலை எனக்கு நன்றாகப் புரிகிறது. ஆனாலும் நீங்கள் இவ்வளவு கவலைப்படுவதற்கு அவசியமில்லை என்று நினைக்கிறேன். செண்பக வனத்தின் சுவர்களிலே உள்ள சித்திரங்கள் எல்லாம் இரண்டு இதயங்களின் ஒருமித்த பணி. மனம் ஒன்றிய இரண்டு இளம் உள்ளங்கள் சித்திரங்களாக மலர்ந்திருக்கின்றன. அதனால் தான் கம்பருக்கும் பட்டருக்கும் அந்த இரண்டு இளம் உள்ளங்களிடமும் அத்தனை அனுதாபம்! அதனால்தான் ஜமீந்தார் அவர்களின் மன நிலையை அறிந்து போகவேண்டும் என்று, அத்தனை கவலையோடு அவர்கள் இருவரும் இங்கே வந்திருக்கிறார்கள்!''

இவ்வாறு சொல்லி ஜமீந்தாரின் அன்புள்ளத்திலே மேலும் அனுதாபத்தை வளர்த்தார் வக்கீல். ஜமீந்தார் சொன்னார்:

''வக்கீலையா! ஓரளவு எனக்கும் அது தெரியும். நான் எண்ணியபடி, நான் ஆசைப்பட்டது போல், வில்வநாதனின் எதிர்காலம் அமையாதுபோனாலும், அவன் வாழ்வு ஒரு சோக நாடகமாக ஆகி விடக் கூடாதே என்றுதான் நான் கவலைப்படுகிறேன். எனக்கு அவனிடம் கோபமில்லை. உண்மையாகவே சொல்லுகிறேன், கோபமில்லை. செல்வியின் தீர்மானம் வேறு விதமாக இருந்திருந்தால் ஒருவேளை எனக்கு வில்வநாதனிடம் ஆத்திரம் உண்டாகியிருக்கலாம். ஆனால் இப்போது அப்படி இல்லை. வில்வநாதன் அவனுடைய தகப்பனாரின் இலட்சியங்களை நிறைவேற்றக்கூடிய ஒரு கலைஞனாக முன்னேற வேண்டுமே என்றுதான் நான் இப்போது மனப்பூர்வமாக எண்ணுகிறேன். ஆனால் என்னுடைய உள் மனத்தில் பலவிதமான சந்தேகங்கள் எழுந்து குழப்பம் தருகின்றன!''

''அப்படியானால், செண்பகசுந்தரியின் மனப் போக்குக்கும், வில்வநாதனின் இலட்சியத்துக்கும் ஒத்துப் போகாது என்று நீங்கள் நினைக்கிறீர்களா?'' என்று கேட்டார் திவான் பகதூர் செந்தில்நாயகம்.

'' வக்கீலையா ! செண்பகசுந்தரி என்ன செய்வாள் பாவம்! சிறு பெண் அவள்! அவள் பிறந்த குடும்பம் இருக்கிறதே, அது பலரைப் பழி வாங்கிய ஒரு பாழ்மடம்! அந்தப் பாழான இடத்திலே போய்ச் சிக்கிக் கொண்டு விட்டான் இந்தப் பையன். இனி இவனை அதிலிருந்து மீட்டுக் காப்பாற்றி இவனைச் சென்னையிலே கொண்டு குடியேற்றுவது என்பது எளிய காரியமில்லை! இனிமேல் உங்களுக்கும் எனக்கும் இந்த ஒரு வேலையே பெரிய வேலையாக, முழு வேலையாக இருக்குமென்று அஞ்சுகிறேன்!''

ஜமீந்தார் இப்படிச் சொன்னதும் திவான் பகதூர் மறுவினாடியே பதில் சொன்னார்.


''உண்மைதான். ஆனால் சிவகாமிநாதன் என்ற அந்த உத்தம நண்பருக்காக, அந்த உன்னதக் கலைஞருக்காக இப்படி ஒரு சேவையைச் செய்வதற்கு நான் முழு மனத்தோடு சித்தமாயிருக்கிறேன். வாழ்வில் ஒவ்வொருவர் எங்கெங்கோ காசிக்கும், பிரயாகைக்கும் போய் இறந்தவர்களுக்காகச் சிராத்தம் செய்கிறார்கள். நமக்கு அந்த


என் குடும்பத்தினர் அனைவரும் விரும்புவது
ஹமாம்
அதில் மறைந்திருக்கும்
குணம்* எனக்கு
மிச்சப்படுத்த
உதவுகிறது
HAMAM
the family soap
தாவர எண்ணெய்களின் விசேஷக் கலவை ஹமாமைக் கடைசி வரையில் உறுதியாகவும் நறுமணத்தோடும் இருக்கச் செய்கிறது. ஹமாம் வில்லை ஒவ்வொன்றும் நெடுநாள் உழைக்கிறது என்பது ஞாபகமிருக்கட்டும்.
டாடா தயாரிப்பு
ஹமாம் ஸ்நானத்தினால் அதிகப்படி புது மலர்ச்சியை அடைகிறேன்.
ஹமாமின் அளவு கடந்த நுரை எனக்குப் பிடித்திருக்கிறது.
இன்ப நறுமணமுள்ள ஹமாம் என் சருமத்துக்கு இதமளிக்கிறது.
THY-21-TAH



மிக நல்ல விசிறிகள் மிக நல்ல பொறி இயல் நிபுணத்துவ மூலம் உருவாக்கப்படுகின்றன.

அதுவே ஓரியண்டின் திறமை!



ஓரியண்ட் விசிறிகள்

உருவ அமைப்பிலும் உயர்தர உழைப்பிலும் பல வருடங்கள் முன்னதாகத் திகழ்கின்றன

ஓரியண்ட் ஜெனரல் இண்டஸ்ட்ரீஸ் லிட்., கல்கத்தா-11

ஆந்திரா மற்றும் மைசூர் ராஜ்யங்களுக்கு விநியோகஸ்தர்கள்

ஹிந்துஸ்தான் டீலர்ஸ் லிமிடெட்
கெம்பகௌடா ரோடு
பெங்களூர் - 9
போன்: 70272 - தந்தி: DEALHIND

கேரளா மற்றும் சென்னை ராஜ்யங்களுக்கு விநியோகஸ்தர்கள்

ஓரியண்ட் டிஸ்ட்ரிபியூட்டர்ஸ்
விகாட்ஸ் பில்டிங்
26, எர்ரபாலு செட்டித் தெரு
சென்னை
போன் 23315 & 23445 தந்தி ORDIST



பம்பாய் ஐ. வி. ஐ. ஸ்தாபனத்தைச் சேர்ந்த திரு என். ஏ. சிவராம் அவர்களின் புதல்வி சௌ. மீனாக்ஷிக்கும் திரு தர்மராஜனுக்கும் கல்யாணம் நடந்தது.



வேத தர்ம சாஸ்திர பரிபாலன சபை ஆர்கனைசர் திரு பி.எஸ். சீதாராமய்யர் அவர்களின் குமாரர் திரு வாசுதேவனுக்கும் சௌ. சீதாலக்ஷ்மிக்கும் விவாகம் நடைபெற்றது.

அவசியம் இல்லை. இங்கிருந்துகொண்டே சிவகாமிநாதனுக்கு ஒரு புண்ணிய பிராத்தம் செய்வதாக எண்ணி, இந்த மகத்தான சேவையைச் செய்ய நான் காத்திருக்கிறேன். அவருடைய ஒரே மகன், அவருடைய குலக்கொழுந்து, நல்லபடியாக வேரூன்றி நின்றால் அதைவிட அவருடைய ஆன்மசாந்திக்கு வேறு என்ன வேண்டும்? நீங்களே சொல்லுங்கள்!''

வக்கீல் இப்படிச் சொன்னதைக் கேட்டதும் ஜமீந்தாரின் உள்ளம் மேலும் நெகிழ்ந்தது. அவர் சொன்னார்:

''வக்கீலையா! செண்பக சுந்தரி உண்மையிலேயே நல்ல பெண்ணாக இருக்கலாம். நான் இதுவரை கேள்விப்பட்டதும் அப்படித்தான். ஆனால் குமுதவல்லி? அவளை எனக்குத் தெரியும். இவ்வளவு நாட்களும் இந்தப் பெண்ணும் பையனும் இப்படியெல்லாம் நேசமாக இருப்பதை இவள் எப்படி அனுமதித்தாள் என்பதே எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது! இனி அவள் என்ன செய்வாள் என்பதை நினைக்கவே பயமாக இருக்கிறது.''

''அதெல்லாம் சரி. இந்தச் சிங்கம்புத்தூர் வட்டாரத்தில் மற்றவர்கள் எல்லாம் குமுதவல்லிக்குப் பயப்படுவதில் அர்த்தம் உண்டு. மற்றவர்களையெல்லாம் நடுநடுங்கும்படி செய்யக் கூடிய சக்தி அவளுக்கு இருக்கலாம். என்றாலும் நம்முடைய அபிமானத்துக்கும், ஆதரவுக்கும் பாத்திரமான ஒரு பையனுடைய வாழ்வில், அவள் நம்மையும் மீறி அப்படி என்ன செய்துவிட முடியும்? அதுதான் எனக்கு விந்தையாக இருக்கிறது!'' என்றார் வக்கீல்!


''வக்கீலையா! நீங்கள் சொல்வது நியாயமான வார்த்தை! வில்வநாதனுக்கு நம்முடைய ஆதரவு இருக்கிறது என்று தெரிந்தால், அவள் கொஞ்சம் தயங்குவாள். ஆனால் அவனே நம்மைச் சேர்ந்த அத்தனை மனிதர்களுக்கும் பகையாக நடந்துகொண்டு விட்டானே! இனிமேல் அவனுக்கு யார் உதவி செய்வார்கள்? அதைச் சொல்லுங்கள்?'' என்றார் ஜமீந்தார்.

''வேறு யார் உதவி செய்ய வேண்டும்? நம்முடைய அன்பு அவனிடம் இருக்கிறது என்று தெரிந்தால் போதாதா? போதுமே!'' என்றார் வக்கீல்.


''இல்லை. நான் வில்வநாதனிடம் மிகுந்த அதிருப்தியோடு இருக்கிறேன் என்ற செய்தி இதற்குள் அந்த வட்டாரம் முழுதும் பரவியிருக்கும். அப்படிப் பரவியிருப்பதால்தானே கம்பரும் பட்டரும் இங்கே வந்தார்கள். இவர்கள் இருவருக்கும் தெரிந்திருப்பது போல், குமுதவல்லிக்கும் இதற்குள் செய்தி எட்டியிருக்க வேண்டும். சந்தேகமில்லை. இந்நேரம் அவள் என்னென்ன சூழ்ச்சிகள் செய்திருக்கிறாளோ! அதனால்தான் சொன்னேன், இந்தப் பையனைப் பற்றிய கவலை என்னைத் துன்பப்படுத்த ஆரம்பித்து விட்டது. காதும் காதும் வைத்தாற்போல் அவனைச் சென்னைக்கு அனுப்பிவிட்டால் நன்றாக இருக்கும். ஒரு பெரிய பொறுப்புத் தீர்ந்துவிடும்.''

திவான்பகதூர் சற்று நேரம் மௌனமாக இருந்து யோசனை செய்தார். பிறகு எழுந்திருந்தார்.

''ஜமீந்தார் அவர்களுடைய மனசை இவ்வளவு தெளிவாகத் தெரிந்து



கோயமுத்தூர் லைப் இன்ஷூரென்ஸ் கார்ப்பரேஷனைச் சேர்ந்த திரு நாராயணன் அவர்களின் புதல்வி சௌ. சுப்புலக்ஷ்மிக்கும் திரு சுப்பராமனுக்கும் திருமணம் நடந்தது.



திரு பி. ஆர். வைத்தியநாதனுக்கும் சௌபாக்கியவதி மீனாக்ஷிக்கும் பாலக்காட்டில் சமீபத்தில் திருமணம் விமரிசையாக நடந்தேறியது.

கொண்டது எனக்குப் பெரிய உதவியாகப் போயிற்று. நான் புறப்படுகிறேன். இங்கே நம்முடைய செல்வியின் திருமணத்துக்கு வேண்டிய காரியங்கள் நடக்கட்டும். வில்வநாதனை நல்லபடியாகச் சென்னைக்கு அனுப்பி வைக்க வேண்டிய பொறுப்பை நான் ஏற்றுக் கொள்ளுகிறேன். சரிதானா?''

இவ்வாறு கேட்டார் திவான்பகதூர்: ஜமீந்தார் வியப்போடு கேட்டார்.

''என்ன வக்கீலையா? இப்படி ஒரு போடு போடுகிறீர்கள்!''

''இல்லை. உண்மையாகவே சொல்லுகிறேன். வில்வநாதனிடத்தில் ஜமீந்தார் அவர்களுக்கு இத்தனை அனுதாபம் இருக்கிறது என்று தெரிந்து கொண்டதில் எனக்கு ஒரு பெரிய மனத் தெளிவு உண்டாகி விட்டது. அந்தப் பையனிடத்தில் உங்களுக்கு மிகுந்த அதிருப்தி இருக்கிறது என்று ஒரு பொய்ச் செய்தியைப் பரப்பி, அவனுக்கே கேடு செய்வதற்குச் சிலர் காத்திருக்கலாம் அல்லவா? அப்படி ஒரு சூழ்ச்சி நடக்காதவாறு நான் பார்த்துக் கொள்ள வேண்டும். அந்த ஒரு காரியத்தை நான் செய்து விட்டால் போதும். பையன் சௌக்கியமாகச் சென்னைக்குப் போய்ச் சேர்ந்து விடுவான்...!''

இவ்வாறு சொல்லி ஜமீந்தாரிடம் விடைபெற்றுக் கொண்டு புறப்பட்டார் திவான்பகதூர் செந்தில்நாயகம்.

சிங்கம்புத்தூரிலிருந்து புறப்பட்ட வக்கீலின் கார், எங்கெங்கோ சுற்றி அலைந்து கடைசியில் வண்ணார்பேட்டை வந்து சேரும்போது இரவு பத்து மணி ஆகி விட்டது. கட்சிக்காரர்கள் பலர் அவருடைய வரவுக்காகக் காத்திருந்தார்கள். கார் வந்து வாசலிலே நின்றதும், எல்லாரும் எழுந்து நின்று வரவேற்றார்கள். குமாஸ்தா பஞ்சவர்ணம் வேகமாக நடந்து போய்க் கார்க் கதவைத் திறந்தார்!

''என்ன, விசேஷம் ஒன்றுமில்லையே?'' என்று கேட்டுக் கொண்டே காரிலிருந்து இறங்கினார் திவான்பகதூர்.

''கம்பரும் பட்டரும் ஐயாவுக்காக ரொம்ப நேரமாக மாடி அறையிலே காத்துக்கிட்டு இருக்காக'' என்றார் பஞ்சவர்ணம்.

மற்றக் கட்சிக்காரர்களையெல்லாம் இருக்கும்படி சொல்லி விட்டு மாடிக்குச் சென்றார் திவான்பகதூர்.

''யாரு பட்டர்வாளா? ஓ! கம்பரையாவா? என்ன சமாசாரம்?'' என்று கேட்டு முடிப்பதற்கு முன்பே, கம்பரும் பட்டரும் கையும் காலும் நடுங்கினார்கள். கம்பர் சொன்னார்:

''வக்கீலையா! அநியாயம் நடந்து போச்சு! சுந்தரியைக் காட்டுக்குள்ளே கொண்டு போய்க் கொலை பண்ணிவிட்டதாகப் பழி சுமத்தி, வில்வநாதனைப் போலீஸிலே பிடித்துக் கொண்டு போய் விட்டார்கள்.''

கம்பர் இப்படிச் சொன்ன போது, பட்டர் கண்கலங்கி நின்றார்.

''போலீஸிலேயா?'' என்று கேட்டார் திவான்பகதூர்.

''ஆமாம்!'' என்று சொல்லிக் கண்ணீர் வடித்தார் பட்டர். (தொடரும்)

கால்கேட்டின்மூலம் நாள் முழுவதும் வாய் துர்நாற்றத்தை அகற்றி பற்கள் சொத்தையாவதையும் தடுங்கள்!




ஏனெனில், ஒரே தேய்ப்பில் கால்கேட் டென்டல் கிரீம் துர் நாற்றத்தையும் சொத்தையையும் உண்டாக்கும் கிருமி களில் 85 சத விகிதத்தை ஒழிக்கிறது.

கால்கேட் உடனடியாக வாய்த் துர் நாற்றத்தை 10ல் 7 சந்தர்ப்பங்களில் அகற்றுகிறது என்பதையும், உணவு சாப்பிட்டவுடன் கால்கேட்டினால் பற்களைத் துலக்கும் முறையால், பற்பசை வரலாற்றிலேயே இதுவரை கண்டிராத பெருமளவில், ஏராளமான வர்களுக்குச் சொத்தை ஒழிக்கப் படுகிறது என்பதையும் விஞ்ஞான பரிட்சைகள் நிரூபித்துள்ளன: இந்த சாதனை கால்கேட் ஒன்றுக்குத்தான் உண்டு!

சாப்பிட்டவுடன் வாயை கொப்பளித் தால் மட்டும் போதாது—சாப்பிட்ட வுடன் வழக்கமாக கால்கேட் டென்டல் கிரீமினால் உங்கள் பற்களை நன்றாகத் துலக்குங்கள். இதன் வீச்சும், ஊடுருவும் தன்மையுமுள்ள நுரை பற்களின் இடைவெளிகளிலே புகுந்து, சொத்தைக்கும், துர் நாற்றத்துக்கும் காரணமாக இருக்கும் அழுகிய பதார்த்த அணுக்களை அகற்றுகிறது.

கால்கேட்டில் நீடித்திருக்கும் நூதன நறுமணத்திற்காக, குழந்தைகள் அதனாலேயே பல் துலக்க விரும்புகிறார்கள்.



வழக்கமாக கால்கேட் உபயோகித்தால், அது:

- ✔ துர் நாற்றத்தை அகற்றுகிறது
- ✔ சொத்தையைத் தடுக்கிறது
- ✔ பற்களை அதி வெண்மையாக வைத்திருக்கிறது


நீங்கள் பற்பொடியை விரும்பி னால், இந்த பலன்கள் அனைத்தை யும் கால்கேட் தூத்பவுடர் மூலம் அடையலாம். ஒரு டப்பி பல மாதங்களுக்கு வரும்.



பரிசுத்தத்திற்கும், வாயில் நறுமணம் கமழவும், வெண்ணிற பற்களைப் பெற வும் உலகத்திலேயே பெரும்பாலான மக்கள் மற்றெல்லா பற்பசைகளையும் விட கால்கேட்டையே பெரிதும் விரும்புகிறார்கள்.


காகிதமும் கத்திரிக்கோலும் - 3


காகிதப் பெட்டி





காகிதத்தில் கப்பல் செய்து உனக்குப் பழக்கம், இல்லையா? காற்றாடி, கால் சராய் மற்றும் மழை மூடிக் கப்பல் என்றெல்லாம் காகிதத்தை மடித்து எத்தனையோ செய்யலாம். இப்படிக் காகிதங்களை மடித்துச் செய்யும் வித்தை உருவங்களுக்கெல்லாம் மொழுமொழுப்பும் கெட்டியுமான காகிதம் வேண்டும். மடிப்புக்களைக் கொஞ்சமும் கோணலின்றி ஒழுங்காக மடிக்க வேண்டும். மடிப்பு அழுத்தமாக இருக்க, மடிப்பின் மீது நகங்களை அழுத்தி ஓட விடவேண்டும்.


உனக்கு இப்போது காகிதப் பெட்டி செய்யும் முறையைச் சொல்லித் தரப் போகிறேன். எட்டு அங்குலப் பக்கமுள்ள சதுரமான காகிதத்தின் எதிர் முனைகளைச் சேர்த்து மடித்து அதன் நடு மையத்தைக் கண்டுபிடித்துக்கொள் (படம் 1). நான்கு முனைகளையும் மையத்தை நோக்கி மடி (படம் 2). ஒரு சிறிய சதுரம் கிடைக்கும். அந்தச் சதுரத்தின் பக்கங்களாக AC, B பக்கங்களை அதன் மையமான Fஐ நோக்கி மடி (படம் 3). ஒரு நீண்ட சதுரம் கிடைக்கும். இந்த நீண்ட சதுரத்தின் பக்கமான GHஐயும் JKயையும் அதன் மையமான LMமை நோக்கி மடி (படம் 4). இப்போது மறுபடி ஒரு சிறிய சதுரம் கிடைக்கும். அந்தச் சதுரத்தையும் வெளிப் பக்கமாக மடித்தால் 'W' போன்ற உருவத்தில் காகிதம் வரும் (படம் 5). இனி அந்தக் காகிதத்தை இடக்கையில் பிடித்துக் கொண்டு படம் 6ல் கூறியுள்ள படி அதன் முனை மடிப்புக்களை (N) வெளியில் இழு. இதே போல் நான்கு முனைகளையும் வெளியில் இழுத்தால் படம் 7-ல் காட்டியுள்ள படி இரட்டைப்படகு உருவத்தை அடையும். P என்ற மையத்தில் காகிதத்தின் ஆறு முனைகளைக் காண்பாய். காகிதம் கிழிந்து விடாமல் லாகவமாக அந்த முனைகளை மெள்ள வெளியில் இழு (படம் 8). இப்படி இரண்டு முனைகளையும் வெளியில் இழுத்ததும் படகின் ஒரு பக்கத்து மூன்று முனைகளையும் படம் 9-ல் காட்டியுள்ளபடி Qவை நோக்கி மடி. அதேபோல மறு பக்கத்துக் காகிதத்தையும் மடித்துக் கொள். இப்போது படகின் இரு பக்கமும் இரண்டு சிறிய சதுரங்கள் உண்டாகியிருக்கும். அந்தச் சதுரங்களைப் பாதியாகக் கீழ் நோக்கி மடி (படம் 10). நீண்ட சதுரமான இரண்டு அறைகளைக் கொண்ட மணிபர்ஸ் போல ஒன்று உனக்குக் கிடைக்கும். இனி மடித்த பக்கங்களைப் பிடித்து மெள்ள, காகிதம் கிழிந்து விடாமல் இழு. பெட்டி திறந்து கொள்ளும். உருவான பெட்டியினுள்ளே இரண்டு காகித முனைகள் தூக்கிக் கொண்டிருக்கும். அவற்றைப் பெட்டியின் அடியை நோக்கிச் சமமாகப் படியும்படி அழுத்தி விடு. இப்போது உன் காகிதப் பெட்டி தயார். இனி நீ மடிக்க ஆரம்பி, பார்க்கலாம்!






























இந்தப் படங்கள் சொல்லும் கதை என்ன?



விவரங்களுக்கு அடுத்த பக்கம் பாருங்கள்!

அருமைக் குழந்தைகளே!

விருந்தை விரும்பிப் படிக்கும் உங்களுக்கெல்லாம் என்னுடைய மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். விருந்தில் இன்னும் எத்தனையோ புதுமைகள் செய்து உங்களை மகிழ்விக்க வேண்டும் என்பது என் அவா. இடையிடையே உங்கள் திறமைக்கும் கற்பனா சக்திக்கும் ஏதாவது பரிசு கொடுத்து மகிழ வேண்டும் என்றும் ஓர் ஆசை எனக்கு.

ஒரு நாள் நானும் சித்திரக்காரர் 'விஜு' மாமாவும் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தோம். உங்களுக்கு எழுதப் போகும் ஒரு கதையைச் சொல்லி அதற்குப் பொருத்தமான படம் போட வேண்டுமென்று அவரிடம் சொன்னேன். உடனே அவர் 'நீங்கள் கதையே எழுத வேண்டாம். நான் இந்தக் கதையைப் படங்களாகவே போட்டுத் தருகிறேன்' என்றார். அப்படியே மறுநாள் முதல் பக்கத்திலுள்ள படங்களைப் போட்டுக் கொண்டு வந்து விட்டார். அதைப் பார்த்ததும் 'இதைக் கொண்டே உங்களுக்கு ஒரு பரிசுத் திட்டம் தயாரித்தால் என்ன?' என்ற எண்ணம் எழுந்தது என் உள்ளத்தில். ஆசிரியரும் அதைப் பேஷான யோசனை என்று கூறி உற்சாகப் படுத்தினர்.


நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம் இதுதான். முன் பக்கத்திலுள்ள படங்களைப் பாருங்கள். பிறகு அந்தப் படங்கள் சொல்லும் கதையை எழுதுங்கள். கதை கல்கியில் அரைப் பக்கத்திலிருந்து முக்கால் பக்கத்துக்குள் இருக்க வேண்டும். எழுதின கதையோடு உங்கள் பெயர், விலாசம், வயது, தகப்பனார் அல்லது போஷகரின் கையொப்பம் இவற்றுடன், **கல்கி காரியாலயம், சிறுவர் விருந்து பகுதி, சென்னை—10.** என்ற விலாசத்துக்கு அனுப்பிவையுங்கள். பன்னிரண்டு வயதுக்குட்பட்ட தம்பி தங்கைகள்தான் இந்தப் போட்டியில் கலந்து கொள்ளலாம். கதையை ஆகஸ்ட் மாதம் 15-ந்தேதிக்குள் கிடைக்கும்படி அனுப்பிவிட வேண்டும். வரும் கதைகளுக்குள் மிகச் சிறந்த கற்பனைக்குப் பதினைந்து ரூபாய் பரிசு வழங்கப்படும்! பரிசு பெற்ற கதை அம்மாதக் கடைசி வார இதழில் பிரசுரமாகும். எங்கே கற்பனைக் குதிரை மீதேறுங்கள் பார்க்கலாம்! — **வாண்டு மாமா**

புகழ் யாருக்கு ?



'புதிய உலகம் என்று அழைக்கப்படும் அமெரிக்காவைக் கண்டு பிடித்தவர் யார்?' என்று கேட்டால் கொலம்பஸ் என்று தானே பதில் சொல்லுவீர்கள்? ஆனால் கொலம்பஸ் அமெரிக்காவைக் கண்டு பிடித்த முதல்வர் இல்லை. மூன்றுமவர்! கொலம்பஸ் பிறப்பதற்கு ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே சீன நாட்டிலிருந்து கிளம்பிய 'ஹோசின்' என்ற பௌத்த பிக்ஷு அமெரிக்க கண்டத்தைக் கண்டுபிடித்து விட்டார். அதன் பிறகு கொலம்பஸ் பிறப்பதற்கு ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன்பாகவே நார்வே நாட்டைச் சேர்ந்த லீ எரிக்ஸன் என்பவர் அமெரிக்காவைக்கண்டுபிடித்து விட்டார். மாஸாசூஸெட் மாகாணத்தில் சார்லஸ் நதிக்கரையில் எரிக்ஸன் கட்டிய வீடுகளின் இடிபாடுகளை இன்றைக்கும் காணலாம். இப்படி இருந்தும் கூட அமெரிக்காவைக் கண்டுபிடித்த பெருமை கொலம்பஸுக்குத்தான் கிடைத்திருப்பது விந்தையல்லவா? கொலம்பஸ் அமெரிக்காவைக் காண வேண்டுமென்று பிரயாணம் செய்தார்? அதுவுமில்லை. இந்தியாவைக் கடல் மார்க்கமாகக் காணச் சென்றவரின் கப்பல்களைக் காற்று கடலில் திசை மாற்றி இழுத்துச் சென்று அமெரிக்கக் கடற்கரையில் கொண்டுபோய் நிறுத்தி விட்டது.

பால் கணக்கு



ஒரு பால்காரன் தவலை நிறையப் பால் கொண்டு வந்தான். ஒருவர் நாலு ஆழாக்குப் பால் வேண்டுமென்று கேட்டார். ஆனால் அவனிடமோ ஐந்து ஆழாக்குப் பிடிக்கும் ஒரு பாத்திரமும் மூன்று ஆழாக்கு கொள்ளும் ஒரு பாத்திரமும்தான் இருக்கின்றன. நாலு ஆழாக்கு கேட்பவருக்கு அளவு குறையாமல் பாலை வீணாக்காமல் அளந்து கொடுத்தாக வேண்டும். உங்களால் முடியுமா?

விடை: மூன்று ஆழாக்கு அளவுப் பாத்திரத்தில் பாலை மொண்டு ஐந்து ஆழாக்குப் பிடிக்கும் பாத்திரத்தில் ஊற்ற வேண்டும். மறுபடியும் மூன்று ஆழாக்குப் பாத்திரத்தில் பாலை ஒருமுறை மொண்டு ஐந்தாழாக்குப் பாத்திரத்தில் ஊற்றினால் அது நிரம்பி பாக்கி ஒரு ஆழாக்கு இருக்கும். இப்போது ஐந்து ஆழாக்குப் பாத்திரத்திலுள்ள பாலைத் தவலையில் கொட்டி விட்டுக் காலியான அதில், மூன்றுழாக்குப் பாத்திரத்தில் மிச்சமுள்ள ஒரு ஆழாக்குப் பாலை ஊற்று. மறுபடியும் மூன்றுழாக்குப் பாத்திரத்தில் ஒரு முறை பாலை மொண்டு ஐந்தாழாக்குப் பாத்திரத்தில் ஊற்று. இப்போது அதில் 1+3=4 ஆழாக்குப் பால் இருக்கும்.



அத்தியாயம் 27

விடிவு காலம்

வடிவேலுவின் மனத்தில் பதிந்துபோன அந்தச் சம்பவங்கள் மூன்று வருஷங்களுக்குப் பிறகும் சற்றேனும் மழுங்கவில்லை. தாராவுக்கும் அவள் கணவருக்கு மிடையில் சில சமயங்களில் ஹிந்தியில் நடைபெற்ற சம்பாஷணைகளின் சாரத்தையும் அவள் இப்போது அவன் கூறத் தெரிந்துகொண்டான். அதே போல் தாராவும் தன் கணவர் உமாகாந்த் வடிவேலுவுடன் தனித்திருக்கையில் அவனிடம் என்ன கூறினார் என்பதையெல்லாம் விவரமாகக் கேட்டறிந்தான். அன்றைய தினம் அம்மூவருக்கு மிடையில் நடைபெற்ற உரையாடல்கள், அவர்களுடைய செயல்கள், முக பாவங்கள் முதற்கொண்டு இப்போது தாராவும் வடிவேலுவும் பேச்சினூடே ஒருவருக்கொருவர் பரிமாறிக் கொண்டார்கள். இதைத்தானே தாராவும் விரும்பினாள்?

துயரகரமான நினைவுகளை மறந்துவிடவே சாதாரணமாக எல்லாரும் முயலுவார்கள். ஆனால் தாராவோ அந்த இருபத்திநாலு மணி நேரத்தையும் வினாடி வினாடியாகப் பகுத்து அந்த ஒவ்வொரு பிரிவிலும் நிகழ்ந்தவற்றையெல்லாம் ஞாபகப் படுத்திக் கொண்டு அலசிப் பார்க்க அடங்காத ஆசை கொண்டிருந்தாள். இந்த விநோதமான மனோபாவத்தைக் குறித்து வியப்பு மிக வினா எழுப்பினான் வடிவேலு.

‘‘சாமான்யமான ஒரு மனிதரைப் பறி கொடுத்துவிட்ட சாதாரண மக்கள் காலம், மறதி இரண்டையும் கைநீட்டி வரவேற்கிறார்கள். ஆனால் நான் விநோதமான ஒரு மனிதரை இழந்துவிட்ட விநோதப் பிறவி. ஆகவே என் விருப்பு வெறுப்புக்களெல்லாம் மற்றவர்களுக்கு விநோதமாகத்தான் தென்படும். அதனால்தான் நான் இதைப் பற்றி வேறு

யாரிடமும் வாயைத் திறக்காமல் உங்களிடம் மட்டும் ஒளிவு மறைவின்றிப் பேசுகிறேன். உங்கள் நண்பர் உமா காந்தைக் குறித்துப் பாருவிடம் கூட நான் ஒரு வார்த்தை சொன்னது கிடையாது....!''

இப்படித் தாரா கூறியதும் வடிவேலுவின் சிரத்தில் ஓர் உண்மை பளிச்சிட்டது. கலாசாலையில் கல்வி பயின்ற நாட்களில் பாருவுடன் அவன் கருத்தொருமித்து இழைந்திருந்தாலும், இன்னல்கள் நிறைந்த அந்த ஒரு நாளில் விதி விளையாடிய வேளையில், காலன் தன் கொடூரமான சொரூபத்தைக் காண்பிக்கத் தொடங்கிய சமயத்தில் அவளுக்கு ஆறுதல் அளிக்க வென்று அருகில் இருந்த ஒரே மனிதன் என்ற காரணத்தால் தான் பாருவைவிடத் தாராவுக்கு மிக நெருங்கியவனாகி விட்டதை அவன் உணர்ந்தான்.

கூடவே விரக்தியுடன் யோசித்தான்: 'நான் மட்டுமென்ன? அகிலமனைத்திலுமிருந்தோரெல்லாம் ஒன்றாகத் திரண்டு அவளுக்குச் சாந்தி பிறக்கச் சகாயம் செய்யும் நோக்கத்தோடு வந்திருந்தால்தான் என்ன? கண்ணிமைக்கும் பொழுதுக்குள் அவளைப் பீடித்த துரதிருஷ்டம் நீங்கி விட்டிருக்குமா? அந்த ஆங்கிலேய அதிகாரியின் கையிலிருந்த குண்டாந்தடி பூங்கொடியாக மாறி விட்டிருக்குமா?'

உமாகாந்தின் முதுகைத் தடி பதம் பார்த்தபோது அவர் அடைந்திருக்கக் கூடிய வலியைப் போல் பத்து மடங்கு அதிகமான நோவைத் தாரா அனுபவித்தாள் என்பதில் வடிவேலுவுக்குச் சந்தேகமிருக்க வில்லை. 'அவர் உடலின் மீது விழுந்த ஒவ்வோர் அடியையும் தானே ஏற்றுக் கொண்டு அனுபவிக்கும் சக்தியைத் தாரா இறைவனிடமிருந்து வரமாகக் கேட்டுப் பெற்றுவிட்டாளா?' அப்படித்தான் தோன்றியது வடிவேலுவுக்கு.

உமாகாந்தினிடமிருந்து ஒரு முனகல் சத்தம் எழவில்லை; தாரா வீறிட்டு அலறினாள். இடி விழுந்த அந்தத் தேசபக்தரின் உடம்பில் ஒரு நெளிவு சுளிவில்லை. தாரா துடிதுடித்தாள், தவித்தாள். அவர் ஒரு சொட்டுக் கண்ணீரைச் சிந்த வில்லை; தாரா தாரை தாரையாகக் கண்ணீர் வடித்தாள்.



அதை நினைத்தபோது வடிவேலுவுக்கு இன்றைக்கும் ஆச்சரியம் தாங்கவில்லை. 'வாழ்க்கைத் துணைவியானால் கணவனுடைய கவலைகளைப் பகிர்ந்து கொள்வதன் மூலம் அவன் மனச்சுமைகளைப் பெருமளவுக்குக் குறைத்து அவனுக்கு நிம்மதி கிடைக்கச் செய்ய முடியும் என்பார்களே, அது போல் உடல் வேதனைகளிலும் பங்கு பற்றுவது என்பது சாத்தியமான காரியம்தானா? உமாகாந்த் அவளுடன் எதையும் பகிர்ந்து கொண்டதாகவும் தெரியவில்லையே? முழுக்க முழுக்க எல்லாத் துன்பத்தையும் அவள் மீதே ஏற்றி விட்டு அமைதியாக, அசையாமல் படுத்துக் கிடப்பது போலிருந்தாரே அவர்?'

இது பற்றித் தாராவிடம் மெல்லக் கேட்டான் வடிவேலு. அவள் கூறிய பதில் அவனைத் திடுக்கிட வைத்தது.

''உமாகாந்தின் வைராக்கியம் தான் அதற்குக் காரணம்'' என்றாள் அவள். ''பாரதத் தாயின் கரங்களில் பூட்டப் பட்டுள்ள விலங்குகளை ஒடித்தெறியும் முயற்சியில் தமக்கு ஏற்படும் இன்னல்களையெல்லாம் இன்பமாக மாற்றிக் கொள்ளக் கூடிய நெஞ்சுறுதியை அவர் பெற்றிருந்தாராம்! அவரைப் பொறுத்தவரையில் குருதியைக் கண்டு கலங்குவது கோழைத்தனம்; போலீஸ் தடியடிக்குப் பயப்படுவது அவமானம்; சிறைவாசத்துக்கு அஞ்சுவது வெட்கப்பட வேண்டிய விஷயம்!''

''நிஜமாகவா?'' என்று கேட்டான் வடிவேலு வியப்புடன். இந்தச் சமாதானத்தைக் கண்ணை மூடிக்கொண்டு அப்படியே ஒப்புக்கொள்ளத் தன்னால் இயலவில்லை என்பதை அந்தச் சொல்லை உச்சரித்த விதத்திலேயே எடுத்துக் காட்டினான்.

''நம்புவது கஷ்டம், ஆனால் உண்மை அதுதான்'' என்றாள் தாரா.

''அப்படியானால் ...''

''எதுவானாலும் தயங்காமல் கேளுங்கள். அதைத்தான் நான் உங்களிடம் எதிர் பார்க்கிறேன். அவரைப் பற்றிய விவாதத்தில் இறங்குவதானாலும் பரவாயில்லை.''

"நீங்கள் திடசித்தத்துடன் இருப்பதாக வாக்களித்தால் சொல்கிறேன்."

அவனுடைய மௌனத்தைச் சம்மதத்துக்கு அறிகுறியாகப் பாவித்துக் கொண்டு மேலே தொடர்ந்தான் அவன்: "ஆம்புலன்ஸைத் தருவித்து அவரை ஏற்றிக்கொண்டு எப்படியோ ஆஸ்பத்திரிக்குப் போய்ச் சேர்ந்தோமல்லவா? அங்கே, ஏற்கனவே ஒருமுறை முறிந்து சீராக்கப்பட்ட முதுகெலும்பு மீண்டும் அதே இடத்தில் விண்டு விட்டதென்றும், அந்த நடுத்தண்டினூடே ஓடுகின்ற நரம்புக் குவியல்கள் நசுங்கி விட்டிருக்கின்றனவென்றும் உமாகாந்த் உயிர் பிழைப்பதே துர்லபம்தான் என்றும் நமக்குத் தெரிய வந்தன, இல்லையா?"

"ஆமாம்" என்றபோது தாராவின் குரல் இலேசாக நடுங்கியது.

"அதுவரையில் பல்லைக் கடித்தபடி பொறுத்துக் கொண்டிருந்தவர் அப்போது புலம்பத்தொடங்கி விட்டாரே?"

தாரா நிலைகுலைந்து அழ ஆரம்பித்து விட்டாள்.

"பார்த்தீர்களா? இதற்குத்தான் நான் தயங்கினேன். நீங்கள் பிடிவாதமாய் என் வாயைப் பிடுங்கினீர்கள்" என்றான் வடிவேலு, அவளுக்காகப் பரிதாபப்பட்டு.

மிகுந்த சிரமத்துடன் தன்னைத் தேற்றிக் கொண்டு, தாரா அவனை நிமிர்ந்து பார்த்தாள். "அவர் அப்போது கூறிய மொழிகளை நீங்கள் கேட்டிருக்க மாட்டீர்கள். சாவைக் கண்டு அவர் மனம் தளரவில்லை. இறந்து போகப் போகிறோமே என்பதற்காக அவர் கதறவில்லை. அவருடைய முகத்துக்கு நேராகத் தலையணையில் சிரம் தாழ்த்தி யிருந்த என்னிடம் காதோடு காதாக அவர் மன்னிப்புக் கோரினார்! 'நாட்டுக்கு நான் தியாகி, உனக்கு நான் துரோகி! தாரா, என்னை மன்னித்துவிடு! மன்னித்து விட்டேன் என்று வாய் திறந்து சொல்லு!' இதைக் கூறி விட்டுத்தான் அவர் பச்சைக் குழந்தை போல் விசித்து விசித்து அழுதார்!"

வடிவேலுவுக்கு இதயத்தை உறுத்தியது. "தாரா! அவசரப்பட்டு நான் ஏதோ உளறி விட்டேன். உமாகாந்த் உண்மையை உணர்ந்து விட்ட உத்தமர். மனிதனுக்கு நாட்டுப் பற்று மட்டுமல்ல, குடும்பப் பொறுப்பும் வேண்டும்; கட்டிய மனைவியைக் காப்பதும் தம் கடமைதான் என்பதை அறிந்துகொண்டுவிட்டவர். அன்று துறைமுகத்துக்குச் சென்று கொண்டிருக்கையில் உங்கள் இருவருக்குமிடையில் நடைபெற்ற தர்க்கத்தில் அவர் தோற்றுப் போன போது இந்தப் படிப்பினையை அவர் பெற்றிருப்பார்."

தாரா 'அதுமட்டுமில்லை' என்பது போலத் தலையசைத்தாள். "உயிர் பிரியுமுன்னர் கடைசியாக அவர் கூறிய அந்த வார்த்தைகளின் தாத்பரியம் முழுவதையும் என்னைத் தவிர வேறு யாராலுமே புரிந்துகொள்ள முடியாது" என்றாள் அவள். சற்று நேரம் அமைதியாகச் சிந்தனையில் ஆழ்ந்திருந்து விட்டு, "இளம் வயதில் சுபாஷ் போஸ் எடுத்துக் கொண்ட சபதங்களைப் பற்றி நீங்கள் கேள்விப்பட்டிருக்கிறீர்களா?" என்றாள்.

அடி உதட்டைப் பிதுக்கினான் வடிவேலு. "நீங்கள் சொல்லுங்கள்; இப்போது தெரிந்து கொள்கிறேன்."

"மதுவையும் மங்கையையும் தீண்டுவதில்லை என்பது அவருடைய தீர்மானங்களுள் ஒன்று. நாடு விடுதலை பெறும் வரையில் கல்யாணம் பற்றிக் கனவில் கூட எண்ணுவதில்லை என்று தமக்குத் தாமே சத்தியம் செய்து கொண்டார்!"

வடிவேலுவின் உடல் நடுங்கியது. உள்ளம் பதறியது. சாய்வு நாற்காலியைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு நின்றான் அவன். "தாரா! நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?" என்றபோது அவன் நாக் குளறியது.

"உங்கள் மனத்திலிருப்பதைத்தான் கூறுகிறேன்!" என்றாள் தாரா, சற்றும் தடுமாற்றமின்றி. "உமாகாந்தும் தமது தலைவரைப் பின்பற்றிச் சபதமெடுத்துக் கொண்டிருந்தார். அந்தச் சத்தியத்தை மீறச் செய்த என்மீது அவருக்கு அடித்தளத்தில் வெறுப்பு இருந்து கொண்டே யிருந்தது. ஆனால் அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல் அவர் என்னுடன் இன்முகத்துடன் உறவாடினார்! 'துரோகி' என்று அவர் தம்மைத் தாமே நொந்து கொண்டதன் அர்த்தம் என்ன என்பது இப்போது தெளிவாயிற்றா?"

இப்படிச் சொல்லி விட்டுத் தாரா வேறு புறமாய்த் திரும்பிக் கொண்டாள். அங்கு ஓரிரு விநாடிகளுக்கு நிலவிய மௌனத்தைக் குலைத்துக் கொண்டு, சோகத்தின் இருப்பிடமான ஓர் இதயத்தின் அடிவாரத்திலிருந்து குமுறி வெளிப்பட்டது ஒரு விம்மல் ஒலி.

அவள் சிறிது சிறிதாக உணர்வு தேய்ந்து அழிவதைத் தடுத்து நிறுத்த எண்ணி, அவளுடைய தோள்களில் வடிவேலு விரல்களை மெல்லப் பதித்தான். உற்றார் உறவினர் யாரும் பக்கத்தில் இல்லாத ஒரு சந்தர்ப்பத்தில் கணவன் கண் மூடியதைக் கண்டு அவள் ஆவி துடிக்க அழன்று அல்லலுற்றுச்

சாய்ந்த அந்தத் தருணத்தில் தேறுதல் கூறி அவளைத் தன் தோளில் தாங்கினான் அவன். ''கடவுளே! என்னிடம் கருணை காட்டி மன்னித்து விடு!'' என்று மானசீகமாக வேண்டிக் கொண்டான். அதே சொற்களை மீண்டும் இன்றைக்கு முணுமுணுத்தான் வடிவேலு. நெக்குருகி, நிலை தடுமாறிய அவளிடம் நயந்து கூறினான்: ''தாரா! சிரமசாத்தியமான காரியம் என்றாலும் தயவு செய்து எனக்காக உங்கள் துயரத்தைக் கட்டுப்படுத்திக் கொள்ள மாட்டீர்களா?'' என்று மன்றாடினான்.

இயல்பாக அவன் கரங்களைப் பற்றிக் கண்களில் ஒற்றிக் கொண்டாள் அவள். ''மிக மிகப் பயங்கரமான ஒரு சூழ்நிலையில் எனக்குப் பக்கபலமாக அன்றைக்கு இருந்தீர்கள். அன்று நான் மட்டும் தனிமையில் இருந்திருந்தால் அந்த அதிர்ச்சிகளை என்னால் தாங்கியே இருக்க முடியாது. பைத்தியமே பிடித்திருக்கும் எனக்கு. தியாகம் என்றும் துரோகம் என்றும் எதையாவது பிதற்றிக் கொண்டு சித்த ஸ்வாதீனமின்றி அலைந்திருப்பேன். அப்படி ஏதும் நடைபெறாமல் என்னைக் காப்பாற்றினீர்கள். இன்றைக்கும் யாரிடமும் சொல்லாமல் நான் பொத்திப் பொத்தி வைத்திருந்த ஒரு விஷயத்தை நீங்கள் என்னிடமிருந்து எப்படியோ கிரகித்துக் கொண்டீர்கள். அதன் மூலம் எனக்குப் பெரிய உபகாரம் செய்திருக்கிறீர்கள். என் உள்ளத்தை இலேசாக்கி ஓரளவுக்கு நிம்மதியும் நிலவச் செய்திருக்கிறீர்கள். உண்மையாகவே நான் உங்களுக்கு ரொம்பவும் நன்றிக் கடன்பட்டிருக்கிறேன்.''

''கலங்காதீர்கள், தாரா! உங்களுக்கும் ஏதாவது ஒரு விதத்தில் விடிவுகாலம் வராமல் போகாது'' என்று கம்மிய குரலில் கூறினான் வடிவேலு.

அந்தகாரம் நீங்கி விடிந்து விட்டதற்கு அடையாளமாகச் சேவல் கூவியது.

அத்தியாயம் 28

கொந்தளிப்பு

பள்ளியைத் தொடங்கிப் பல நாட்களாகி விட்டன. படிக்கப் போக வேண்டும் என்றாலே அலுத்துச் சலித்துக் கொள்ளும் சிறுவர் சிறுமியர் ஏதோ ஒருவித மந்திர சக்தியால் கட்டுண்டவர்களைப் போல் மகிழ்ச்சியோடு மணி அடிப்பதற்கு வெகு நேரம் முன்னதாகவே சென்றார்கள். தாராவும் செல்லமும் வெங்கிட்டு வாத்தியாரும் மூன்று பகுதிகளாகச் சிறுவர் சிறுமியரைப் பிரித்துக் கொண்டு கல்வி அறிவு புகட்டும் காட்சியைப் பலகணி வழியாகக் காணும்போது வடிவேலுவுக்குக் கிளுகிளுப்பு உண்டாகும். பாடங்கள் முடிந்ததும் அந்த இளஞ்சிறார்கள் கைத் தொழில்களையும் பயின்றார்கள். கிராமத்தில் வசித்த பலரும் அவர்கள் எந்தத் தொழிலைக் கொண்டு ஜீவனம் நடத்துகிறார்களோ அந்தத் தொழிலைக் குழந்தைகளுக்குக் கற்றுக் கொடுக்க 'நான் முந்தி நீ முந்தி' என்று போட்டி போட்டுக் கொண்டு முன் வந்தார்கள். அவர்களுள் கைதேர்ந்தவர்களை வடிவேலு பொறுக்கி எடுத்தான், வருங்காலச் செல்வங்களின் வாழ்க்கை வளம் பெற உதவ. மத்தியானத்துக்கு மேல் மர நிழலிலும் தாழ்வாரத்திலும் நெசவு, கூடை, பாய் பின்னுதல், ராட்டை நூற்றல், தச்சு வேலைகள் முதலியன நடைபெற்றன. பூச்செடிகளும் காய்கறித் தோட்டமுமாக அந்தக் குடிசையைச் சுற்றிலும் பெரிய நந்தவனமே உருவாகி விட்டது.

பள்ளியைக் கவனிப்பதுடன் தாரா நின்று விடவில்லை. தேனூர் முழுதுமே அவளுடைய பள்ளிக்கூடமாக மாறி விட்டது போல் தோன்றியது. ஏற்றத்தாழ்வு என்றெல்லாம் பாராமல் கிராமத்தில் எல்லாருடைய வீடுகளுக்கும் அவள் விஜயம் செய்வாள், குசலம் விசாரிப்பாள். தன் இனிய சுபாவத்தினால் அவள் அனைவருக்கும் சிநேகத்தைக் கொடுத்து ஆசானாகவும் விளங்கினாள். வாத்தியாரம்மாவைத் தூரத்தில் கண்டதுமே கையெடுத்துக் கும்பிடாதவர்கள் இல்லை. தங்கள் குறைகளைச் சொல்லி முறையிடுவார்கள், பரிகாரம் தேடுவார்கள். 'புருஷன் — மனைவி தகராறு? வாத்தியாரம்மாவைக் கேளு, என்ன சொல்றாங்க என்று! பிள்ளைக்குக் காய்ச்சலா? வாத்தியாரம்மாவிடம் போ; ஏதாவது மருந்து கொடுப்பாங்க. வீட்டிலே பானை பொங்கவில்லையா? வேலை இல்லாத் தொல்லையா? எல்லைச் சண்டையா? குத்தகை எடுப்பதில் குளறுபடியா? பள்ளிக்கூடம் விட்டதும் சென்றால் எல்லாவற்றையும் வாத்தியாரம்மா சமரசமாகத் தீர்த்துவைத்து விடுவாள்!'


அவர்களுடைய சிக்கல்களைக் கேட்டறிந்து விடுவித்ததுடன் அவர்களிடமுள்ள குறைகளையும் சுட்டிக் காட்டி நிவர்த்திக்கச் செய்வதில் கண்ணு

யிருந்தாள் தாரா. சுற்று வட்டாரங்க ளெல்லாம் சுத்தமா யிருக்க வேண்டியதன் அவசியத்தை வற்புறுத்துவது முதற்கொண்டு வீட்டுப் பெண்க ளுக்கு இல்லத்தை அழகுபடுத்தும் கலையைக் கற்பிப்பது வரையில் பல வற்றிலும் அக்கறை செலுத் தினுள் அவள். இதனுலெல் லாம் அந்தக் கிராமம் 'பழகிப் போன பழைய தேனுாரா இது?' என்று பிரமிக் கும்படி புதுப் பொலிவு பெற்றுப் பரிணமித்தது.

இதை யெல்லாம் பார்த்தபோது வடி



வேலுவுக்கு ஒரு பக்கம் பெருமையாக இருந்த போதிலும்
கொஞ்சம் வருத்தப்படவும் செய்தான். அதற்குக் காரணம்
அவள் முன்னைப்போல் அதிகமாக வீட்டில் தங்குவதில்லை. வடி
வேலுவுடனும் சரி, மற்றவர்களுடனும் சரி, அடிக்கடி அள
வளாவிக் கொண்டிருப்பதில்லை. சதாசர்வ காலமும் ஏதாவது
புதுப் புதுப் பிரச்னைகள் கிளர்ந்தெழுந்து அவள் சிந்தனையை
ஆக்கிரமித்துக் கொண்டேயிருந்தன. தாராவுடன் பேசிப்
பழகுகிற நேரம் முன்னைக் காட்டிலும் மிகக் குறைவாக
இருந்தாலும் உறவாடுகிற அந்த ஒரு சில நிமிஷங்களில் மனத்
தால் தான் அவளுக்கு மிகவும் சமீபத்திலிருப்பதை வடிவேலு
வினால் உணர முடிந்தது. அதுவரையில் நிலவாத ஒருவித
அந்நியோந்நியபாவம் இருவருக்குமிடையே இப்போது வளர்ந்து
விட்டிருப்பதை அவன் அறிந்து கொண்டான். மற்ற
வர்களுடன் பகிர்ந்து கொள்ளாத, பகிர்ந்துகொள்ள
முடியாத அந்தரங்கங்களைப் பரிமாறிக் கொண்டது
இந்த இதயபூர்வமான நெருக்கத்தை உண்டு பண்ணி
யிருந்தது. அவ்விருவரது வாழ்க்கையிலும் பெரு
மளவுக்கு] மனத்தாங்கல்களை அளித்த சம்பவங்களை







"இரவும் பகலுமா என்ன எழுதிண்டு இருக்கேள்?"

"ஒரு நாவல் எழுதி முடித்து அதைப் படித்துக்கொண்டிருக்கிறேன்."

"அட, ராமச்சந்திரா! ஒரு பன்னிரண்டணாவை வீசி எறிந்தால் ஒரு நாவல் கிடைக்கிறது. வாங்கிப் படித்தால் போதாதா?..... அதுக்காக நீங்களே எழுதிப் படிக்கணுமா என்ன?"

ஓர் ஒளிவு மறைவின்றி அவர்கள் கூறிக் கொண்டது. சாதாரணமாக யாருக்கும் புலனாகாத ஒருவிதப் பிணைப்பை உருவாக்கியிருந்தது. கண்ணுக்கினிய காட்சிகளைக் கணக்கின்றிக் கொண்ட காவிரிக் கரை ஓரமாக உலவி வரும் போதும், தண்ணென்றிருக்கும் தென்னந்தோப்பு வழியே விச்ராந்தியாக நடந்து வருகையிலும் அவர்கள் ஒருவரை யொருவர் பார்த்துக் கொண்ட பார்வையிலே அர்த்தபுஷ்டி நிறைந்திருந்தது. பேச்சிலே பரிவு மிகுந்திருந்தது. இனம் புரியாத ஒரு மனக் கிலேசத்துடனேயே அவர்கள் உரையாடினார்கள்.

இந்தப் பேச்சு வார்த்தைகளின் போது உமாகாந்தைப் பற்றி வடிவேலு இன்னமும் விவரமாகப் பல விஷயங்களைத் தாரா தங்குதடையின்றி மனம் விட்டுச் சொல்லக் கேட்டுத் தெரிந்து கொண்டான். ஒன்பது வருஷங்களுக்கு முன்னால் — 1930–31-ல்— தேசம் முழுவதிலும் சுதந்திரப் போராட்டம் ஒரு தீவிர கட்டத்தை அடைந்திருந்தது. ஒத்துழையாமை இயக்கம், வரிகொடா இயக்கம், உப்பு சத்தியாக்கிரஹம் போன்ற கிளர்ச்சிகள் பிரிட்டிஷ் ஏகாதிபத்திய மாளிகையின் தூண்களை அசைக்கத் தொடங்கிய காலம் அது. வடமேற்கு எல்லைப்புற மாகாணத்தில் எல்லைப்புற காந்தியின் தலைமையில் ஆயிரக்கணக்கான செஞ்சட்டை வீரர்கள் அமைதியாக அணிவகுத்து வந்து அந்நிய ஆட்சிக்கு எதிராக மறியல் செய்தார்கள். அவர்களை நோக்கிச் சுடுமாறு ஏவிவிடப்பட்ட துருப்புக்கள் தங்கள் ஆங்கிலேய அதிகாரிகளின் கட்டளைக்குக் கீழ்ப்படிய மறுத்தன! குஜராத்தில் வல்லபாயின் தலைமையிலும் அலகாபாத் ஜில்லாவில் நேருவின் மேற்பார்வையின் கீழும் வரிகொடா இயக்கம் நடைபெற்றது. மகாத்மா தண்டி யாத்திரையைத் தொடங்கிய போது தென்னாட்டில் வேதாரண்யத்துக்கு நடந்தார் ராஜாஜி. காந்தி இர்வின் ஒப்பந்தமும் அதைக் காற்றிலே பறக்கவிட்ட பிரிட்டிஷ் ராஜதந்திரிகளின் மோசடியும் பகத் சிங் தூக்குத் தண்டனை பெற்றதும் மோதிலால் நேரு அமரத்துவம் அடைந்ததும், வட்டமேஜை மகாநாடும் எல்லாம் இந்த இரு ஆண்டுகளில் நடைபெற்றவைதான். இப்படி நாட்டின் மற்றப் பகுதிகளில் சூறாவளி வீசியதென்றால் வங்காளம் எரிமலையாகக் கொந்தளித்தது. ஹிஜ்லி என்னுமிடத்தில் கைதிகள் முகாமில் கலகம் நடந்ததாக ஒரு கலப்படமற்ற பொய்யைக் கூறிப் போலீஸார் கண்மூடித்தனமாகச் சுட்டனர். இருவரைக் கொன்றனர்; இருபது பேர்களைப் படுகாயப்படுத்தினர். சிட்டகாங்கில் ஒரு பயங்கரவாதி முஸ்லிம் போலீஸ் அதிகாரி ஒருவரைச் சுட்டுக் கொன்று விட, இதைச் சாக்கிட்டு இந்து—முஸ்லிம் சண்டைகளைக் கிளப்பி விட்டனர் அதிகாரிகள். நகரில் பட்டப் பகலில் கொள்ளையடிக்குமாறு குண்டர்களை ஏவிவிட்டு வேடிக்கை பார்த்தனர். இதன் எதிரொலி மிட்னாபூரில் கேட்டது. மூன்று பிரிட்டிஷ் மாஜிஸ்திரேட்டுகள் அடுத்தடுத்துச் சுட்டுக் கொல்லப்பட்டனர். ஊரடங்குச் சட்டம் பிறப்பித்தார்கள், ஆட்சி நடத்தியவர்கள். சைக்கிளில் போவதைக் கூடத் தடை செய்தார்கள். ஒவ்வொருவரும் அடையாளச் சீட்டுகளை வைத்திருக்க வேண்டும் என்று விதி வகுத்தார்கள். புரட்சியாளர் பலர் தூக்குத் தண்டனை பெற்றனர். அரக்க வெறியும் மிருகத் தன்மையும் கோர தாண்டவமாடிய சூழ்நிலைக்கு மத்தியிலிருந்த சுபாஷ் போஸ் ஆங்கிலேயனுக்குக் கொடுத்த தொந்தரவு கொஞ்ச நஞ்சமல்ல! கிளர்ச்சிகளைத் தூண்டி விடுவதுடன் நில்லாமல் அதிகார வர்க்கத்தைச் சேர்ந்தவர்களுடைய நடவடிக்கைகளை யெல்லாம் கூர்ந்து கவனித்து அவர்கள் இழைத்த கொடுமைகளையும் செய்த குற்றங்களையும் 'தவறு! தவறு!' என்று தயங்காமல் பன்முறையும் இடித்துக் காட்டி அநீதிகளுக்குப் பரிகாரம் தேடுவதில் முழு

மூச்சுடன் இறங்கினார். போலீஸார் போட்ட உத்தரவுகளை மதியாமலும், அடக்கு முறைகளை அலட்சியப்படுத்தியும் அவர் மேற்கொண்ட இந்த முயற்சியிலே அவருக்கு உறுதுணையாக நின்றவர் உமாகாந்த். சுபாஷ் பாபுவினால் மிகவும் உபத்திரவத்துக்கு உள்ளான வங்கப் போலீஸ் உத்தியோகஸ்தர்கள் வட்டமேஜை மகாநாட்டிலிருந்து, காந்திஜி ஏமாற்றமடைந்து திரும்பிய மறுமாதம், 1932-ம் வருஷத்தின் தொடக்கத்தில், காங்கிரஸ் சட்டவிரோதமானது என்பதாக அரசாங்கம் அறிவித்த போது அகமகிழ்ந்தார்கள். பரவலாகத் தலைவர்கள் அனைவரும் கைது செய்யப்பட வேண்டும் என்றபோது ஒரு நிம்மதிப் பெருமூச்சுடன் சுபாஷ் பாபுவைச் சிறையில் தள்ளினார்கள். நான்கே மாதங்களுக்குள்ளாக எண்பதாயிரம் மக்களைச் சிறையிலடைத்த பிரிட்டிஷ் ஆட்சி உமாகாந்தை வெளியே விட்டுவைக்கவில்லை.

இதன் பின்னர் நாட்டில் புயலுக்குப் பின் அமைதி என்ற நிலை ஏற்படவில்லையாயினும் தலைவர்களெல்லாம் சிறையிலிருந்ததால் பெருமளவுக்கு விடுதலைப் போரின் வேகம் தணிந்துதானிருந்தது. தண்டனையின் கால அளவு தீர்ந்து போய் வெளியே வந்ததும் உமாகாந்த் தம் தலைவருடன் தொடர்பு கொள்ள முடியாத காரணத்தால் துடுப்பு இல்லாத தோணி போலத் தத்தளித்தார். சுபாஷின் உடல்நிலை கேவலமடைந்து வந்தது. ஐரோப்பா சென்று சிகிச்சை பெற அவரைச் சர்க்கார் அனுமதிப்பார்கள் என்று தோன்றியது. தமக்குக் கட்டளையிட்டு வேலை வாங்க யாருமில்லாததால் என்ன செய்வது என்று புரியாமல் விழித்த உமாகாந்த் பெற்றோர்களையாவது பார்த்து விட்டு வரலாம் என்கிற நோக்கத்தில் கான்பூருக்குப் பயணமானார்.

அங்கேயோ, செல்வச் சீமானாக வளர வேண்டிய ஒரே மகன், நாதியற்றவன் போல் அலைந்து திரிந்து கொண்டிருப்பதைத் தடுக்கத் தங்களால் முடியவில்லையே என்று அவருடைய பெற்றோர்கள் கண்ணீர் உகுத்துக் கொண்டிருந்தனர். கலகங்களுக்கு மத்தியில் உமாகாந்த் கவலையின்றி இருந்தாலும் பெற்ற மனம் கலவரமடையத்தான் செய்தது. ஒருமுறை அவர் தடியடி பட்டது கேட்டுத் தவியாய்த் தவித்தவர்கள், மகன் திரும்பி வந்ததைக் கண்டதும் ஆனந்தம் தாங்காமல் அவனை அப்படியே கட்டி அணைத்து உச்சி முகர்ந்தனர்.

கல்யாணம் என்று ஆகி அழகான மனைவியாகவும் வாய்த்து விட்டால் அவனை விட்டு அசையமாட்டான் என்று அவர்களுக்கு ஒரு சபலம். குடும்பப் பொறுப்பு உண்டாகித் திருந்தி விடுவான் என்று உள்ளபடியே நம்பினார்கள்.



''இந்தத் தொழிலாளியின் ஊழியத்தைப் பாராட்டி இந்த மெடலை இவருக்கு அணிவிக்கிறேன். மற்றும் ரொக்கமாக ரூபாய் ஆயிரத்தை இவர் பேரில் பாங்கியில் போட்டு அக்கௌண்டு ஒன்று ஏற்படுத்தி விடுகிறேன்'' என்றார் முதலாளி.

''மன்னிக்கணும் சார்! மெடலை பாங்கியில் போட்டு விட்டு என்னிடம் பணத்தைக் கொடுத்துவிட முடியாதா?'' என்று கேட்டார் தொழிலாளி.

ஆனால் உமாகாந்த் பிடிவாதமாக அவர்கள் வேண்டுகோளுக்கு இசைய மறுத்தார். இன்னும் ஒரு வார்த்தை திருமணத்தைப் பற்றிப் பேசினால் தியாகத் தீயில் குதிக்கத் திரும்பவும் வீட்டை விட்டு ஓடிப் போய் விடுவதாய்ப் பயமுறுத்தினார். சும்மா இருக்கும் சங்கை ஊதிக் கெடுக்க வேண்டாமென்று தாயும் தந்தையும் தாற்காலிகமாக வாளாவிருந்து விட்டனர்.

மூன்று வருஷங்களுக்கு மேல் தனிமையில் கிடந்து, அழுது வடிந்த நாட்களை எப்படியோ கழித்தார் உமாகாந்த். வாழ்க்கையில் முன்பிருந்த பரபரப்பு இல்லை, ஊக்கமில்லை, உற்சாகமில்லை. 'சப்' பென்றிருந்தது அவருக்கு.

இப்படி அவர் எதிலுமே எந்தவிதமான சுவாரசியமும் கொள்ளாமல் ஏனோதானோ வென்று காலத்தை ஓட்டிக் கொண்டிருந்த சமயத்தில்தான் ஒருநாள் துவாரகாநாத் அவர் வீட்டுக்கு மகள் தாராவுடன் வந்து சேர்ந்தார்.

(தொடரும்)

முகூர்த்த வேளை

கோமதி ஸ்வாமிநாதன்



நாயனக்காரர் தன்யாசி ராக ஆலாபனையை முடித்து விட்டு 'சங்கீத ஞானமு' என்ற பாட்டின் மூலம் தம் சங்கீத ஞானத்தைக் காட்ட ஆரம்பித்திருந்தார். பந்தலின் மற்றொரு மூலையில் அமர்ந்திருந்த ஒரு சங்கீத ரசிகரின் முகம் சுருங்கியது. 'நாயனம் கற்றுக் கொடுத்தவரின் பேரைக் கெடுத்து விடுவான் போலிருக்கே' என்ற எண்ணக் கீற்று அவர் நெற்றிச் சுருக்கமாகப் படிந்ததோ, என்னவோ ?

நல்லவேளையாக நாயனக்காரர் குழாய் வழியாக உதிர்த்த அபஸ்வரங்களைக் கேட்பவர்கள் அப்படியே அள்ளிக் கொண்டு போய் விடுவதைத் தவிர்க்க வேண்டும் என்ற எண்ணத்தினாலோ என்னவோ தவில்காரர் நாயன ஓசையை அடக்குமளவுக்குத் தம் கைவரிசையைப் பலமாகவே தம் வாத்தியத்தில் காண்பித்துக் கொண்டிருந்தார். 'காட்டுக் கம்பும் மாட்டுத் தோலும் அகப்பட்டதுன்னு கொல்றான் ஐயா' என்று நடந்து கொண்டே ஒருவர் சொன்னது நிச்சயமாய்த் தவில்காரர் காதில் விழுந்திருக்காது. ''டேய், ராமு! இப்படித் தள்ளி வந்து நின்னுக்கோ! காது செவிடாய்ப் போகப் போகுது'' என்று ஒரு தாயார் தன் ஆறு வயதுச் சிறுவனைப் பார்த்துக் கத்தியது வேண்டுமானால் விழுந்திருக்கலாம்.

தவில் நாதத்துக்குப் போட்டியாக முன் கூடத்திலிருந்து எழுந்த மந்திர கோஷம் விட்டு விட்டு எழுந்து தேய்ந்து கொண்டிருந்தது.

வாசல் கல்யாணப் பந்தலை ஒட்டியிருந்த திண்ணையில் நாலைந்து பேர்கள் உட்கார்ந்திருந்தார்கள். இருபதிலிருந்து அறுபது வயது வரை வியாபிக்கும் கோஷ்டி அது.

''ஏண்டா சீனு! உனக்கு எப்போடா கல்யாணம்?'' என்ற கேள்வியைப் போட்டார் ஒரு நடுத்தர வயதுக்காரர்.

''வாக மாமா! பயப்படாதீர்கள். நான் எப்போது கல்யாணம் பண்ணிக் கொண்டாலும், இங்கே வந்திருக்கும் சமையற்காரக் கோஷ்டிக்கே ஏற்பாடு பண்ணிவிடச் சொல்கிறேன். காலையில் சாப்பிட்டதைப் போல் இரண்டு மடங்கு இட்லி, பொங்கல் சாப்பிடலாம்'' என்றான் சீனு என்று குறிப்பிட்ட இளைஞன்.

''ஓஹோஹோ! நம்ப வாக பதினேழு இட்லி, சாப்பிட்டதைச் சொல்கிறாயா? நம்ப வாக இலையிலே உட்கார்ந்ததுமே பரிசாரகன், ரவை உப்புமா கிண்டப் பின்கட்டில் ஏற்பாடு செய்து விட்டான். அப்புறம் வந்தவர்களெல்லாம் திண்டாடக் கூடாதே என்ற கவலை அவனுக்கு'' என்றார் மற்றொரு நடுத்தர வயதுக்காரர்.

''பத்துக் கல்யாணத்திலே ஒரு கல்யாணத்தில்தான் நல்ல சாப்பாடு அமைகிறது. போன வாரம் மிட்டாதார் வரதராஜன் வீட்டுக் கல்யாணத்துக்குப் போயிருந்தேன். வரதராஜன் பெண்ணுக்குக் கல்யாணம். ஒரே வைரக் கல்லாக இழைத்துப் பெண்ணுக்குச் சூட்டியிருந்தான். அதற்குப் போட்டி போட்டுக் கொண்டு சமையற்காரனும் இட்லியைக் கல்லாக இழைத்து விட்டான். உள்ளே செங்கல் துண்டை வைச்ச மேலே மாவைப் பூசி வேக விட்டு விட்டானோ என்ற சந்தேகம் எனக்கு'' என்றார் வாக.

''வாக சார்! நம்ப சீனுவோட அப்பா ஏற்கனவே தம் பிள்ளை கல்யாணத்துக்காகப்



பல கண்டிஷன்கள் போட்டுக் கொண்டிருக்கிறார். இப்போது புதுசாக 'என் பிள்ளை உங்கள் வீட்டு மாப்பிள்ளையாக வரவேண்டுமானால் நான் சொல்லும் சமையற்காரரை ஏற்பாடு செய்ய வேண்டும்' என்ற புது கண்டிஷனையும் சேர்த்துக் கொள்ள வேண்டும். சில பிரபல சினிமா நட்சத்திரங்கள், தங்களுக்கு வேண்டிய நடிகர்களோ, வசன கர்த்தாக்களோ இருந்தால்தான் தாங்கள் நடிக்க முடியும் என்கிறார்களே! அதுபோல!'' என்றான் கோபு என்ற மற்றோர் இளைஞன்.

''இனி மேல் நம்ப சீனு எங்கேயாவது அரச மரத்தடியிலே போய் விநாயகருக்கு 'கம்பானியனு'க உட்கார வேண்டியதுதான். அவன் அப்பாவைத் திருப்தி பண்ண வேண்டிய சம்பந்தி இனிமேல்தான் பிறக்க வேண்டும். அப்புறமல்லவா அந்தச் சம்பந்திக்குப் பெண் பிறந்தாக வேண்டும்! பையனோட விலைச் சீட்டை அவன் அப்பா வருஷா வருஷம் மாற்றுவதோடல்லாமல் ஏற்றிக்கொண்டே போகிறார். இந்த ரேட்டிலே போனால் ஒரு 'கிளியரன்ஸ் சேல்' போட்டாலும் பையன் விலை போக மாட்டான்'' என்றார் சுவரோடு சாய்ந்து உட்கார்ந்திருந்த நடராஜன்.

''அடேயப்பா! அந்தக் காலத்திலே வரதன் அவனுடைய ஜானவாசத்தின் போது ஆடின ஆட்டம்....'' என்று ஆரம்பித்தார் தான் பக்கமாக அமர்ந்திருந்த முதியவர் ஒருவர்.

''அது யாரு வரதன்? கரகம் எடுத்து ஆடற ஆசாமியோ?'' என்று ஆரம்பித்தான் நடராஜன்.

''வரதன் இந்தச் சீனுப் பயலோட அப்பாடா!'' என்று தொடர்ந்தார் பெரியவர். ''வரதனுக்குக் கல்யாணம் நடந்த முகூர்த்தத்திலேயே வரதனின் மைத்துனனுக்கும் கல்யாணம். அதாவது வரதனோட மாமனார் தம் பிள்ளைக்கும் பெண்ணுக்கும் ஒரே



முகூர்த்தத்திலே கல்யாணத்தை நடத்தி விட்டார். அவருடைய பையனுக்குச் சம்பந்தி விட்டார் என்ன சீர் வரிசை செய்கிறார்களோ, அதே சீர்வரிசைகளைத் தாம் தமது மாப்பிள்ளைக்குச் செய்து விடுவதாக ஒப்புக் கொண்டார். அதிலேதான் ஆபத்து வந்தது.

''வரதனும் அவனுக்கு மைத்துனனாக வரவிருக்கும் பிள்ளையாண்டானும் முகூர்த்தத்துக்கு முதல் நாள் இரவு ஜானவாசத்துக்குத் தயாராகக் கிராமத்துக் கோவிலுக்கு வந்து சேர்ந்தார்கள். இரவு மணி எட்டுக்கு மேலாகி விட்டது. கோவில் மேளக்காரன் அர்த்த ஜாமத்துக்கு வாசித்த கையோடு ஜானவாசத்துக்கும் ஊதித் தள்ள ஆரம்பித்தான். அப்போது, வரதன் மாமனுக்கு அக்காக்காரி ஒரு பழங்காலக் கடுக்கன் ஜோடிக்கு மெருகு கொடுத்துத் தன் தம்பி பிள்ளை காதுகளில் கொண்டு வந்து மாட்டினாள்.

''வரதன் தன் தலையையும் அசைத்துப் பார்த்தான். ஒருத்தரும் கடுக்கன் கொண்டு வந்து மாட்டவில்லை. சீறி எழுந்தான். அப்போதே தனக்கும் ஒரு ஜோடி கடுக்கன் கொண்டு வந்து மாட்டினால் தான் ஜானவாசத்தில் பங்கெடுத்துக் கொள்ள முடியும் என்று குதித்தான். அந்த அப்பாவி மைத்துனன் தனக்கு வந்த கடுக்கன்களைத் திருப்பிக் கொடுக்கக் கூட முன் வந்தான். ஆனால் வரதன் அதற்கு ஒத்துக் கொள்ளவில்லை. 'பிள்ளைக்கு வருவதெல்லாம் மாப்பிள்ளைக்குக் கொடுக்க வேண்டும்' என்ற உடன்படிக்கையைப் பிடித்துத் தொங்கினான். பெரிய டவுனாக இருந்தாலும் ஏதாவது கடையைத் திறந்து காதுக்கு ஒரு ஜோடி தோட்டையாவது வாங்கி மாட்டலாம். அதுவோ கிராமம். மணியோ ராத்திரி ஒன்பது. மாப்பிள்ளையோ கரகம் ஆடுகிறான். எல்லோரும் திகைத்தார்கள். அப்புறம் நான் வரதன் மாமனாரைத் தனியாக அழைத்துக் கொண்டு போய் ஒரு யோசனை சொன்னேன். அந்த மனிதர் தம் பிள்ளை கழற்றிக் கையில் வைத்திருந்த கடுக்கன்களை வாங்கி ஒன்றைத் தம் மாப்பிள்ளை வரதனின் வலது காதில் மாட்டினார். மற்றொன்றைத் தம் பிள்ளையின் இடது காதில் மாட்டினார். மறுநாள் டவுனுக்கு ஆள் அனுப்பி மாப்பிள்ளைக்குப் புதுக் கடுக்கன்களை வரவழைக்கும் வரை அந்த ஏற்பாடு அமுலில் இருக்கும் என்று அறிவித்தார். ஜானவாசம் 'ஜாம் ஜாம்' என்று ஆரம்பித்தது. அப்புறம் வரதனை எல்லாரும் ஒற்றைக் காது வரதன் என்று தான் வெகு நாட்கள் வரையில் கூப்பிடுவோம்'' என்று பெரியவர் பேச்சை நிறுத்தினார். சிரிப்பொலி கோஷ்டி கானமாக எழுந்தது.

சீனுவுக்கு ரோஷமாக இருந்தது. ''என்ன மாமா? எங்க அப்பா உங்களுக்கு அந்தக் காலத்திலே கைமாற்றாக ஏதேனும் பணம் கிணம் கொடுக்க மாட்டேன்னுட்டாரா? அதற்காக இப்போது ஒரு காதில் அவருக்குக் கடுக்கன் மாட்டிக் கலாட்டாப் பண்ணுகிறீர்களா?'' என்றான் சீனு.

பெரியவர் சிரித்தார். ''அப்பா சீனு! உங்க கோத்திரமே கொடுக்கிற கோத்திரமில்லேடா! வாங்குகிற கோத்திரம்'' என்றார் நிதானமாக.

''என்னடா கோபு! போன வாரம் உன் மாமா தஞ்சாவூரிலிருந்து வந்திருந்தான் போலே இருக்கேடா? உன் கல்யாண விஷயமாகத்தானே?'' என்றார் வாசு.

''எனக்கென்ன மாமா இப்போ அவசரம், கல்யாணத்துக்கு? என்னை விட சீனியர் வித்வான்கள் எல்லாரும் கல்யாண மார்க்கெட்டிலே ஒரு சான்ஸ் கிடைக்காமல் திணறிக் கொண்டிருக்கிறார்கள்!'' என்று நடராஜன் பக்கத்தைப் பார்த்துக் கண் சிமிட்டிச் சொன்னான் கோபு.

''ஆமாண்டா! யாருக்காவது தாலியைக் கட்டித் தொலைச்சுட்டா அப்புறம் எப்படி ஓசி டிபன் ஒழுங்காகக் கிடைக்கும்? இப்போது பெண் பார்க்கப் போகும் சாக்கில் வாரத்துக்கு இரண்டு இடத்திலே சிரத்தையாகப் பஜ்ஜி சொஜ்ஜி காப்பி கிடைக்கின்றன. அதை விட உனக்கு மனசு இல்லே! உனக்குக் கல்யாணத்தை விட இலவச காப்பி டிபன் மீது மோகம்! இந்த லட்சணத்திலே சீனியர் என்ன ? ஜூனியர் என்ன?'' என்று ஒரு போடு போட்டான் நடராஜன்.

''ரொம்ப சரி! ரொம்ப சரி! நம்ப கோபு பெண் பார்க்கப் போறதுக்கு முன்னாலே பெண் கறுப்பா சிவப்பா, படித்திருக்கிறாளா என்றெல்லாம் விசாரிக்க மாட்டானாம். அந்தப் பெண் வீட்டில் ரோபஸ்டா காப்பிக் கொட்டை உபயோகிக்கிறார்களா அல்லது பீபரி உபயோகிக்கிறார்களா என்றுதான் கேட்டுத் தெரிந்து கொள்வானாம்!'' என்றான் சீனு. கோபு அவனைப் பார்த்து முறைத்தான்.

வாய்ப் பேச்சுக்கு இடம் கொடுக்காத சம்பவம் ஒன்று நிகழ்ந்தது. அழகே உருவெடுத்தாற் போன்ற ஒரு யுவதி உள்ளேயிருந்து பந்தலுக்கு வந்து யாரையோ தேடினாள். பிறகு பந்தல் மூலையில் மணலைக் கிளறி அளைந்து கொண்டிருந்த ஒரு சிறு பெண்ணைத் தரதரவென்று உள்ளே இழுத்துக் கொண்டு போனாள்.

சீனு, கோபு, நடராஜன்,—மூவரின் கண்களுமே அந்த யுவதியின் மீது பதிந்தன. வாசு மாமா முகத்தில் புன்னகை அரும்பியது.

''என்னடா பசங்களா! இங்கேயே சுயம்வரம் நடத்தி விடலாமா? சொல்லுங்கோ ?'' என்றார் கேலியாக.


''ஒரு கல்யாணப் பந்தல் பல கல்யாணங்களுக்கு அஸ்திவாரம்'' என்றார் முதியவர்.

''உதாரணத்துக்கு ஆள் தேடிப் போக வேண்டாம்! நானே இருக்கிறேன்'' என்று ஆரம்பித்தார் வாசு.

யுவதி திரும்பிய வழியிலிருந்து கண்களை அகற்றாத சீனுவைத் தவிர மற்ற எல்லாருமே வாசு மாமா முகத்தைப் பார்த்தார்கள்.

''உறவுக்காரர்கள் வீட்டுக் கல்யாணத்துக்குப் போய்ச் சேர்ந்தேன். அப்போ நான் கட்டைப் பிரம்மச்சாரி. கல்யாணத்துக்கு முதல் நாள் காலையிலேயே அந்த ஊருக்குப் போய் விட்டோம். சீட்டுக் கச்சேரி ஜமா சேர்ந்து விட்டது. சாப்பிட்டு விட்டு உட்கார்ந்தது தான் தெரியும். ஜானவாசம் கிளம்பும் வரை ஒருவரும் எழுந்திருக்கவில்லை. எனக்கு ஒரே தலைவலி. மாப்பிள்ளை அழைப்பு பாதி தூரம் வரும்போதே வேகமாக முன்னாலே போய் ஒரு வீட்டுத் திண்ணையிலே


பாமாலிவ் உபயோகத்தினால் வளரும்
நீண்ட அடர்த்தியான கேசம்
மிக அழகிய கூந்தல்
அலங்கரிப்புக்கு
இயற்கையாக அமைகிறது!
PALMOLIVE
பாமாலிவ்
பெர்ஃபியூம்டு கோகோனட் ஹேர் ஆயில்
மூன்று வசீகரிக்கும் வாசனைகள்: லவண்டர்-மல்லிகை-ரோஜா


பருக்கள் தீராத பிரச்னையாயிருந்தன...
"இந்த விகாரமான பருக்களின் தொல்லையின்றி, உன்னைப்போல்மாசு மறுவற்ற வதனத்தை நானும் பெற எவ்வளவு ஆசைப்படுகிறேன், லக்ஷ்மி".
"கவலைப்படாதே கோமி, லிச்சென்ஸா உபயோகிக்கும்வரை நானும் பருக்களினால் அவதிப்பட்டேன்."
லக்ஷ்மி சொன்னது சரி, லிச்சென்ஸா பருக்களைத் துரிதமாகவும், நிரந்தரமாகவும் அகற்றுகிறது."
சரும உபாதைகளை சீக்கிரம் குணமாக்குவது லிச்சென்ஸா
LICHENSA
எல்லா கெமிஸ்டுகளிடமும் கிடைக்கும்
02-929 TM


HAZELINE
BRAND
TALCUM
POWDER

உட்கார்ந்து விட்டேன். இருட்டு தலைவலிக்கு இதமாக இருந்தது.

''அந்த வீட்டுத் திண்ணைக்கு உட்பக்கம் ஆள் அரவம் கேட்டது. கல்யாண வீட்டுக்குப் போனவர்கள் போக யாராவது பாட்டியம்மாள் உட்கார்ந்திருப்பாள் என்ற நம்பிக்கையில் 'தாகத்துக்குக் கொஞ்சம் ஜலம் கிடைக்குமா?' என்று கேட்டேன். ரேழியிலோ வாசலிலோ ஒரு கோழி முட்டை விளக்குக் கூட இல்லை.

''சில நிமிடங்களில் திண்ணை ஓரத்தில் ஒரு கூஜா வைக்கப்படும் ஓசை கேட்டது. தண்ணீரைக் குடித்துவிட்டுக் கூஜாவை உட்பக்கம் நகர்த்தினேன். அது அகற்றப்பட்ட ஓசையும் கேட்டது. ஊர்வலம் அந்த வீட்டு வாசல் வரும்போது சேர்ந்து கொள்ளலாம் என்று திண்ணையில் சாய்ந்து கண்களை மூடினேன்.

''சீக்கிரமே காஸ் விளக்குகளின் ஒளி என் இமைகளை உறுத்தியது. விழித்துக் கொண்டேன். அந்த வீட்டு வாசலில் மாப்பிள்ளை அழைப்பு மோட்டார் நின்று கொண்டிருந்தது. தண்ணீர் கொடுத்த பாட்டியம்மாளுக்கு நன்றி தெரிவிக்கலாம் என்று திரும்பினேன். எனக்குத் தூக்கிவாரிப் போட்டது. அங்கே ஒரு பதினெட்டு வயதுப் பெண் கையிலே கூஜாவோடே நின்று கொண்டிருந்தாள். காஸ்லைட் ஒளி அவள் முகத்தில் 'பளிச்'சென்று விழுந்து கொண்டிருந்தது. என் தலைவலி யெல்லாம் பறந்து போச்சு. பதற்றத்துடன் எழுந்து போய்க் கும்பலில் கலந்து கொண்டேன்.''

''மாமா காலத்திலேயே காதல் எல்லாம் இருந்திருக்குன்னு சொல்லுங்கோ!'' என்றான் நடராஜன்.

''ஏன்டா! நான் என்ன கி. மு. இரண்டாயிரம் வருஷத்திலே இருந்தவன்னு உனக்கு எண்ணமாடா? இது விடிய விடிய முப்பது வருஷங்களுக்குள்ளாக நடந்த கதை!'' என்று தொடர்ந்தார் வாசு. ''தலைவலியோடு தூக்கமும் போச்சு. மறுநாள் அந்தப் பெண் கல்யாண வீட்டில்தான் இருந்தாள். நானும் சீட்டாட்ட கோஷ்டியில் சேராமல் அங்கேயும் இங்கேயும் அலைய வந்து கொண்டிருந்தேன். இது ஒரு தடியனுக்குக் கண்களை உறுத்தியது. நான் உக்கிராண உள்ளிலே நுழைஞ்சதும், பின்னாலே வந்து முதுகிலே பிசாசுமாதிரி அறைஞ்சுட்டான்.''

''பலே! பலே! ராமா என்று உபசரிக்கும் இடத்திலே ஆஞ்சநேயர் வந்து நிற்பார் என்று ராமாயண சாஸ்திரிகள் சொல்லுவதுபோலே, காதல் என்று சொல்கிற இடத்திலே ஒரு வில்லன் தயாராக வந்து நிற்பான் போலிருக்கிறது! அந்த வில்லனைஅப்புறம் எப்படிச் சமாளித்தீர்கள்?'' என்றான் சீனு உற்சாகத்துடன்.

வாசு தொடர்ந்தார்: ''நான் கையில் அகப்பட்ட முறுக்கைக்காயை எடுத்து விளாசினேன். கடைசியில் என்ன ஆயிற்று, தெரியுமோ? அந்தத் தடியன் அவள் அண்ணனாம். தங்கையின் மனநிலையைப் புரிந்து கொண்டு என்னுடைய மைத்துனன் பதவியை ஏற்றுக் கொண்டு விட்டான்.''

''தலைவலியிலே ஆரம்பிச்ச காதல் தகராறு வழியாகப் போய்த் தாலி கட்டலில் வந்து முடிந்ததாக்கும்!''



டாக்டர் வீட்டுப் போன் மணி அடித்தது. அந்தச்சமயம் அங்கே வந்த திருடன் ரிசீவரை எடுத்து யாரென்று கேட்டான்.

டெலிபோன் குரல்: உடனே கிளம்பி வாருங்கள். சாம்பசிவம் பேசுகிறேன்!

திருடன்: உடனே வர முடியாது. இங்கே திருடிவிட்டுத்தான் வர முடியும்!


பந்தலில் காசி யாத்திரைக்கான சம்பிரதாயங்கள் நடக்க ஆரம்பித்ததால் பேச்சு தடைப்பட்டது. மாப்பிள்ளைப் பையன் நாணு என்ற நாராயணசாமி கண்களில் மையும் கையில் துணி மூட்டையுமாகக் காசி யாத்திரைக் கோலம் புறப்பட்டான்.

''அதென்ன வாக்கிங் ஸ்டிக்கா? இல்லே, சிலம்பம் விளையாடுகிற தடியா? அத்தனை முரடாக நம்ப நாணு மாமனார் வாங்கிக் கொடுத்திருக்கிறாரே?'' என்றான் கோபு தணிந்த குரலில்.

''இந்தக் கம்பை அட்வான்ஸாக நேற்று சாயங்காலமே கொடுத்திருக்கக் கூடாதோ? நாணுவுக்கு, ஊர்வலக் காரைச் சூழ்ந்து ஆக்கிரமித்துக் கொண்டிருந்த ஒண்ணரை டஜன் குழந்தைகளை அடித்து விரட்டவாவது உதவியிருக்கும். இப்போது கொடுத்திருக்கிறார்களே?'' என்றார் வாசு மாமா.

''ஓஹோஹோ! வெல்லக்கட்டியை மொய்த்துக் கொள்கிற கட்டெறும்புக் கூட்டம் மாதிரி ஆயிடுத்தோ? அட பாவமே! ஜானவாசத்தின் போது நாணுவோட முன் வழுக்கை மண்டையாவது தெரிந்ததோல்லியோ?'' என்றான் சீனு. அவனும் முதல்நாள் இரவு ஜானவாசத்துக்கு வர இயலவில்லை.

''நாசமாப் போச்சு! நாணு என்னவோ இந்த ஜானவாச ஊர்வலத்தைப் பற்றி ஆகாசக் கோட்டைகள் கட்டிக் கொண்டிருந்தான். தன்னுடைய ஒன்னே முக்கால் ரூபாய் கர்சீப் நுனி கூடப் பொது மக்களுக்குத் தெரிய வேண்டும் என்ற ஆவலில் கோட் பாக்கெட்டில் நீட்டி விட்டுக் கொண்டிருந்தான். ஆனால் அவன் காரில் உட்கார்ந்த போது குழந்தைகள் சமுத்திரத்தில் மூழ்கி விட்டான். ஊர்வலம் முடிந்து அவன் காரை விட்டு இறங்கினபோது பர்மா யுத்தத்தின்போது, கால்நடையாகவே அஸ்ஸாம் மலைகள் வழியாக நடந்து வந்த அகதி மாதிரியிருந்தான். ட்வீடு பாண்டெல்லாம் தவிடுபொடியாகப் போயிருந்தது. ஜலதோஷம் பிடித்த குழந்தை ஒன்று அவன்



"ஏண்டா! நீ அந்த மாமாவைப் போய்ப் புத்தியில்லாதவரென்று சொன்னாயாமே! திரும்பியும் போய் அதற்கு நீ வருத்தப் படுவதாகச் சொல்லிவிட்டு வா!" என்று தகப்பனார் சொன்னார்.

"மாமா! நீங்கள் புத்தியில்லாதவராக இருப்பதற்கு நான் ரொம்ப வருத்தப்படுகிறேன்!" என்று பணிவோடு சொல்லிவிட்டுத் திரும்பினான் பையன்.

கோட்டின் வலது பக்கம் முழுவதும் நனைத்திருந்தது" என்றான் நடராஜன்.

"அது மாத்திரமா? கார் நடுத்தெருவிலே மக்கர் பண்ண ஆரம்பித்து விட்டது. நாங்கள் எல்லோரும் சேர்ந்து தள்ளுகிறோம் என்றோம். ஆனால் அந்த டிரைவர் கௌரவக் குறைவான அந்தக் காரியத்துக்கு இணங்க மறுத்து விட்டான். 'நாலு நாட்களானாலும் காரை ரிப்பேர் செய்துதான் கிளப்புவேன்' என்று அவன் சொன்னதும் நாணு பயந்து நடுங்கிய நடுக்கத்திலே காரும் நடுங்கி ஓட ஆரம்பித்தது" என்றான் கோபு. ஒரே சிரிப்பு!

காசி யாத்திரை கோஷ்டி திரும்பி உள்ளே போயிற்று.

"வாசு மாமா! இந்தக் காசி யாத்திரை நாடகம் எதற்காக?" என்றான் சீனு.

"அதுவா? பிரம்மச்சாரிகள், பிடிவாதமாகக் கல்யாணம் பண்ணிக்கொள்ள மாட்டேன் என்று, காசி, இமயமலை, திபேத் நோக்கிப் புறப்படுவதைப் பெண்களைப் பெற்றவர்கள் தடுத்து நிறுத்தி 'அப்பனே! கம்மா, கல்யாணம் பண்ணிக் கொண்டு இங்கேயே இரு! நாங்கள் மாத்திரம் இங்கே குழந்தை குட்டிகளைப் பெற்றுக்கொண்டு அவஸ்தைப் பட வேண்டும். நீ மாத்திரம் ஜாலியாக ஊர் சுற்றப் போவதாவது?' என்று வழிமறிக்கும் நாடகம்" என்றார் வாசு மாமா.

"ஓஹோ! அப்படியா? நான் வேறு விதமாக நினைத்தேன்" என்றான் சீனு.

"எப்படி?"—இது கோபுவின் கேள்வி.

"இப்போதெல்லாம் பையன்கள் காசி, கல்கத்தா என்று வேலை தேடிப் போகிறார்களே! 'நீ கம்மா போகாதே! இதோ என் பெண்ணையும் உன் காலில் கட்டி விடுகிறேன்! அவளையும் கூட்டிக் கொண்டு புறப்படு. எனக்குக் கொஞ்சம் பாரம் குறையும்' என்று தகப்பனார்கள் கடைப்பிடிக்கும் தத்துவமாக இருக்குமோ என்று நினைத்தேன்" என்றான் சீனு.

"பலே! பலே! அப்படியென்று இப்போ நடந்தது காசி யாத்திரை இல்லை! பம்பாய் யாத்திரை. நம்ப நாணுவுக்குப் பம்பாயிலல்லவா வேலை!" என்றார் வாசு மாமா.

"ஏண்டா கோபு! மாப்பிள்ளைக்கு என்னடா பரிசு கொடுக்கப் போகிறாய்?" என்று கேட்டான் சீனு.

"ஒன்னே கால் ரூபாய்க்கு ஏதாவது தலைகாணி மாதிரி மலிவுப் புஸ்தகத்தை வாங்கிக் கொண்டு வந்திருப்பான்! அதைப் பிரித்துப் பார்க்காமலேயே நாணு பழைய பேப்பர்காரன் கிட்டே போட்டு மசால் தோசை வாங்கித் தின்னப் போகிறான்" என்றான் நடராஜன்.

"அதுதான் இல்லை. நான் மசாலா தோசையே வாங்கி வந்து விட்டேன், நண்பனின் அபிமானப் பரிசாக!" என்றான் கோபு.

"பிரமாதம்!" என்ற கோஷம் திண்ணை ஓட்டை எட்டியது.

"ஆனால் இந்தத் தோசை ஜுஜாது! மெழுகில் ஆப்பிள், ஆரஞ்சு என்று தத்ரூபமாகத் தயாரிப்பது போல் மெழுகு மசால் தோசை தயாரிக்கச் சொன்னேன். நாணு அதைப் பார்த்து ஆனந்திக்கலாமே தவிரத் தின்ன முடியாது!" என்று சொல்லிப் பையிலிருந்த ஓர் அட்டைப் பெட்டியை எடுத்துத் திறந்தான். அதைப் பார்த்தவர்கள் நாவில் நீர் ஊறியது.

"முகூர்த்தம் நடக்கப் போகிறது!" என்ற குரல் உள்ளிருந்து எழுந்தது. நண்பர் குழாம் அப்படியே எழுந்து உள்ளே போயிற்று.

"கெட்டி மேளம்! கெட்டி மேளம்!" என்ற இரைச்சல் எழுந்தது.

கல்யாணி ராக ஆலாபனத்தில் ஈடுபட்டிருந்த நாயனக்காரர் டக்கென்று கெட்டி மேளத்தில் தாவினார். தவில்காரர் வெளுத்து வாங்கினார். சீனு காதைப் பொத்திக் கொண்டான். "இந்தக் காதை உடைக்கும் ஓசை எதற்கோ?" என்றான்.

"முகூர்த்த சமயத்தில் தாலி கட்டும் போது, பையன், பெண்ணை நெருக்கத்திலே பார்த்து ஒரு வேளை 'வேண்டாம்! மாட்டேன்! பிடிக்க வில்லை' என்று கூச்சல் போட்டால் அந்தச் சத்தம் மற்றவர்களுக்குக் கேட்கக் கூடாது என்பதற்காகக் கெட்டி மேளத்தை அடிக்கச் சொல்வது!" என்றார் வாசு மாமா.

"நான் அந்தக் காலத்திலே அப்படித்தான் கத்தினேன். நான் பெண் பார்க்கப் போன போது தங்கையைக் காண்பித்தார்கள். திருமண மேடையில் அக்காவை உட்கார்த்தி ஏமாற்றி விட்டார்கள். தாலி கட்டும்போது இந்த மோசடி தெரிஞ்சு போச்சு. கத்தினேன். ஆனால் அந்தப் படுபாவி மேளக்காரன் பிசாசாகக் கெட்டிமேளம் கொட்டி என் சத்தத்தை எழாமல் அமுக்கி விட்டான்!" என்றார் முதியவர். அப்போது எழுந்த சிரிப்பொலி கெட்டி மேளத்தை விடவும் பலமாக ஒலித்தது!

நாணு புன்னகையுடனே தாலியைக் கட்டி முடித்தான். நாலைந்து பேர்கள் பானகம் விநியோகம் பண்ணினார்கள்.

நாயனக்காரர் கல்யாணி ராக ஆலாபனை செய்யத் தொடங்கியதை மறந்து சங்கராபரணக் கீர்த்தனையில் இறங்கினார்.


இலவசம்
கவர்ச்சி மிகுந்த
ஸ்டெயின்லெஸ் ஸ்டீல்
பாத்திரங்கள்
தேவைக்கு ஏற்பத் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம். மன மகிழ்வு பெறலாம்.
OK
ஓ. கே. தயாரிப்புகளின் பரிசுக் கூப்பன்களைச் சேகரியுங்கள்.
★ ஓ. கே. வனஸ்பதி ★ ஓ. கே. டபிள் ரிபைண்ட் ஆயில் ★ கோல்டன் ஸாலட் ஆயில் ★ ஓ. கே. சந்தன சோப் ★ ஓ. கே. ஓரியண்டல் ரோஸ் சோப் ★ ஓ. கே. கிரீம் சோப் ★ மியோசே சோப் ★ சோப் சிப்ஸ்
நீங்கள் வாங்கும் ஒவ்வொரு ஓ. கே. தயாரிப்புகளிலும் உள்ள பரிசுக் கூப்பன்களைச் சேகரியுங்கள். அவற்றிற்குப் பதிலாக, உங்கள் அருகிலுள்ள ஓ. கே. வியாபாரியிடமிருந்து, நீங்கள் விரும்பும் அளவிலும், வடிவிலும் கவர்ச்சி மிகுந்த ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் பாத்திரங்களைப் பெறுங்கள்.
இந்த விசேஷமான பரிசுத் திட்டம் பற்றிய இதர விவரங்களை அறிய உங்கள் ஓ. கே. வியாபாரியிடமிருந்து, படங்களோடு கூடிய 'போல்டரை' (folder) வாங்கிப் பாருங்கள்.
தயாரிப்பாளர்கள் :
தி ஈஸ்ட் ஏஷியாடிக் கம்பெனி (இந்தியா) பிரைவேட் லிமிடெட், மதராஸ்-1

புதுவெள்ளம்

அகிலன்

அத்தியாயம் பத்து

அவசரத் தந்தி

செல்வரத்தினத்துக்குச் சித்திராவை மணம் செய்து வைக்க முடியாது என்று மனமொடிந்து நம்பிக்கை இழந்து போயிருந்த குமரவேலுக்கு, திடீரென்று ஏற்பட்ட மாற்றங்கள் தம்முடைய அதிர்ஷ்டத்தில் பெருநம்பிக்கை வைக்கச் செய்தன. செல்வக்குமாரனை செல்வரத்தினத்தின் திருமணத்தைச் சித்திராவின் தமையன் மாணிக்கத்துடன் போட்டி போட்டுக் கொண்டு வெகு விமரிசையாகச் செய்து முடித்து விட்டார்.

குமரவேலின் பங்குக்கு மட்டிலும் திருமணச் செலவு ஒரு லட்சம் ரூபாய்; பெண் வீட்டாரின் பங்கோ அதைவிட இரண்டு மடங்கு. பிரமுகர்கள் என்ற வரிசையில் உள்ள ஒவ்வொருவரையும் பார்த்து நேரில் அழைத்து வந்தார் குமரவேல்.

கல்யாணம் முடிந்த சில தினங்களுக் கெல்லாம் செல்வரத்தினத்துக்குச் சென்னைக்கே மாற்றலாகி விட்டது. சித்திராவின் ஸ்ரீதனமான பங்களாவில் அவர்கள் தனிக் குடித்தனம் தொடங்கி விட்டார்கள். துணைக்குச் சித்திராவின் தாய் பொன்னம்மாளும் பட்டணத்துத் தாத்தாவும் இருந்ததால், குடும்ப வாழ்க்கையின் தொடக்கம் சித்திராவுக்கு அளவற்ற ஆனந்தத்தைக் கொடுத்தது. முருகையனை மணந்து கொள்ளாமல் இருந்த விஷயத்தை, ஒரு பயங்கரமான விபத்திலிருந்து தப்பிக் கொண்டது போலவே அவள் உணர்ந்தாள்.

ஏற்கனவே தன் உத்தியோகத்தில் நாணயமும் திறமையும் உள்ளவன் என்று செல்வரத்தினத்துக்குப் பெயர் கிடைத்து விட்டதால், அவனுக்கு அந்த உலகத்திலும் செல்வாக்குப் பெருகத் தொடங்கியது. அவனது புகழ் எங்கெல்லாம் பரவ வேண்டுமோ, அங்கெல்லாம் பரவிக்கொண்டு வந்தது. ஆனால் செல்வரத்தினம் அவற்றை ஒன்றும் பொருட்படுத்தவில்லை. தானும் திட்டத்துடன் கடுமையாக உழைத்தான்; மற்றவர்களையும் உழைக்கச் செய்தான்; எல்லோரிடமும் கூடுமான வரையில் நளினமாக நடந்து கொண்டான்.


உழைத்த நேரம் போக ஓய்வு நேரமோ அவனுடைய கற்பனைக்கும் எட்டாத ஆனந்த வெள்ளத்தில் மிதந்து கொண்டிருந்தது. வாழ்க்கை என்ற இனிய கரும்பை அணு அணுவாய்ச் சுவைக்கும் சிரமத்தைக் கூடக் கொடுக்காமல், அதையே சாறுகப் பிழியச் செய்து வெள்ளிக்கோப்பையில் ஏந்தித் தந்தாள் சித்திரா.

வீட்டுக்கு வந்தவுடன் அவனைக் கவனிப்பதற்காக அவனைச் சுற்றிப் பம்பரமாய்ச் சுழன்று வந்தார் தாத்தா. வீட்டு நிர்வாகத்தையோ மாமியார் கவனித்துக் கொண்டாள். எந்த நேரமும் ஏக்கத்தை விழிகளில் தேக்கிக் கொண்டே அவனுக்காகக் காத்திருந்தாள் சித்திரா.

தார் ரோட்டின் வழவழப்பில் அவர்களது கார் வழுக்கி விடுவதுபோல் விரைந்து சென்றது. ஓய்வு கிடைத்த மாலைப் பொழுதுகளெல்லாம் ஒய்யாரமான ஓட்டல் மாடிகளில் அறுசுவைப் பண்டங்களிடையே கழிந்தது. ஆங்கிலப் படங்கள் அனைத்தையும் அவர்கள் விட்டு வைப்பதில்லை. அடிக்கடி அவள் அவனிடம் சிரித்தாள்; சிணுங்கினாள்; குழைந்தாள்; மயங்கினாள்; மயக்கினாள்.

முருகையன் என்ற ஒருவன் இந்த உலகத்தில் இருந்ததோ, அவனை அவள் தன் வீட்டிலேயே கொண்டு வந்து வைத்திருந்ததோ அடியோடு அவளுக்கு மறந்து போய் விட்டது. செல்வரத்தினத்துக்கு முழு விவரமும் தெரியாதென்றாலும், அவனுக்கும் அவளுக்கும்

திருமணம் நிச்சயமானதும் பிறகு அது முறிந்து போனதும் நன்றாகத் தெரியும். அதைப் பற்றி அவன் ஆழமாக யாரிடமும் விசாரித்துக் கொள்ளவில்லை. மாறி வரும் காலப் போக்கில் மனிதன் தேவையற்ற கவலைகளுக்குத் தன்னை ஆளாக்கிக் கொள்ளக் கூடாது என்ற எண்ண முள்ளவன் அவன்.



சென்னை நகரத்துப் பெரிய குடும்பங்களின் அழைப்புக்களும் அவர்களுக்கு வரத் தொடங்கின. மற்றவர்களால் மதிக்கப்பட்டவர்களோடு தோளோடு தோள் உரசிக் கொள்வதில் சிலருக்கு என்னதான் பெருமை யிருக்குமோ, தெரியவில்லை! சித்திரா அந்தப் பெருமையில் பங்கு கொள்ளத் துடித்து. செல்வரத்தினத்தையும் அது போன்ற விருந்துகளுக்கு வரச் சொல்லிக் கட்டாயப் படுத்தினாள். மனைவியை மகிழ்விப்பதற்காகச் செல்வரத்தினம் இந்த வகையிலும் பிரமுகனாகிக் கொண்டு வந்தான்.

இவற்றையெல்லாம் தெரிந்து கொண்டு அளவற்ற பெருமை அடைந்தவர் குமரவேல் ஒருவர் தாம். சென்னைக்கும் பெரிய பாளையத்துக்கும் வாரந்தவறாமல் வந்து போய்க் கொண்டிருந்தவருக்குச் சித்திராவின் மீது தம்மை யறியாத பயபக்தி ஏற்பட்டு விட்டது. கிராமத்திலிருந்த தம்முடைய மனைவியிடம் நேரம் கிடைத்த போதெல்லாம் மருமகளைப் புகழத் தொடங்கி விடுவார். லட்சுமிதேவியே சித்திராவாக அவதாரம் எடுத்துத் தம்முடைய குடும்பத்தை உயர்த்துவதற்கு வந்திருப்பதாக அவருடைய எண்ணம்.

''நாகம்மா! நமக்குக் கூட இனி இந்தப் பட்டிக்காட்டிலே வேலை கிடையாது. மெதுவா ஒரு வீட்டை வாங்கிக் கிட்டு அங்கேயே போய்விட வேண்டியதுதான்.''


''பட்டணத்துக்கா?'' என்று பயத்துடன் கேட்டாள் நாகம்மாள்.

''ஆமா. இந்த ஊராலே இனிமேல் நம்மைத் தாங்க முடியாது. பட்டணத்-

திலே இருந்தா இன்னும் என்னென்னமோ நான் சாதிக்க முடியும். என்ன இருந்தாலும் அது தலைநகரம் பார்! அங்கே போய் உட்கார்ந்து விட்டால் இந்த நாட்டையே ஒரு கலக்குக் கலக்கி விடலாம்'' என்றார் குமரவேல்.

''இன்னும் என்ன செய்யப் போகிறீங்க? நமக்கு வேண்டியதெல்லாம் கடவுள் குடுத்திட்டானே!''

தம்முடைய மனைவியின் அறியாமையை எண்ணிச் சிரித்தார் குமரவேல். எப்படி ஒரு சில மனிதர்கள் சேர்ந்து கொண்டு இந்நாட்டின் வியாபாரத்தையே ஆட்டி வைக்கின்றனர் என்பதை அவளிடம் விவரித்தார். வெறும் 'டெலி



போனை' மாத்திரம் கையில் வைத்துக் கொண்டு அங்குமிங்கும் பேசி, எப்படி லட்சக்கணக்காய்ச் சம்பாதிக்கிறார்கள் என்பதையும் கூறினார்.

''மார்க்கெட் நிலவரத்தைப் பற்றி உனக்கு என்ன தெரியும்? கையிலே டெலிபோனை எடுத்துக்கிட்டு, ஒரு சாமான் பேரைச் சொல்லி ரூபாய்க்கு ஓரணா ஏத்தி வைக்கச் சொன்னா, அதனாலே எப்படியெல்லாம் பணம் வந்து குவியும், தெரியுமா? அப்படிப்பட்ட வில்லாதி வில்லனும் மனுஷன்தானே? ஒரே மனுஷன் ஒன்பது இடத்திலே ஒன்பது விதமான வியாபாரம் செய்யறப்போ, நாமும் ஏன் அப்படிச் செய்யக் கூடாது? எந்த ஊருக்குப் போனாலும் அந்த ஊரிலே நம்ம கடை ஒண்ணு இருக்கணும்! என்ன, புரியுதா உனக்கு?''

நாகம்மாளுக்கு ஒன்றுமே புரியவில்லை. தன்னுடைய வீட்டுக்காரர் அளவுக்கதிகமாகப் பேராசைப்படுகிறார் என்ற வரையில் அவளுக்குப் புரிந்தது. வயதாகி விட்ட காலத்தில், செலவுக்கும் அதிகமான பிள்ளைகள் இல்லாதபோது இவருக்கு ஏன் இப்படியெல்லாம் ஆசை பிறக்கிறது என்ற கவலைதான் அவளுக்கு. உள்ளதை வைத்துக் கொண்டு காசிக்கும் ராமேசுவரத்துக்கும் போய்க் கடவுளைக் கும்பிட்டு வந்து உள்ளூரில் நிம்மதியாக இருக்க அவள் விரும்பினாள். சித்திராவைப் பற்றி எவ்வளவுதான் அவர் தூக்கிவைத்துப் பேசினாலும், பட்டணத்துக்காரர்களின் போக்கு அவளுக்கு என்னவோ போலிருந்தது.

கல்யாணத்துக்குப் போய் ஒரு வாரம் அங்கு தங்கியிருப்பதற்குள் அவளுக்குப் போதும் போதும் என்றாகி விட்டது. படித்த பெண் என்றாலும், பணக்காரி என்றாலும், ஒரு மட்டு மரியாதை வேண்டாமா? அடக்க ஒடுக்கம் வேண்டாமா? மாமியாரின் எதிரில் கூடவா ஒருத்தி தன் புருஷனிடம் அப்படிக் கலகல வென்று பேசுவாள்? பழைய காலத்துப் பெண் பிள்ளை நாகம்மாள். காலமும் இடமும் மாறிப் போனது அவளுக்குப் புரியவில்லை.

பெரியபாளையத்தைப் பொறுத்த மட்டில் ஏற்கனவே அவர் அதற்கு முடி

சூடா மன்னராகி விட்டார். ஒரு வேலையும் இல்லாத நான்கு தடிப் பயல்கள் அவருக்கு அங்கே கையாட்கள். ஏழைகள் பலருக்குப் பரவலாகச் சில்லறைக் கடன்கள் கொடுத்து எப்போதும் அவர்களைத் தமக்கு அடங்கி நடக்கும்படி பார்த்துக் கொண்டார். கடையையும் நிலங்களையும் கவனித்துக்கொள்வதற்கு அவரிடம் பழக்கப்பட்ட ஆட்கள் தயாராகி விட்டார்கள். பட்டணத்துக்கு அடிக்கடி வந்து சென்றதால், பெரியபாளையத்தில் இருப்பதே அவருக்கு இப்போது மதிப்புக் குறைவாகத் தோன்றி விட்டது.

இந்தச் சமயத்தில்தான் சென்னையிலிருந்து வந்த தந்தி ஒன்றை அவரிடம் நீட்டினான் தந்திச் சேவகன். கணக்குப் பிள்ளையிடம் கொடுத்துப் படித்துக் காட்டச் சொன்னார். கணக்குப்பிள்ளை அதைப் படித்துக் கொண்டிருக்கும் போதே அவருடைய கரங்கள் வெட வெட வென்று நடுங்கின.

''என்ன விஷயம்?'' என்று பதறினார் குமரவேல்.

அதைச் சொல்வதற்கே பயப்படுவது போல் விழித்துக் கொண்டு தடுமாறினார் அவர். குமரவேலின் பொறுமை எல்லையைக் கடந்தது. ''அட, சொல்லித் தொலையுமய்யா!'' என்று கத்தினார் அவர்.

ஆனால் கணக்குப் பிள்ளை விஷயத்தை வெளியிட்டவுடன் அவரிடமிருந்த பயமெல்லாம் குமரவேலிடம் குடி புகுந்து கொண்டது. தந்தியைப் பிடுங்கி உற்றுப் பார்த்து விட்டு, பத்திரமாக அதை மடித்து வைத்துக் கொண்டு வீட்டுக்கு வேகமாக ஓடினார்.

அத்தியாயம் பதினொன்று

தனிமையிலே . . .

கூர்ந்து நோக்கும் கண்களும், எளிதில் புரிந்து கொள்ளும் ஆற்றலும், செயல் திறனும் கொண்ட முருகையனுக்கு அவன் புதிய வேலை வெகு விரைவில் பழக்கமாகி விட்டது. பெண்களைப் பற்றிப் புரிந்து கொள்ளுவதில் வேண்டுமானால் அவனுக்கு அவ்வளவு திறமை இல்லாதிருக்கலாம். ஆனால் மற்ற விஷயங்களில் அவன் திறமைசாலிதான்.

முதல் நாள் சுரங்கத்துக்குள் இறங்கியபோது முருகையனுக்குக் கண்களைக் கட்டிக் காட்டில் விட்டது போல் இருந்ததல்லவா? நாளடைவில் எல்லாம் சரியாய்ப் போய் விட்டது. இப்போது அவன் சுரங்கத்தின் எந்தப் பகுதிக்கும் தனியாகச் சென்று தன் அலுவல்களைக் கவனிக்கும் நிலைக்கு வளர்ந்திருந்தான். மேற்பார்வை செய்வதுடன் அவன் நின்று விடுவதில்லை. தொழிலாளர்களுக்குச் சமயங்களில் உதவியாக நின்று உழைத்து, அவர்களிடையே சுறுசுறுப்பையும் உற்சாகத்தையும் பரப்பி வந்தான்.

கன்னையனின் உருவத்தில் இருந்த பெருமாள்சாமியும் முருகையனும் அடிக்கடி தனிமையில் சந்தித்துப் பேசுவது உண்டு. அப்படிப் பேசும்போதெல்லாம் பெருமாள்சாமி தொழிலாளர்களைப் பற்றிப் பேசினானே தவிர, சொந்த விஷயங்களைப் பற்றியே அவனுக்கு நினைவிருப்பதில்லை. 'சாந்தாவை உனக்கு நன்றாகத் தெரியுமா? பழக்கம் உண்டா?' என்று பல முறை அவனிடம் கேட்கத் துடித்திருக்கிறான் முருகையன். ஆனால் ஏனோ அவனால் அந்த விஷயம் பற்றி மனம் விட்டுப் பேச முடிவதில்லை. பேச நினைப்பதை மனத்துக்குள் போட்டு வைத்துக் கொண்டு மற்ற விஷயங்களைப் பற்றியே விவாதித்தான்.

சாந்தாவையும் பெருமாள்சாமியையும் இதற்குள் இரண்டு மூன்று முறை ஒன்றாகப் பார்த்து விட்டான் முருகையன். என்றாலும் அவர்கள் இருவரிடமுமே அவனால் இது பற்றி விசாரிக்க முடியவில்லை. மற்றவர்களுடைய சொந்த விஷயங்களில் தலையிடுவது போல் ஆகுமென்று நினைத்து, தன் பரபரப்பை அவன் அடக்கிக் கொள்ள வேண்டியிருந்தது.


வழக்கம் போல் ஒரு முறை பெருமாள்சாமியைச் சந்தித்த முருகையன், சாந்தாவைப் பற்றி நினைத்துக் கொண்டே அவனிடம் தொழிலைப் பற்றிப் பேசினான்.

''பெருமாள்சாமி! இந்தச் சுரங்கம் தான் இப்போது வெள்ளைக்காரர்களிடமிருந்து ஹைதராபாத் சமஸ்தானத்துக்குக் கைமாறி விட்டதாமே? இனி என்ன கவலை நமக்கு?''

''இந்தச் சமஸ்தானம் இருக்கட்டும்! பெரும்பாலான சமஸ்தானங்கள் தங்களுடைய மக்களுக்குச் சரியான வாழ்வளிக்காமல் அவர்களை வெகு காலமாக ஏமாற்றிக் கொண்டுதான் வந்திருக்கின்றன. விடுதலை வந்த பிறகும்கூட, கப்பலேறிப் போன அந்நியருக்கு இவர்கள் இன்னும் தத்துப் புத்திரர்கள் என்றுதான் எண்ணிக் கொண்டிருக்கிறார்கள்.



நவீன முறையில் மலச்சிக்கலைக் குணப்படுத்துங்கள்



வாயில் துர்நாற்றம், பசியின்மை, சக்தியின்மை, களங்கங்கள், கொப்புளங்கள், பருக்கள் போன்ற விரும்பத்தகாத அறிகுறிகளுடன் தோன்றும் மலச்சிக்கல், ஜீரணக் கோளாறுகளிலிருந்து நிவாரணமளிக்கிறது வாக்குலாக்ஸ். ஜீரணக் கோளாறினால் ரத்த அசுத்தி, பித்தம், ஈரல் உபாதை, மூட்டுவலிகள், சிறு நீரக உபாதைகள், தவிர மேலும் பல தொந்தரவுகள் ஏற்படலாம். தவறாமல் வாக்குலாக்ஸ் சாப்பிட்டால் ரத்தம் சுத்தமாவதுடன், இந்த வியாதிகளின் அறிகுறிகளும் அகலுகின்றன. நவீன முறையில் மலச்சிக்கலைக் குணப்படுத்துங்கள். இனிக்கும் மலமிளக்கி பேதி மாத்திரையான வாக்குலாக்ஸ் மூலம் குடும்பத்திலுள்ள ஒவ்வொருவரையும் ஆரோக்கியமுடன் வைத்திருங்கள். நல்ல ஆரோக்கியத்தைத் தருவது வாக்குலாக்ஸ். தவறாமல் வாக்குலாக்ஸ் சாப்பிட்டு, வாழ்வை அனுபவிப்பதே புத்திசாலித்தனம்.

''மிட்டாய்போல் சுவைத்துச் சாப்பிடுங்கள்''

இன்றே வாங்குங்கள்

நீலமும், மஞ்சளும் கொண்ட அச்சிடப்பட்ட பட்டையைப் பார்த்து வாங்குங்கள்.

வாக்குலாக்ஸ்

ட்ரேட் மார்க்

இனிக்கும் மலமிளக்கி-பேதி மருந்து

ஒரு நிக்கொலஸ் (N) தயாரிப்பு. தரத்திற்கும் தூய்மைக்கும் நீங்கள் பெறும் உத்தரவாதம்.

TAM

கை மாறிவிட்டதால் தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரம் உயர்ந்து போய்விட்டதா?''

''இதற்கு என்ன செய்ய வேண்டுமென்கிறாய்?''

''பொறுத்திருந்து பார்! நீயும் இங்கு தானே வேலை பார்க்கப் போகிறாய்?'' என்று சொல்லி விட்டுக் கிளம்பியவன், பிறகு ஒரு கணம் நின்று, ''நீ படித்தவன்; சீக்கிரம் உனக்கு வேலை உயர்ந்து விடும்; அப்புறம் எங்களை எங்கே கவனிக்கப் போகிறாய்?'' என்று சிரித்தபடியே கூறினான்.

புரியாத புதிராக இருந்த பெருமாள் சாமியின் போக்கை எண்ணிப் பெருமூச்சு விட்டான் முருகையன். நாளுக்கு நாள் அவனுக்குத் தொழிலாளர்களிடையே ஆதரவு பெருகிக் கொண்டிருந்தது. அதே சமயம் அவனைச் சந்தேகக் கண் கொண்டும் சிலர் பார்க்கத் தலைப்பட்டார்கள். அவனுடைய நடவடிக்கைகள் கண்காணிக்கப் பட்டன. ஏதோ குற்றம் செய்து விட்டுத் தப்பி ஓடி வந்திருப்பவன் என்றுகூடச் சிலர் ரகசியமாகப் பேசிக் கொண்டார்கள்.

'பாவம், சாந்தா! இப்படிப்பட்டவனுடன் பழகினால் அவளுக்கு மல்லவோ தொல்லைகள் ஏற்படும்?' என்று கவலைப் பட்டான் முருகையன்.

இடையில் சுந்தரம் ஒரு நாள் முருகையனிடம் ஒரு முக்கியமான செய்தியை வெளியிட்டான். ''முருகையா! புது வகையான சில யந்திரங்களைக் கொண்டு மேல்நாடுகளில் நிலக்கரி தோண்டுகிறார்கள். இங்கேயும் அதற்காகச் சில யந்திரங்கள் வந்திருக்கின்றன. அவைகளை இயக்குவதற்குப் பயிற்சியளிப்பதற்காகப் பத்துப் பன்னிரண்டு பேர்களைத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். உன் பேரும் அதில் இருக்கிறது. பக்கத்து ஊரில் உள்ள ஒரு சுரங்கத்துக்குச் சென்று சில வாரங்கள் நீ இயந்திரப் பயிற்சி பெற்றுக் கொள்ள வேண்டியதிருக்கும்.''

''இயந்திரங்கள் வந்து விட்டால் பிறகு இங்குள்ள தொழிலாளர்களுக்கே



மனைவி: ஜலதோஷத்திற்கு மருந்து போட்டுக் கொள்ள அப்பாவுக்கும் பிள்ளைக்கும் இதைத் தவிர வேறு வழி தோன்றவில்லையா?

வேலையிருக்காதே!'' என்றான் முருகையன்.

''அப்படியெல்லாம் ஒன்றும் திடீரென்று நடந்துவிடாது. நடைமுறையில் பலன் எப்படியிருக்கிறது என்று பார்ப்பதற்குத்தான் இப்போது முயற்சி செய்கிறார்கள். இன்னும் புதிய சுரங்கங்கள் தோண்டி அதிகமாகக் கரி எடுக்க வேண்டும் என்ற திட்டமும் இருக்குமென்று தெரிகிறது.''

யோசனை செய்தான் முருகையன். பல்வேறு யந்திரங்கள் தோன்றி எத்தனையோ வசதிகளை மனிதர்களுக்குச் செய்து கொண்டிருப்பது அவனுக்குத் தெரிந்ததுதான். ஆனால் ஏற்கனவே போதுமான வேலை கிடைக்காத மக்கள் கூட்டம் நிறைந்த நாட்டில் இயந்திரங்கள் வந்து குவிந்தால்.....

அவனுடைய யோசனையைப் புரிந்து கொண்டவன்போல் சுந்தரம் இலேசாகச் சிரித்தான்.

''திடீர் திடீரென்று வெகு வேகமாக மாறிக் கொண்டிருக்கும் காலம் இது. இந்தச் சுரங்கத் தொழில் கூட அப்படிப் பல மாறுதல்களை அடையலாம். எப்படியும் முடிவில் தொழிலாளர்கள் முதல் எல்லோருக்கும் நன்மை ஏற்படுமென்றே நம்புகிறேன். உனக்குக் கிடைத்திருக்கும் வாய்ப்பை நழுவ விடாதே. நீ போகாவிட்டால் உனக்குப் பதில் மற்றொருவன் போக வேண்டியிருக்கும். அவ்வளவுதான்.''

முருகையன் இயந்திரப் பயிற்சி பெறுவதற்கு ஒப்புக் கொண்டான். பத்து மைல்களுக்கு அப்பாலிருந்த ஓரிடத்தில் சில வாரங்களுக்குத் தொடர்ந்தாற்போல் பயிற்சியாம்.

ஊரை விட்டுப் புறப்படுவதற்கு முதல் நாள் முழுவதும் அவனுடைய மனம் என்னவோ போல். இருந்தது. அன்றைக்கு அவனுக்குச் சுரங்கத்தில் வேலை கிடையாது. சுந்தரம் தன் அலுவலகத்துக்கும் குழந்தைகள் பள்ளிக்கும் சென்று விட்டதால் வீட்டில் அடைத்துக் கிடக்கவும் அவனுக்குப் பிடிக்கவில்லை.

ஒரு நோக்கமும் இல்லாமல் தெக்கு மரத் தோப்புக்குள் சிறிது தூரம் நடந்து சென்றான். என்றுமில்லாதபடி ஏதோ ஒரு தனிமை உணர்ச்சி அவனை வாட்டி எடுத்தது. உடன்பிறந்தவனைப் போன்ற சுந்தரமும் அவனது குடும்பத்தாரும் துணையிருந்தும்கூட எப்படி அந்தத் தனிமை உணர்வு ஏற்பட்டதென்றே அவனுக்குத் தோன்றவில்லை.

தனிமை... பொறுக்க முடியாத வேதனை நிறைந்த தனிமை...

தாயில்லை, தந்தையில்லை, உற்றமில்லை, சுற்றமில்லை, மனம் விட்டுப் பேசிச் சிரிப்பதற்கோ அழுவதற்கோ யாருமே இல்லை! இடீரென்று வாழ்க்கையில் இருந்த பற்றுதல் அவ்வளவும் கழன்று விட்டது போல் ஒரு பிரமை தட்டியது முருகையனுக்கு. யாருக்காக வாழ வேண்டும்? எதற்காக வாழவேண்டும்? பெருமாள்சாமியிடம் அவனால் இந்தத் தனிமையைப் பகிர்ந்து கொள்ள முடியாது.

சுயநினைவு வந்தபோது முருகையன் குழந்தைகளின் விடுதியோரம் நின்று கொண்டிருப்பதைக் கண்டான். ஜன்னல் வழியே அவன் கண்கள் உள்ளே நோக்கின. சாந்தாவை அங்கு காண வில்லை. அவளுக்கும் அன்று ஓய்வு நாளோ என்னவோ?

வீட்டுக்கே திரும்பி வர நினைத்தவன், பிறகு சாந்தாவின் வீட்டை நோக்கி வேகமாக நடந்தான். மூங்கிற் பட்டை வேலி சூழ்ந்த சின்னஞ்சிறு தோட்டத்துக்குள் அவளுடைய வீடு தனித்திருந்தது. சாந்தாவின் தாயார் கூடத்துக்குள் உறங்கிக் கொண்டிருந்தார். சத்தம் கேட்டுத் தன்னுடைய அறைக்குள்ளிருந்து வெளியில் வந்த சாந்தாவுக்கு முருகையனைக் கண்டவுடன் ஏற்பட்ட ஆனந்தத்துக்கு எல்லையில்லை. படித்துக் கொண்டிருந்த புத்தகத்தைக் கீழே வைத்து விட்டு, தன்னுடைய நாற்காலியில் அவனை உட்காரச் செய்தாள். தரையில் சுவர் ஓரமாக அவள் மண்டியிட்டு அமர்ந்தாள்.

நாற்காலியில் உட்கார்ந்தவன் புத்தகத்தின் அட்டையைப் பார்த்தான். குழந்தைகளின் ஆரோக்கிய வாழ்வு பற்றிய நூல் அது. சாந்தாவிடம் அவனுக்கு என்ன பேசுவது என்று தோன்றவில்லை. வழக்கத்துக்கு மாறாக அவளுடைய அடர்ந்த கருங்கூந்தலைச் சிறிது நேரம் உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தான். சென்னையில் இருந்ததைவிட இப்போது அவள் அதிகமான அழகோடும் ஆரோக்கியத்தோடும் இருப்பது போல் தோன்றியது.

இருவருடைய கண்களும் சந்தித்துக் கொண்டன. ஆனால் சாந்தா உடனே தன் விழிகளைத் தாழ்த்திக் கொண்டாள்.

சிறிது நேரம் இருவரும் மௌனத்தில் மூழ்கியிருந்தனர். பிறகு இருவராலுமே அதைப் பொறுக்க முடியவில்லை.

''எப்போதாவது இந்தப் பக்கம் வந்து போவீர்கள் என்று நினைத்தேன். ஆனால் நீங்கள் எங்களை மறந்தே போய் விட்டீர்கள் போலிருக்கிறது.''

முருகையன் மெல்லச் சிரிப்பதற்கு முயற்சி செய்தான். நீண்ட பெருமூச்சுத்தான் வெளியில் வந்தது. அவனுடைய விழிகள் திறந்திருந்தனவே தவிர, அவற்றின் மீது பனித் திரை போன்ற கண்ணீர் படிந்திருக்கக் கண்டாள் சாந்தா.

காரணம் சாந்தாவுக்கும் தெரியவில்லை; முருகையனுக்கும் தெரியவில்லை.

'ஒரு வேளை சித்திராவின் நினைவு வந்து விட்டதோ?' என்று நினைத்துக் கொண்டு அனுதாபத்தோடு அவன் முகத்தை நோக்கினாள் சாந்தா. அவள் விழிகளில் நிரம்பியிருந்த அன்பும், பரிவும் அவனுக்கு எங்கும் கிடைத்தறியாத ஆறுதலைத் தந்தன. (தொடரும்)

பரவு நோய்!



'டெட்டாலை' நம்புங்கள்

'டெட்டால்' உலகிலேயே மிகவும் நம்பிக்கைக்குப் பாத்திரமான கிருமிநாசினி. அது, தொற்று நோயிலிருந்து உங்களுக்கு திடமான பாதுகாப்பை, அதிலும் முக்கியமாக, பரவு நோய் இருக்கும் காலத்தில் அளிக்கிறது. கிருமிகளைக் கொல்லக் கூடிய 'டெட்டாலை', துணி துவைக்கவும், தரைகளைத் துடைக்க உபயோகப்படுத்தும் தண்ணீரிலும் கலந்து உபயோகியுங்கள். ஒவ்வொரு தடவையும் நீங்கள் குளிக்கும் நீரில் 'டெட்டாலை'க் கலந்து குளியுங்கள்.

உங்களைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள். உங்களைச் சூழ்ந்திருப்போரையும் பாதுகாத்துக்கொள்ளுங்கள். பரவு நோய்கள் கண்டிருக்கும்போது, 'டெட்டாலை'த் தவறாமல் உபயோகிக்கப் பழக்கத்துக்குக் கொண்டுவாருங்கள். தொற்று நோயிலிருந்து உங்களைப் பாதுகாக்க 'டெட்டாலை' சிறந்த கேடயம்!



அட்லாண்டிஸ் (ஈஸ்ட்) லிமிடெட்
(இங்கிலாந்தில் இணைக்கப்பட்டது)



அற்புத விளக்கு அலாவுதீனை எல்லாருக்கும் தெரியும். ஆனால் அவனுடைய பரம்பரையிலே வந்த இலாவுதீனைப் பற்றி அதிகம் பேருக்குத் தெரியாது. ஏன், இலாவுதீனே தன் கதையை என்னிடம் சொல்வதற்குமுன் எனக்கே அது தெரியாதே!

இலாவுதீனுடைய முழுப் பெயர் ஷேக் அப்துர் ரஹ்மான் அல் ஸஹூதி அல் ஷாயப் இலாவுதீன் இல்ஹி. அலாவுதீனுக்குச் சீன சுல்தானுடைய மூத்த குமாரி மூலம் பிறந்த குழந்தைகள் வழி வழி வந்த நம் இலாவுதீனுடைய மூதாதையர்கள் ராஜகுமாரர்களாக இருந்திருக்கலாம்; இலாவுதீனுக்கென்னவோ வறுமையே பொக்கிஷமாக இருந்தது. எங்களூர் தாலுகா ஆபீஸில் பியூனாக இருக்கும் இலாவுதீன் எவ்வளவு செல்வம் சேர்த்து வைத்துவிடப் போகிறான்!

பல வருஷங்களுக்கு முன் ஒரு நாள் தலைமைக் குமாஸ்தா சுந்தரம் பிள்ளை, "இலாவுதீன்! இலாவுதீன்!.... எங்கே அவன்? தூங்கப் போயிட்டானா என்ன?" என்று கத்தினார். அதிசயமாக விழித்துக் கொண்டிருந்த இலாவுதீன், "ஸாஅஅஅர்!" என்று குரல் கொடுத்துக் கொண்டு ஓடி வந்தான்.

"இந்தா பாரு, டெப்டி கலெக்டர் நாளைக்கு வருகிறாராம். ஆபீஸிலே ஒரு இடம் விடாமே சுத்தமாய்த் துடைச்சு வைக்கணும், தெரியுமா?" என்றார் சுந்தரம் பிள்ளை.

"இதோ, இப்பவே துடைச்சு வச்சுடறேன், சார்" என்று தன் மேல் இருந்த நீலத் துணியை எடுத்துத் தூசி தட்ட ஆரம்பித்தான் இலாவுதீன். மேஜை, நாற்காலி எல்லாவற்றையும் துடைத்த இலாவுதீனுக்கு அறையின் மின்சார ஸ்விச்சையும் துடைத்து விடலாம் என்று தோன்றியது. கிழக்கிந்தியக் கம்பெனியார் காலத்தில் போட்டது போன்ற பித்தளை ஸ்விச் அது. அதைத் துடைக்க ஆரம்பித்தானோ இல்லையோ, அவன் தலை சுழன்றது. உலகமே தொறுங்கி விழுந்து விட்டது போல் சத்தம் கேட்டது.

"எஜமான்! என்ன வேணும்? உத்தரவு!" என்ற குரல் கேட்டு நிமிர்ந்து பார்த்தான். வானளாவும் கரிய உடல் கொண்டதொரு பூதம் எதிரே நின்றது. நடுங்கிப் போனான் அவன். "நீ....நீ...யார்?" என்றான். பூதம் சிரித்தது. அதன் கோரமான பற்கள் அவனுடைய பீதியை அதிகரித்தன. "எஜமான்! நான்தான் விளக்கு பூதம். அலாவுதீன் அற்புத விளக்கு பூதம்" என்றது அக்கரிய உருவம்.

"பூ...பூ...பூதமா! ஐயையோ! அதெல்லாம் கதை என்றல்லவா நினைத்தேன்!"

"இல்லை, எஜமான்! முற்றிலும் உண்மை. சந்தேகமானால் என்னைக் கிள்ளிப்பாருங்கள்!"

"அலாவுதீன் விளக்குக்கு அடிமையான நீ இங்கே எப்படி வந்தாய்?"

"எஜமான், நீங்கள்தானே என்னைக் கூப்பிட்டீர்கள்!"

"நானா? நானா?"

"ஆமாம், எஜமான்! நீங்கள்தானே விளக்கு ஸ்விச்சைத் துடைத்தீர்கள்!"

"விளக்கு ஸ்விச்சைத் துடைத்தால் நீ வருவானேன்...?"

"அது பெரிய கதை. அலாவுதீன் இறந்த பிறகு அவரது அற்புத விளக்கை யாரும் கவனிக்க வில்லை. அது எங்கெங்கோ கிடந்து, யார் யார் கையிலோ அகப்பட்டு, முடிவில் பல வருஷங்களுக்கு முன் சீமையில் ஒரு மின்சாரக் கம்பெனிக்குப் போய்ச் சேர்ந்தது. அங்கே அதை உருக்கி இந்த விளக்கு ஸ்விச்சாகச் செய்தார்கள். அந்த ஸ்விச்சை இத்தனை வருஷங்களாக யாரும் துடைத்தது கிடையாது. நானும் நம்மை அழைப்பாரில்லையா என்று ஏங்கிக் கொண்டிருந்தேன். இன்றுதான் சுதினம். என்னை நீங்கள் கூப்பிட்டீர்கள்!" என்றது பூதம்.

"ஐயய்யோ, அந்த ஸ்விச்சைத் துடைப்பதிலுள்ள ஆபத்துத் தெரிந்திருந்தால் அதன் பக்கமே போயிருக்க மாட்டேனே!"

"எஜமான், ஆபத்து இல்லை, அதிர்ஷ்டம் என்று சொல்லுங்கள்! அந்த விளக்கைத் துடைக்கும் எஜமானர் இடும் எந்த வேலையையும் சிரமேல் தாங்கிச் செய்து முடிக்க நானும் என் சகோதர பூதங்களும் தயாராக இருக்கிறோம். உங்கள் உத்தரவு என்னவென்று சொல்லுங்கள்!"

"என்ன உத்தரவானாலும் செய்வாயா?"



''ஆமாம், பிரபுவே!''

''அப்படியானால் என் கண் முன்னால் நிற்காதே. மறைந்து போ! எனக்குப் பயமாக இருக்கிறது!''

பூதம் சிரித்தது. ''உங்கள் அடிமையைக் கண்டா பயப்படுகிறீர்கள்? இந்த உலகத்தையே பாயாகச் சுருட்டிக் கொண்டு வா என்றால்கூடச் செய்து முடிப்பேன். உத்தர விடுங்கள்!''

''வேண்டாம், வேண்டாம்! பூமியைப் பாயாகச் சுருட்டிக் கொண்டு வந்து விட்டால் நான் சாயந்திரம் எந்த வீட்டுக்குப் போவேன்?''

''எஜமான்! என்னைச் சோதிக்கிறது போல் இருக்கிறது. ஏழ்கடலுக்கு அப்பாலுள்ள நீல நதியின் மத்தியிலுள்ள முத்து மாளிகையில் உங்களைக் கொண்டு போய் விட்டுமா, சொல்லுங்கள்.''

''முத்தும் வேண்டாம்; மாளிகையும் வேண்டாம். எனக்குப் பசிக்கிறது. மூலைக் கடை ராயர் ஓட்டலிலிருந்து இரண்டு போண்டாவும் அரை கப் காப்பியும் கொண்டு வா, போதும்.''

அலாவுதீன் இதைச் சொல்லி முடிக்கவில்லை. அவன் முன்னால் ஒரு தட்டில் இரண்டு ஆவி போண்டாக்களும் அரை கப் காப்பியும் இருந்தன. அலாவுதீன் அவற்றைத் தின்று முடித்து விட்டு, ''அப்பாடா!'' என்றான்.

ஆனால் அவன் நிம்மதியாக இருக்க முடியவில்லை. ''எஜமான்! இன்னும் என்ன வேண்டும்! சொல்லுங்கள்!'' என்றது பூதம்.

'இதென்னடா, வம்பாய்ப் போயிற்று?' என்று தன்னையும் அறியாமல் சொல்லி விட்டான் அலாவுதீன். இதைக் கேட்ட பூதம் 'ஓ' வென்று அழ ஆரம்பித்தது. ''எஜமான்! உலகத்தில் உள்ள ஐசுவரியங்கள் அத்தனையையும் உங்கள் காலடியில் வைக்கத் தயாராக இருக்கிறேன். நீங்களோ இரண்டு போண்டாவும் அரை கப் காப்பியும் கொண்டு வரச் சொல்லிச் சாப்பிட்டு விட்டுப் போதும் என்கிறீர்களே! இந்த அடிமை மீது இரக்கம் இல்லையா?'' என்று மறுபடியும் அழுதது.

அலாவுதீனுக்குப் பயம் ஒரு பக்கம், தைரியம் ஒரு பக்கம். இந்தப் பூதத்துக்கு வேலை தராவிட்டால் நம் மீதே பாய்ந்து விட்டால் என்ன செய்வதென்ற கவலை அவனைப் பிடித்துக் கொண்டது. பூதம் சொன்னபடிதான் செய்து பார்ப்போமே என்ற தைரியம் ஒரு புறம் உந்தியது. ''சரி, உன் இஷ்டப்படியே எனக்குச் சகல செல்வங்களும் கொடு'' என்று சொன்னான்.

பூதம் சந்தோஷத்துடன் துள்ளிக் குதித்தது. ''எஜமான்! தங்களை நிலைக் கண்ணாடியில் பார்த்துக் கொள்ளுங்கள்!'' என்றது.

''நிலைக்கண்ணாடியா! உளறுதே. அது எங்கே இருக்....'' என்று பேச ஆரம்பித்தவன் அப்படியே பேச்சை நிறுத்தி விட்டான். ஏனென்றால் அவன் முன்னால் ஆள் உயரத்துக்கு ஒரு நிலைக்கண்ணாடி இருந்தது. அதில், இளம் வயதுடைய ஒரு ராஜகுமாரனின் தோற்றம்

தெரிவதைக் கண்டு, தன்னைத் தானே பார்த்தான். ஆச்சரியம்! அவன் ஓர் இளம் ராஜகுமாரனைப் போல் இருந்தான்! அவனுடைய கந்தல் சொக்காய்களெல்லாம் உயர்ந்த சீனப் பட்டில் வைர வைடூரியங்கள் தைத்த உடுப்பாக மாறியிருந்தன!

அலாவுதீன் ஒரு கோடீசுவரனாகி விட்டான். விளக்கு பூதம் அவனுக்குச் சகல செல்வங்களும் இருக்கும்படி செய்தது. அவன் காலம் சுகமாகக் கழிந்தது. அந்த ராஜ்யத்திலே நவாபைத் தவிர அவன்தான் பெரிய பணக்காரன்!

ஆனால் நவியிதி யாரை விட்டது?

அந்த ராஜ்யத்திலே ஒரு பாதுஷா. அவனுக்கு ஒரு பெண். அந்த ராஜகுமாரி ஒரு நாள் அலாவுதீனைப் பார்த்து விட்டாள். கேட்பானேன்! கண்டதும் காதல் ஏற்பட்டு விட்டது. ராஜகுமாரி பல நாட்கள் ஒன்றுமே சாப்பிடவில்லை. உணவு செல்லவில்லை. உறக்கம் கொள்ளவில்லை. என்னவோ ஏதோ என்று எல்லோரும் பயந்தார்கள். கடைசியில் ராஜகுமாரியின் தாதி எல்லாவற்றையும் கண்டு பிடித்து, பாதுஷாவிடம் சொல்லி விட்டாள். உடனே பாதுஷா ஒரு காரியம் செய்தான். அலாவுதீனைப் பார்த்து அழைத்து வர ஆள் அனுப்பினான். இதை அறிந்த பூதம் தானாகவே அலாவுதீன் முன் ஓடோடி வந்து நின்றது. திடீரென அதைக் கண்டு நடுங்கிப் போன அலாவுதீன் "உன்னைத்தான் என் முன் வர வேண்டாம் என்றிருக்கிறேனே, ஏன் வந்தாய்" என்று பொய்த் தைரியத்துடன் அதட்டினான்.

"ஷேக் ஸாஹேப், விசேஷ சமாசாரம் இருக்கிறது. சொல்ல வந்தேன். நம் நாட்டின் பாதுஷா இருக்கிறார் அல்லவா...."

"இருக்கிறார். அவருக்கு என்ன?"

"அவருக்கு ஒரு பெண்."

"இளவரசிதானே?"

"ஆமாம், இளவரசி நூருன்னிஸா பேகம். அவளுக்கு...."

"என்ன நேர்ந்து விட்டது?"

"ஒன்றுமில்லை, காதல் நேர்ந்து விட்டது."

"நல்ல வேளை! அந்தக் கிழட்டு இளவரசி இனி என்னைத் தொல்லை செய்ய மாட்டாள்! நாட்டிலே அவளை மணக்கத் தகுதியுடையவன் நான் ஒருத்தன்தான் இருப்பதாக அன்றொரு நாள் சில பிரபுக்கள் பேசிக் கொண்டார்களாம். இந்த ஆபத்தை எப்படிச் சமாளிப்பதென்று கவலைப் பட்டேன். காதலன் ஒருத்தனைக் கண்டுபிடித்து விட்டாளல்லவா, இனி கவலையில்லை."

"அந்தக் காதலனையே தான் மணக்கப் போவதாக அவள் உறுதி கொண்டிருக்கிறாள், எஜமான்! அதனால் அவள் சரியாக உணவருந்துவதில்லை, உறக்கம் கொள்வதில்லை...."

"அந்தக் காதலனைப் பிடித்து அவளுக்குக் கல்யாணம் செய்து கொடுத்து விடுவதுதானே! பாதுஷாவுக்கு இதுகூடவா முடியாது!"

"அவரால் முடியாதது எது! அதற்காகத் தான் அவர் தம் முதன் மந்திரி வஸீரே ஆலமை உங்களிடம் அனுப்பி யிருக்கிறார்."

"என்னிடமா? என்னிடமா?"

"ஆமாம், பிரபோ! இளவரசி நூருன்னிஸா பேகம் காதல் கொண்டிருப்பது தங்களிடம் தான்!"

இதைக் கேட்டதும் அலாவுதீனுக்குச் சகல நாடிகளும் ஒடுங்கிப் போய் விட்டன. "என்ன சொன்னாய்? இளவரசி என்னையா மணக்க விரும்புகிறாள்! முடியாது, முடியாது! எனக்கு ஏற்கனவே கல்யாணமாகி விட்டது. என் மனைவி இதை அறிந்தால் என் காதைப் பிய்த்தெறிந்து விடுவாள்!" என்று அலறினான்.

"நூருன்னிஸா பேகத்துக்கு எல்லாம் தெரியும். ஐம்பது காதலர்களின் தலையைக் கொய்து எறிந்த அவள் இதற்கா பயப்படப் போகிறாள்?"

"நான் என்னதான் செய்யலாமென்கிறாய்....?"

"ராஜ்ய நன்மையை முன்னிட்டு, உங்கள் சொந்த விருப்பு வெறுப்புக்களை விட்டு விட்டு, இளவரசியை மணந்து கொள்ளுங்கள்."

"நீ கூட அவள் கட்சியில் சேர்ந்து விட்டாயா? நான் என்ன செய்வேன்!"

"எஜமான், நீங்கள் அப்படிச் சொல்லக் கூடாது. உங்களுக்கு என்ன இஷ்டமோ அதைச் செய்வதே என் கடமை. என் அபிப்பிராயத்தைத் தெரிவித்தேனே தவிர....."

"இப்போது நான் என்ன செய்யலாம், சொல்லு. அந்த அவலக்ஷணக் கிழட்டு இளவரசியிடமிருந்து நான் எப்படியாவது தப்ப வேண்டும்."

"கவலைப் படாதீர்கள். பச்சைக் கடல் நடுவே கண்காணாப் பவழத் தீவில் உங்களைக் கொண்டு போய் விட்டு விடுகிறேன்."

"உனக்கு ரொம்பப் புண்ணியமுண்டு.— உடனே செய்."

"உங்கள் மனைவியை?"

"அவளையும் அங்கே கொண்டு வந்து விடு. என் குழந்தைகளையும் தான்."

"மாளிகை?"

"அதையும் தான்."

"உத்தரவு, ஷேக் ஸாஹேப்!"

"அங்கே நூருன்னிஸாவின் தொந்தரவு இருக்காதே?"

"இருக்கவே இருக்காது."

"அந்த அவலட்சணம் என் கண்ணில் படவே மாட்டாளே?"

"நீங்கள் இருக்கும் இடம் அவளுக்குத் தெரிந்தால்தானே கண்ணில் பட!"

"பேஷ்! நல்ல யோசனை. உடனே செய்து விடு" என்று அலாவுதீன் உத்தரவு கொடுத்ததுதான் தாமதம், விளக்கு பூதம் அவன் கோரிய அத்தனை காரியங்களையும் செய்து முடித்து விட்டது. அது மட்டுமல்ல, தன்னை அழைப்பதற்கான விளக்கு ஒலிக்க உட்படப் புது இடத்தில் ஏற்பாடு செய்து விட்டது.

கண்காணாத் தீவில் சில காலம் சுகமாக இருந்தான் அலாவுதீன். ஆனால் அவன் தொல்லைகள் தீர்ந்தபாடில்லை. அலாவுதீனுடைய அற்புத விளக்கு மீண்டும் அகப்பட்டிருப்பதை எப்படியோ அறிந்து, எகிப்து தேச மந்திரவாதி அதைத் தேடிக் கொண்டு வந்தான். ஏற்கனவே அலாவுதீன் இருந்த நாட்டுக்கு வந்து விசாரித்ததில், அலாவுதீனும் இல்லை. அவனது மாளிகையும் இல்லை. அற்புத விளக்கும் இல்லை என்று அறிந்தான். துக்கத்தில் மூழ்கிய பாதுஷாவும் துரும்பாய் இளைத்துப் போன நூருன்னிஸா ராஜகுமாரியுமே இருந்தார்கள்.

ஈறு உபாதை மற்றும் பற்சிதைவிலிருந்து

குணமடைந்ததைப்பற்றிய

வியக்கத்தக்க செய்திகள்

தாமாகவே விரும்பி எழுதப்பட்ட அத்தாட்சிக் கடிதங்கள்

போர்ஹான்ஸ்

பற்பசையின பிரத்தியேகமான மதிப்பை நிரூபிக்கின்றன.

"எனக்கு இப்போது 55 வயதாகிறது.

என்னுடைய எல்லாப் பற்களும் சீராகவே இருக்கின்றன. ஆனால் 1943-ல் என்னுடைய இரண்டு பல்வரிசைகளிலும் உள்ள முன்புற மற்றும் பக்கவாட்டு நூமுள்ள பற்கள் அசையத் தொடங்கின. அவை விழுந்துவிடுமென்றே நான் நினைத்தேன். 1943-ல் ஒரு நாள் போர்ஹான்ஸைப்பற்றிய குறிப்புகளைக் கண்டேன். நான் அதை உபயோகிக்கத் தொடங்கினேன். இப்போது போர்ஹான்ஸ் என் பற்களைக் காப்பதுடன் அவற்றை வலுவுள்ளதாகவும் செய்திருக்கிறதென்பதைக் கூற மகிழ்கிறேன்."

"நான் எப்பொழுதும் போர்ஹான்ஸையே குறிக்கிறேன்.

பற்கள் அல்லது ஈறுகளிலுள்ள கோளாறுகளுக்காக என்னிடம் சிகிச்சைபெறுபவர்களும் எப்பொழுதும் அதற்காக நன்றி கூறுகிறார்கள். சிகிச்சை பெறும் குழந்தைகளைக்கூட போர்ஹான்ஸ் உபயோகிக்கும்படி நான் சிபார்சு செய்கிறேன். மேலும் என்னுடைய ஆஸ்பத்திரிக்கு வருபவர்களில் பலர் அவர்களின் குழந்தைகளுக்கும் போர்ஹான்ஸையே உபயோகிக்கிறார்கள்."

"நான் மிகச் சிறந்த பலனை அடைந்திருக்கிறேன்.

போர்ஹான்ஸ் உபயோகிப்பதால், என் தகப்பனார்மூலம் நான், போர்ஹான்ஸ் ஈறுகளுக்குப் பலனளிக்கக் கூடியது என்று கேட்டிருக்கிறேன். ஆதலால், எனக்கு ஈறுகளில் உபாதை ஏற்பட்டவுடன், என் தந்தையின் புத்திமதிப்படி போர்ஹான்ஸ் உபயோகிக்கத் தொடங்கினேன். அன்றிலிருந்து இன்றுவரை போர்ஹான்ஸையே உபயோகித்து வருகிறேன்."

போர்ஹான்ஸ்
ஒரு
பல் வைத்தியரால்
உருவாக்கப்பட்ட
பற்பசை.



GEOFFREY MANNERS & CO., LIMITED

நூருன்னிஸாவின் நோயைத் தீர்த்து வைப்பதாகக் கூறிவிட்டு, மந்திரவாதி தன்னுடைய வைரக்கல் மோதிரக் குட்டிச் சாத்தானை அழைத்து விசாரித்தான். அலாவுதீன் இருக்கும் இடம் தெரிந்தது. மந்திரவாதி அங்கே போய்ச் சேர்ந்தான்.

அலாவுதீன் மாளிகை வாசலில் போனான் மந்திரவாதி. வாயிற் காப்போனை அணுகி, "அப்பனே, இதுதானே அலாவுதீன் பிரபு மாளிகை? இங்கே மின்சார விளக்கு ஸ்விச்சுகளை மராமத்து பார்க்கும்படி என்னை வரச் சொல்லியிருக்கிறார்கள். விளக்கு ஸ்விச்செல்லாம் பழையதாய்ச் சரியாக இல்லையாம். அவைகளையெல்லாம் புதுப்பிக்க எஜமான் வரச் சொன்னார்" என்றான்.

வேலைக்காரன் உள்ளே ஓடிப்போய்க் கேட்டு வந்தான். "வாருங்கள், வாருங்கள். மின்சார விளக்கு ஸ்விச்சில் ஒன்றுதான் ரொம்பப் பழையதாக இருக்கிறதாம். அதைச் சரியாகப் போடவே முடியவில்லையாம்" என்றான்.

"அதனாலென்ன! பழைய ஸ்விச்சை எடுத்து விட்டுப் புது ஸ்விச்சு போட்டால் போகிறது!"

வேலைக்காரன் பழைய ஸ்விச்சைக் காட்டினான். மந்திரவாதி அதைத் துடைத்தான்.

பூதம் வந்து நின்றது. "எஜமான் உத்தரவு" என்றது.

"ஹஹ் ஹஹ் ஹா! சரியான ஸ்விச்தான்! விளக்கு பூதமே. உத்தரவு இடட்டுமா?" என்றான் மந்திரவாதி.

"தங்கள் அடிமை காத்திருக்கிறேன்" என்றது பூதம்.

"இந்த மாளிகையை முன் போல் பழைய அரிலேயே பாதுஷாவின் அரண்மனைக்கு எதிரே வைத்து விடு. ராஜகுமாரி நூருன்னிஸா இதைக் கவனிக்கும்படியும் செய்து விடு. இந்த ஸ்விச் மட்டும் மறுபடியும் அற்புத விளக்காகும்படி செய்து விடு" என்றான் மந்திரவாதி.

அடுத்த நிமிஷம் அவன் சொன்னபடியே செய்து விட்டதாய் பூதம் வந்து தெரிவித்தது. பூதத்தை அனுப்பி விட்டு, பாதுஷாவிடம் போனான் மந்திரவாதி. மந்திரவாதியைக் கண்டதும், பாதுஷா, "என்ன மந்திரவாதி யாரே, அலாவுதீனைக் கொண்டு வருவதாய்ச் சொல்லி விட்டு நீரே மறைந்து விட்டீரே!" என்றான் கோபமாக.

"சற்றுப் பொறுமையுடன் ஜன்னல் வழியே பாருங்கள்" என்றான் மந்திரவாதி. பாதுஷா பார்த்தான். அலாவுதீன் மாளிகை மறுபடியும் இருப்பதைக் கண்டு ஆச்சரியமடைந்தான். ஆனால் மறுநிமிஷம் மிகுந்த கவலையுடன், "இது சரி. என் அருமைப் பெண் நூருன்னிஸா இன்னும் வாடி வதங்கிக் கொண்டிருக்கிறாளே!" என்றான்.

அறைக்குள் நுழைந்த அலாவுதீனைக் கண்டதும் பாதுஷாவுக்கு மகிழ்ச்சி அளவுக்கு மீறி விட்டது.

"அலாவுதீன், என் அருமைப் புதல்வியைக் காப்பாற்றிய புண்ணிய புருஷன் நீ! சமயத்துக்கு வந்து சேர்ந்தாய்! நூருன்னிஸாவைத் திருமணம் செய்து கொண்டு சுகமாயிருப்பாயாக! எனக்குப் பின் இந்த ராஜ்யத்தை ஆளுவாயாக!" இப்படிப் பாதுஷா சொன்னதைக் கேட்டதும் அலாவுதீனுடைய சகல நாடிகளும் ஒடுங்கிப் போய் விட்டன.

"பாதுஷா! மன்னிக்க வேண்டும். கல்யாணம் மட்டும் முடியாது" என்று தடுமாற்றத்துடன் சொன்னான் அலாவுதீன்.

பாதுஷா பல்லைக் கடித்துக் கொண்டார். மந்திரவாதியும் பற்களை நெறு நெறுவென்று கடித்து "பார், அலாவுதீன்! மேலான பாதுஷாவின் உத்தரவை மறுதளிக்க உனக்கு உரிமை இல்லை. மரியாதையாக அவர் உத்தரவுப்படி நட!" என்று உறுமினான்.

அலாவுதீனுக்குக் கிலி பிடித்துக் கொண்டது. "கல்யாணமா! வேண்டாம்! வேண்டாம்!" என்று அறையிலிருந்து ஓடினான்.

"விடாதே! பிடி! பிடி! விடாதே!" என்று துரத்தினார்கள்.

"முடியாது முடியாது! என்னை விட்டு விடுங்கள்! கல்யாணம் வேண்டாம்! விட்டு விடுங்கள்!" என்று அலாவுதீன் கூவினான்.

"விட்டு விடுங்கள். மூர்ச்சை தெளிந்து வருகிறது" என்றார் டாக்டர்.

"நான் கல்யாணம் செய்து கொள்ளமாட்டேன்! ஹஹ்ஹூம்! முடியாது!" என்று சொல்லிக் கொண்டே கண்ணைத் திறந்தான் அலாவுதீன். சுற்றிலும் பார்த்தான். மந்திரவாதியைக் காணோம். பாதுஷாவைக் காணோம். நூருன்னிஸாவைக்கூடக் காணோம். முகமூடி அணிந்த டாக்டர்தான் இருந்தார்.

"நான் எங்கிருக்கிறேன்? என்னை விட்டு விடுங்களேன்" என்றான் அலாவுதீன்.

"பயப்படாதே. ஜெனரல் ஆஸ்பத்திரியில் தான் இருக்கிறாய். நீ யாரையும் கல்யாணம் செய்து கொள்ள வேண்டாம்!" என்று டாக்டர் சிரித்துக் கொண்டே சொன்னார்.

"நூருன்னிஸாவைக் கூடவா?" என்று கேட்டான் அலாவுதீன்.

"நூருன்னிஸாவா? நூருன்னிஸா யார்?" என்று கேட்டு விட்டு, சுற்றிலும் இருந்தவர்களிடம், "பாவம். எலெக்ட்ரிக் ஷாக் அதிர்ச்சி அதிகம் போலிருக்கிறது. அவன் மனம் இரேபடியாய்க் குழம்பிக் கிடக்கிறது!" என்றார் டாக்டர்.

மலரன்ன மென்மைக்கும்
மணங்குன்றாத்தன்மைக்கும்
நீபா... இணையற்ற நீபா ...



நீபா



டாய்லட் பவுடர்
ஹேர் ஆயில்

வயது வாடச் செய்யாத வனப்பு! வெப்ப தட்பங்கள் பாதிக்காத சரும எழில்! காரணம், எப்பொழுதும் அவள் உபயோகிப்பது நீபா!

A. K. S. & கம்பெனி அடையார்; மதராஸ்-20

வெறும் விலங்கு

வையவன்

கூ வென்று அலறியவாறு அடர்ந்திருந்த காரிருளில் எதையோ தேடுவதுபோல் ரயில் சென்று கொண்டிருந்தது. வண்டியில் தூக்க மயக்கத்தால் சில தலைகள் ஆடிக் கொண்டிருந்தன. துணைக்கு வந்திருந்த 304 நிம்மதியாகத் தொப்பியைக் கழற்றி 'பெர்த்'தின் மீது வைத்து விட்டு, கையை மடக்கி அதன்மீது படுத்து விட்டார். ராஜமான குறட்டைகள் அவரிடமிருந்து கிளம்பிக் கொண்டிருந்தன. ராஜையனோடு சேர்த்து விலங்கிடப் பட்டிருந்த கிருதாக் கிராப்புக்காரனும் மார்பின்மீது தலை தொங்கிவிட நித்திரையில் ஆழ்ந்து விட்டிருந்தான். வீசுகின்ற மின்சார விசிறிக் காற்றில் அவனுடைய சுருள் முடி முகத்தில் புரண்டு அலைந்தது. பெரிய திரை போல் கவிந்திருந்த இருளையும், அங்குமிங்குமாய் அப் போதைக்கப்போது தெரியும் ஒளிப் புள்ளிகளையும் வேடிக்கை பார்த்தவாறு என்னவோ தீவிரமாகச் சிந்தித் துக் கொண்டிருந்தான் ராஜையன். ஜன்னலின் மேல் கையை ஊன்றி முகத்தைத் தாங்கியவாறு அவனையே பார்த்தபடி உட்கார்ந்திருந்த ஏட் நரசிம்மலு நாயுடு இடுப்பு 'பெல்ட்' இறுக்கியதைத் தாங்காமல் எழுந்தார். இடுப்பு பெல்டையும், தொப்பியையும் கழற்றிப் பக்கத் தில் வைத்துக் கொண்டு உட்கார்ந்திருந்தார்.

அந்தச் சலனத்தால் யோசனை கலைந்த ராஜையன், "என்ன ஸார், வண்டி எத்தனை மணிக்குக் காட்பாடி போகும்?" என்றான்.

"மூணு மணி ஆனாலும் ஆகும். ஷண்டிங்குக்காக அங்கேயே ஒரு மணி நேரம் லேட் பண்ணிட்டானே" என்று கூறியபடியே சட்டைப் பையைத் தடவிச் சிகரெட் பாக்கெட்டையும், நெருப்புப் பெட்டியையும் எடுத்தார். அவருக்குத் தூக்கம் வரவில்லை. வராது. மௌனமாக ஒரு சிகரெட்டைப் பற்றவைத்துக்கொண்டு தீக்குச்சியை அணைத்து வெளியே எறிந்தார்.

"சிகரெட் பிடிக்கிறியாப்பா?" என்று பாக்கெட்டை ராஜையனிடம் நீட்டினார்.

ராஜையன் ஒரு சிகரெட்டை எடுத்துப் பற்றவைத்துக் கொண்டான். அவனாலும் தூங்க முடியாது. அந்த ரயில் பெட்டியிலேயே இந்த இருவர் மட்டும்தான் விழித்துக் கொண்டிருந்தனர்.

"சனியன் இவன்கிட்டே இருந்து ஒரே துர்நாத்தம் ஸார். தண்ணி ஊத்திக்கிறானோ இல்லியோ?" என்று தன்னோடு பிணைக்கப் பட்டிருந்தவனைப் பற்றி அலுத்துக் கொண்டான் ராஜையன்.

நாயுடு மெல்லச் சிரித்தவாறு, "தண்ணி ஊத்திக் கிறதுக்கெல்லாம், அவன் பொழைப்பிலே எங்கேய்யா நேரம் இருக்குது? நீ மட்டும் தினம் குளிக்கிறியா?" என்றார். ராஜையனை அவருக்குப் பிடித்திருந்தது. ஈவிரக்கமற்ற கொலை, கொள்ளை குற்றங்களுக்கெல்லாம் தண்டிக்கப்பட்டு வேலூர் மத்திய சிறைச்சாலைக்கு அவனை அழைத்துக்கொண்டு போகிறவராக இருந்தும், அவனுடைய பேச்சில் இருந்த ஒரு மரியாதையான போக்குக்காக அவனைச் சற்று கௌரவமாகவே நடத்தி வந்தார்.

கடகட வென்று சிரித்தவாறு, "இல்லே ஸார். எனக்குத் தெனம் தண்ணி ஊத்திக்கலேன்னா ஆவாது. தலையே போகிறதாக இருந்தாலும், எங்கியாவது எப்பிடியாவது ஒடம்பைக் கழுவிடுவேன்" என்றான்.

ஒரு வாய் புகையை ஊதி விட்டு "உனக்குக் கல்யாணமாயிடுச்சாய்யா?" என்று கேட்டார் ஏட் நாயுடு.

ராஜையன் வாயிலிருந்த சிகரெட்டை எடுத்து விட்டு, "இன்னுமில்லே ஸார்!" என்றான்.

"அப்பா அம்மால்லாம் இருக்காங்களா?"

"அப்பா செத்துட்டாரு. அம்மாதான் இருக்குது."

"எங்கே?"

"எங்க கிராமத்திலே!"

"நீ போய்ப் பார்க்கிறதுண்டாய்யா?"

"எப்பவாவது கெவனம் எடுத்துக்கினு, ரெண்டு வருஷத்துக்கு ஒரு தரம் போய்ப் பார்ப்பேன்."

"அவங்க வயித்துப் பொழைப்புக்கு....?"

"ரெண்டுலே மூணுலே மணி யார்டர் பண்ணுவேன் ஸார்!"

"என்னய்யா, பேசறே? இந்தக் காலத்திலே பிள்ளைங்களுக்குப் பெத்தவங்க பேரிலே பாசமே அத்துப் போயிடுச்சா? நீ எங்கேயிருக்கிறே, என்ன பண்ணறேன்னு அவங்களுக்குத் தெரியாதா?"



அட்டைப்படக் கதை

நெற்றியைத் தேய்த்தபடியே ராஜையன் தலையை ஆட்டினான்.

"இந்தத் தொழிலே நீ எத்தனை வருஷமா ஈடுபட்டிருக்கே?"

"ஒரு அஞ்சாறு வருஷமாத் தான் ஸார்!"

"இதிலேயே காலத்தைக் கழிச்சுக்கிடலாம்னுதான் முடிவு பண்ணிட்டியா?"

"வேறே பொழைப்பு? எனக்கு ஏதோ நாலு எழுத்து எழுதப் படிக்கத் தெரியும். அவ்வளவு தான். எங்கப்பன் அந்தக் காலத்


திலே தலைப்பாடா அடிச்சுக்கிட்டாரு. என் கொழுப்பு. பள்ளிக்கூடத்துக்கு மட்டம் போட்டுட்டு மாங்காத் தோப்பிலே மாங்காய் திருடிக்கினு ஊரைச் சுத்திக்கினு கெட்டுப்புட்டேன். வயசு மடமடன்னு ஆயிடுச்சு. ஒடம்புத் திமிரிலே கோல் வேலே, கத்தி சொருவுறது, பிடுங்கலெல்லாம் கத்துக்கிட்டேன். இப்பவும் எனக்கு என்ன பண்ணிப் பொழைக்கிறதுன்னு தெரியாது சார். உங்களைப் பார்த்தால் எங்க அப்பாவாட்டும் இருக்கிறீங்க. உங்ககிட்டே சொல்றதிலே வெட்கமென்ன? பொழைக்கிறதுன்னு, இதான் சார், தெரியுது. என்னு பண்ணட்டும் ?''

''இதுக்கு முன்னே ஜெயிலுக்குப் போயிருக்கிறியா?'' என்று கேட்டார் நாயுடு.

''அதுதான் கோர்ட்டிலே சொன்னாங்களே.. போயிருக்கேன், போயிருக்கேன். ஒம்பது மாசம் ஒரு சில்லறைத் தகராறிலே தள்ளிக்கினு போயிட்டாங்க.''

''மறுபடியும் ஜெயிலுக்குப் போறதுக்கு உனக்குக் கஷ்டமாயில்லையா?''

''என்னு சார், அப்படிக் கேட்டுட்டீங்க? ஜெயில்னு நரகம் சார். ஒருவாட்டி உள்ளே போறு மனுசன் எவ்வளவு கெட முடியுமோ அவ்வளவு கெட்டுடறான். உள்ளே



போய் நல்லதைக் கத்துக்கிட்டு வர்றவங்களும் இருக்காங்க. இப்படி நாலு வருசம் அஞ்சு வருசம் உள்ளே இருந்தா குமஞ்சி குமஞ்சி, ஒரு வெறியோடதான் வெளியே வரணும். இத்தினி நாள் வரைக்கும் ஒரு போலீஸ்காரர்கிட்டே இப்படி வெளிப்படையாக நான் பேசினதில்லே சார். நீங்க நல்லவராகத் தெரியறீங்க. உள்ளதைச் சொல்றேன். ஜெயில் எனக்கு வெறியேத்துது. தொழில்லே இல்லாதுங்களையெல்லாம் நான் உள்ளே பார்க்கிறேன். விடுதலையாகி வெளியே வந்ததும் இதே தொழிலைச் செய்யறப்போ, மறுபடியும் நீங்களே வந்து என்னைப் பிடிச்சாலும் ஆச்சரியம் இல்லே சார்!'' சர்வ சாதாரணமாகத் துளிர்த்த குரலில் ராஜையன் பேசினான்.

நரசிம்மலு நாயுடு அவன் பேச்சில் தெரிந்த வெறுப்பு வெளிச்சத்தை உணர்ந்தார். பெர்த்துக்கு மேலே படுக்கை வைக்கப்பட்டிருந்த பயனட் செருகிய ரைபிள் துப்பாக்கிகள் இரண்டையும் பார்ப்பது தெரியாமல் பார்த்துக் கொண்டார். ரயில் அப்போது 'கடகடா' என்று ஏதோ ஒரு பாலத்தின் மீது ஓடிக் கொண்டிருந்தது. பேசாமல் இரண்டு கைகளையும் விரித்துக் கோத்துத் தலைக்குப் பின்னால் முட்டுக் கொடுத்துக் கொண்டு இருளை வெறித்துப் பார்க்கலானார். எங்கோ அருகில் ஓர் ஆந்தை கிறீச்சிட்டுக் கொண்டு பறந்தது. ரயில் சில நிமிஷங்களில் சம தரையில் ஓடத் தொடங்கிற்று.

ஒரு பெருமூச்செறிந்து விட்டு, ''நான் கேக்கறதைத் தப்பா எடுத்துக்காதேய்யா. ஒரு கான்ஸ்டபிளுக்கு இதெல்லாம் வேலே இல்லே. என்னவோ ஒரு மனுஷனே இன்னொரு மனுஷன் கேக்கிறாப்போல கேக்கிறேன். நியாயம், அநியாயம், தர்மம், அக்கிரமம் எல்லாம் நீ தெரிஞ்சு வைச்சுக்கினுதான் இந்தக் காரியங்களையெல்லாம் செய்யறியா?'' என்று கேட்டார்.

ராஜையன் ஓசை இல்லாமல் பற்கள் மட்டும் தெரியச் சிரித்தான்.

''இந்தக் கேள்வியை வேறே நாலைந்து பேர் கேட்டிருக்காங்க சார். நான் அவங்களுக்கெல்லாம் நல்லாப் புரிஞ்சியிருக்கேன். என்ன பண்ணட்டும், இதை விட முடியல்லே. இது பழக்கமாயிடுச்சின்னு முன்னியே சொன்னேன். இதான் பொழைக்கிறதுக்கு எனக்குத் தெரிஞ்ச வழி. மூட்டை தூக்கி வண்டி வலிச்சி உடம்பை ஒடிச்சுக் கஷ்டப்பட்டுக்கூடப் பொழைக்கலாம் ஸார். அப்படிப் பொழைக்

கணும்னு எனக்கு என்ன காச்சாரம்? வண்டி வலிக்கிறவனுக்கும் மூட்டைக்காரனுக்கும் தர்ம நியாயம் தெரியுது. என்ன புண்ணியம்? நாய் மாதிரி கஷ்டப்பட்டு நடுத் தெருவிலே ஒரு நாள் செத்துப் போறான்! உலகத்திலே எவ்வளவோ சொகம் இருக்கு. காசு வைச்சுக்கினு இருக்கிற பெரிய மனுசங்க என்னென்ன சொகத்தை அனுபவிக்கிறாங்கன்னு அவனுக்குச் சாவற வரைக்கும் அப்பட்டமா தெரியுதா ஸார்? நியாயம், தர்மம்னுல்லாம் நானும் கண்டுக்கினுதான் இதெல்லாம் செய்யறேன். கோவிச்சுக்காதீங்க. உங்க கண்ணுக்குத் தெரியற மாதிரி, வெளிப்படையா சாமர்த்தியமில்லாமல் நான் திருடி மாட்டிக்கிட்டேன். இன்னிக்கு எவன், எந்த உத்தியோகத்திலே, இல்லேன்னு, தொழில்லே திருடாமெ லஞ்சம் வாங்காமெ யோக்கியனா இருக்கான்? எல்லாருக்கும் அது தெரியும். அவனெ யார் சார் பிடிக்கிறாங்க? கண்டும் காணுமே எல்லாரும் கண்ணெ மூடிக்கிறாங்க. அதே தொழிலைக் காதும் காதும் வைச்ச மாதிரி செய்யத் தெரியாமல் பகிரங்கமா செய்து நான் மாட்டிக்கறேன். தர்மம்னு செத்த காலேஜிலே வச்சிருக்கிற செத்துப் போன உடம்பு மாதிரி இன்னைக்குத் தேசத்திலே இருக்குன்னு போன வாட்டி எங்க கூட ஜெயிலுக்கு வந்த ஒரு மனுஷர் சொன்னார் ஸார். புஸ்தகங்களிலேயும் நாலு பெரிய மனுசர்கள் வாயிலேருந்தும் மட்டும் அடிக்கடி இதைப் பேசிக்கிறாங்க. ஒருத்தன்கூட அதை அனுசரிச்சு நடக்கமாட்டேங்கிறானே சார். அப்புறம் நான் மட்டும் ஏன் கெடந்து சாகணும்? எனக்கும் பொழைக்கணும்னு ஒரே ஆசை ஸார். நல்லா உலகத்துச் சொகத்தை அனுபவிக்கணும்னு மனசிலே பொங்குது. நான் தர்மத்தோட நடக்கணும்னு நெனைச்சா, வண்டி வலிச்சுத்தான் சாகணும். எல்லாருக்கும் இந்த ஆசை இருக்குது. இன்னிக்கு உலகத்திலே தர்மமா நடந்தால் பொழைக்க முடியாதுன்னு தலையெழுத்து. எல்லாருமே சேர்ந்து அயோக்கியத்தனம் பண்றாங்க. நான் வகையில்லாமல் மாட்டிக்கிறேன். சொல்லுங்க சார்.''

வண்டியில் ஏறியதிலிருந்து நாயுடுவின் முகத்தில் நிலவி வந்த ஒரு வேதனையும் வருத்தமும் நிறைந்த உணர்ச்சி ராஜையனுடைய வாசாலகத்தைக் கண்டு சற்று விலகி, முகத்தில் ஒரு புன்முறுவல் கண்டது.

''நல்லாப் பேசக் கத்துக்கிட்டிருக்கேய்யா. படிச்சிருந்தால் நீ வக்கீலாவாவது, பெரிய சன்னியாசியாவாவது போயிருப்பே.....'' என்று அவர் தொடரப் போனார். அதற்குள் ராஜையன் இடைமறித்தான்.

''எல்லாம் ஒம்பது மாசம் போன தபா உள்ளேயிருந்தேன் பாருங்க ஸார், அப்ப ஒரு மனுஷர்கிட்டே அடிக்கடி போய்ப் பேசுவேன். அவரு பெரிய அறிவாளி ஸார். சும்மா வாயைத் திறந்து பேச ஆரம்பிச்சார்னு மணிக் கணக்கிலே உக்காந்து கேட்டுக்கினு இருக்கலாம். அவரு பேச்சைக் கேட்டு யோசனை பண்ணிப் பண்ணிப் பார்த்தால் இதான் ஸார், எனக்குத் தோணுது!''

சட்டென்று நாயுடுவுக்கு வேறு ஏதோ நினைவு வந்து, முகம் கருங்கி விட்டது. முகத்தை ஜன்னல் பக்கம் திருப்பிக் கொண்டு கண்ணை மூடிக் கொண்டார். ராஜையன் அவர் முகபாவ மாற்றத்தை அறிந்து எதுவும் பேசாமல் அவரைக் கவனிக்கலானான். ரயிலின் இரைச்சலும் கான்ஸ்டபிள் 304-ன் குறட்டை ஒலியும் தவிர வேறெந்த ஓசையும் இல்லை. ஒரு பெரிய நகரம் சந்தடியின்றிக் கிராமப்புறங்களையும், அகண்டாகாரமான இருளையும் வயல்வெளிகளையும் கடந்து, ஒரு தூரப் பிரயாணத்தில் ஈடுபட்டிருப்பது போன்று இருந்தது. கைதி, தன்னைக் காவல் காத்துச் செல்லும் கான்ஸ்டபிளின் உணர்ச்சிகளுக்கு மதிப்பளித்து மௌனம் காத்து வந்தான்.

கொஞ்ச நேரம் கழித்து, ''உனக்குப் பெண்டாட்டி இருக்காளாய்யா?'' என்று தம் உணர்ச்சியிலிருந்து மீண்டு கேட்டார் நாயுடு.

''அதான் முன்னயே சொன்னேனே சார், அம்மாதான் இருக்குன்னு.''

''ஓ...'' என்று அரைக் குரலில் முனகிக் கொண்டு, ''மறந்துட்டேன். யாரையாவது மனப் பூர்வமா அடையணும்னு ஆசைப்பட்டிருக்கியா?'' என்று கேட்டார்.

வெறும் பொழுதுபோக்குக் கேள்வியாக அது இல்லை என்பதையும், மனசில் ஊர்ந்த வேறு ஏதோ வருத்தத்தின் தொடர்ச்சியாகவே அந்தக் கேள்வி வருகிறது என்பதையும் ராஜையன் ஊகித்துக் கொண்டான்.

''ஆசைப்பட்டது உண்டு சார். அதெல்லாம் நல்ல குடும்பத்துப் பொண்ணு. என்னோட கத்தி, சிலம்ப விளையாட்டையெல்லாம் பார்த்து அதுக்கும் என் பேரிலே ஆசை விழுந்துச்சு. ஆனால் அதுக்கு நல்ல இடத்திலே கலியாணம் ஆயிடுச்சு. அதன் தலையெழுத்து நல்லா இருந்திருக்கும். நல்ல காலம்'' என்று பெருமூச்சு விட்டான் ராஜையன்.

''என்னய்யா, 'தர்மத்துக்கு அர்த்தம் இல்லேன்னுல்லாம் பெரிசா அளந்தே. உன் நெனைப்புப்படி, இந்த உலகத்துச் சொகத்தை அனுபவிக்க எந்த அக்கிரமத்தையும் அனுபவிக்கலாம்னு. அந்தப் பெண்ணை இழுத்துக்கிட்டு எங்கேயாவது ஓடியிருக்கிறதுதானே?'' என்று விரக்தியாகக் கேட்டார் நாயுடு.

''என்னு சார், என்னெ அடியோட மனுசனே இல்லேன்னு முடிவு பண்ணிட்டீங்க. அது முகம் குழந்தை மாதிரி இருக்கும் சார். அது சிரிச்சிட்டா, என் மனசிலே இருக்கிற இமிர், வீரியம் எல்லாம் அடங்கிப் போய் ரொம்ப மெதுவா கொழந்தை மாதிரி ஆயிடுவேன் சார். ரொம்ப உத்தமமான பொண். என்னைக் கட்டிக்கிட்டா அதுக்குச் சொகமிருக்காது. வேதனையும் வெறுப்பும்தான் மிஞ்சும். அதையும் அனுசரிக்க வேணுமா சார்? அது என்ன காசு பணமா, வழியிலே அடக்கி அடிச்சுக்கினு போக. அதுவும் என்னெ அது ரொம்ப நம்புச்சு சார். நான் அதுக்குத் துரோகம் பண்ணி, அழைச்சுக்கிட்டுப் போனால் லாபம் என்னு? வாணான்னு நானே உட்டுட்டேன். போன தபா ஊருக்குப் போனப்போ கேட்டேன். நல்ல இடத்திலே சௌகரியமா நல்லபடியா வாழுதுன்னாங்க. இப்போ ஒரு நிம்மதி'' என்று பதிலிறுத்தான் ராஜையன்.

அதைக் கேட்க நாயுடுவுக்கு மிகவும் சங்கடமாக இருந்தது. அவன் ஏன் தன் போக்கையும் மீறி அந்த விஷயத்தில் நல்லவனாக நடந்து கொண்டான்? நாயுடுவின் சொந்த அனுபவத்தோடு அந்தக்கேள்வி ஒப்பிடப்பட்ட போது, அவரையும் அறியாமல் ராஜையன் மீது ஒரு

சிந்தால்
வருஷங்கள்





குழந்தைப் பருவம்

சரும ஆரோக்கியத்திற்கும், அழகுக்கும் சிந்தால் நம்பகமான வழி. ஆச்சரியகரமான ஜி-11* என்ற கிருமி நாசினி சேர்ந்த சிந்தால் குழந்தையின் மிருதுவான சருமத்தை அதன் மேல் சாதாரணமாக வளரும் லட்சக்கணக்கான கிருமிகளிலிருந்து காப்பாற்றுகிறது... சிரங்கு, தடிப்பு, வேர்க்குரு, கருநிறப்படை ஆகியவற்றிலிருந்து பாதுகாக்கவும், குணப்படுத்தவும் செய்கிறது.

மனோகர நறுமணங்கொண்ட சிந்தால் மிகவும் மிருதுத்தன்மையுடையதால் சருமத்தைச் சுத்தம் செய்கையிலேயே இதமளிக்கிறது... கண்களுக்குக் கெடுதலற்றது .. சிறுவர் இல்லத்தில் வைத்திருக்க அத்தியாவசியமானது.



வியர்வை
நாற்றத்தைப்
போக்கி, எழிலுடன்
விளங்கச்செய்யும் சோப்

பூரணப் பாதுகாப்பிற்கு இனிய மணங்கமழும் வியர்வை நாற்றத்தைப்போக்கி ஆறுதல் அளிக்கும் ஜி-11 அடங்கியுள்ள கோத்ரெஜ் சிந்தால் டாய்லெட் பவுடர் உபயோகியுங்கள்.


*படங்களுடன் கூடிய "ஜி-11 என்பது என்ன?" என்ற இலவச புத்தகத்திற்கு 'கோத்ரெஜ், பம்பாய்-12,' என்ற விலாசத்திற்கு எழுதுங்கள்.

Godrej கோத்ரெஜ்

சோப்புகளில் முதன்மையான பெயர்

CT. 1A. 6/62 (8"x 5") TAM.

வாட்டர்பரீஸ் வைட்டமின் காம்பவுண்ட்



திட ஆரோக்கியத்துக்கும் தென்புக்கும்

நல்லதென்பதற்கு 4 காரணங்கள் இதோ...

1. எந்த சீத வெப்ப நிலையிலும் எப் பருவத்திலும் முதியோர், சிறுவர் யாவரும் சுவைத்துப் பருகுவதற்கு இனிய, உடல் நலனுக்கு உகந்த டானிக் இதுவே.
2. இரத்த விருத்தி செழிக்கச் செய்து, நரம்புகளுக்கு வலுவூட்டுகிறது.
3. பசியின்மைக் கோளாறுகளுக்கும், பிணியாறும் பருவத்திற்கும் பிரத்தியேகமாக உரித்தானது.
4. பொது பலவீனம், ஊட்டக் குறைவு, சோர்வு, உணவிலே உலோகப் பொருள் குறைபாடு, மிதமிஞ்சிய உடல் தளர்ச்சி, உள்ளத் தளர்ச்சி யாவினுக்கும் உகந்த நிவாரணமாகச் சிபாரிசு செய்யப்படுகிறது.

வாட்டர்பரீஸ் வைட்டமின் காம்பவுண்ட்

வார்னர் - லாம்பர்ட் பார்மஸூடிகல் கம்பெனி.
(வரையறுக்கப்பட்ட பொறுப்புடன் யு. எஸ். ஏ. வில் இணைக்கப்பெற்றது)


துவேஷ உணர்ச்சியும், வெறுப்பின் கலவை யும் இலேசாகப் படியலாயிற்று.

''ஸார். வயிறு உபாதையா இருக்கு! கொஞ்சம் லெட்ரீனுக்குப் போயிட்டு வந்துட றேன்'' என்று இருதாக் கிராப்புக்காரனின் வலது கையோடு சேர்த்து விலங்கிடப்பட் டிருந்த இடது கையை உயர்த்திக் காட்டி னான். நாயுடு அவனை உற்றுப் பார்த்தார். அவனை நம்புவதா வேண்டாமா என்ற நிர் மாணம் செய்யாமல் துப்பாக்கி இருக்கிற நினைவில் நெஞ்சை ஸ்திரப்படுத்திக் கொண்டு, இடுப்புப் பெல்டிலிருந்த சாவியை எடுத்து விலங்கைத் திறந்து அவனை மட்டும் விடுவித் தார். ராஜையன் எழுந்து விலங்குத் தழும்பி னால் கன்றிப் போயிருந்த இடது கையை உருட் டித் தேய்த்தவாறு கிராப்புத் தலைக்காரனைப் பார்த்தான். மிக மந்தமான ஜென்மம் போலும்! அவன் இன்னும் நன்றாகத் தூங்கிக் கொண்டிருந்தான். வேஷ்டியை இறுக்கிக் கட்டிக்கொண்டு அவன் 'லெட்ரீனு'க்குள் நுழைந்தான்.

''சீக்கிரமா வாய்யா!'' என்று சொல்லி விட்டு லெட்ரீன் தம் பார்வைக்குள் படுகிற இடத்தில் நாயுடு நகர்ந்து உட்கார்ந்தார். வண்டி ஒரு சிறிய ஸ்டேஷனில் நின்றது. சிந்தனையில் ஆழ்ந்து விட்டிருந்த நாயுடுவுக்கு ஸ்டேஷன் பெயரைத் தூங்கி வழிந்தவாறு போர்ட்டர் கனவுக் கலக்கத்தில் கூவிக் கொண்டு போனதுகூடக் கவனத்தில் பதிய வில்லை. பழங்காலத்து மண்ணெண்ணெய் விளக்கு ஸ்டேஷனில் எரிந்து கொண்டிருந்தது. ஸ்டேஷன்மாஸ்டர் எதையோ தம் பக்கத்தில் கருட்டி வைத்துக் கொண்டு கையில் பச்சை விளக்கோடு இறங்குகிற ஓரிரு பிரயாணி களிடம் டிக்கெட் வசூலித்துக் கொண்டிருந் தார். மலை ஓரத்திலிருந்து வரும் மணி ஓசை யைப் போல் ஸ்டேஷனில் மெல்ல மணியடித் தது. ஓர் ஆள் கதவுத் தாழ்ப்பாளோடு போராடி, முண்டியடித்துக் கொண்டு உள்ளே ஏறினான். இடது கையிலும் வலது கையிலும் இரண்டு மிகப் பெரிய பைகள். அவனுடைய சிவந்த முகத்தில் அடர்ந்த கருத்தாடி படர்ந் திருந்தது. சட்டையும் பைஜாமாவும் அழுக் கடைந்திருந்தாலும், நடை உடை பாவனை சற்று நாகரிகமாக இருந்தன. சுற்றும் முற்றும் பார்த்து விட்டு, நாயுடுவுக்கு அருகில் சற்று இடமிருந்ததைக் கண்டு, ''ஸார்! இப்படி உட்கார்ந்து கொள்ளட்டுமா?'' என்று மரி யாதையோடு கேட்டான்.

''ஓ, உட்காருங்களேன்'' என்று அவன் வினயத்துக்கு மதிப்புத் தந்து அவர் சற்று நகர்ந்து கொண்டார். அந்தப் பெரிய பைக ளில் ஊதுவத்திக் கட்டுகளும், சிறிய சந்தன வில்லைகள், மெழுகு, கண் மை டப்பிகளும் பிதுங்கின. அவன் அதை ஜாக்கிரதையாகச் சீட்டுக்கு அடியில் நகர்த்திச் சாய்த்து வைத்து விட்டு உட்கார்ந்தான். 'உஸ்'ஸென்று பெரு மூச்சு விட்டுவிட்டுச் சுற்று முற்றும் பார்த் தான். வண்டி நகரத் தொடங்கியது.

''எங்கே இந்த ரயில் கிடைக்காதோன்னு மூணு மைல் ஓடி வந்தேன் சார். நல்ல காலம்'' என்று வியாபாரிக்கே உரிய சாதுரியத்தோடு நாயுடுவுடன் பேச்சைத் தொடங்கினான் அந்த மனிதன்.



''எங்க தாத்தா எங்க பாட்டியைக் காதல் கல்யாணம் செய்துகொண்டாராம் சார்!''

''என்ன அக்கிரமம் சார் இது? வயசான வங்க எல்லாருமே இப்படிச் செய்தா...''

''அப்படியா, எங்கேயிருந்து வர்றீங்க?''

''சுந்தரம்பள்ளின்னு இங்கே பக்கத்திலே ஒரு பெரிய கிராமம். நேத்து சாயந்திரமே சரக்குப் போட்டுட்டு வந்துட்டேன். அதுக் கப்புறமா வண்டி இல்லேன்னு சொன்னாங்க. அங்கேயிருந்து மூணு மைல்தான் ஸ்டேஷன். நேத்து சந்தை. பஸ்ஸும் கிடைக்கலே. சரி, ரயிலுக்குப் போயிடுவோம்னு அங்கேயே ஒரு இடத்திலே சாப்பிட்டுட்டு வர்றேன்.''

''எது வரைக்கும் போறீங்க?''

''பக்கத்திலேதான். ஒரு ஸ்டேஷன் தாண்டி. இருந்து காலையிலேகூட வந்திருக்க லாம். காலையிலே ஊரிலே இருக்கணும். இந்த மாதிரி தொழில்லே இறங்கிட்டா சக்கரம் கட் டிக்கிட்டுச் சுத்த வேண்டியதாயிருக்கு. ஆமா சார், நீங்க எங்கே காட்பாடி வரைக்குமா?''

''ஆமா, எப்படி டக்குனு சொல் லிட்டீங்க?'' என்று புன்முறுவலோடு கேட் டார் நாயுடு.

''இந்தப் பக்கத்திலே தொரப்பாடி ஜெயில் தானே இருக்கு. அங்கேதான் இருக்கும்னு சொன்னேன்'' என்று கூறினார். பெர்த்தின் விளிம்பில் வைக்கப்பட்டிருந்த கான்ஸ்டபிள் 304-ன் தொப்பி, ரயிலின் ஆட்டத்தால் சிறுகச் சிறுக நகர்ந்து வந்து பொத்தென்று கீழே விழுந்தது. அந்த ஊதுவத்தி வியாபாரி சட்டென்று அதைக் கையில் பிடித்துக் கொண் டான். இருவரும் சிரித்துக் கொண்டனர். நாயுடு அதை வாங்கித் தம் பக்கத்தில் வைத்துக் கொண்டா..

''என்ன சார் அந்த ஆள் கையிலே ஒரு விலங்கு காலியாத் தொங்குது. இன்னொருத் தன் எங்கே?''

''உள்ளே லெட்ரீனுக்குப்போயிருக்கிறான்.''

''என்ன கொலைக் கேஸா?''

''பெரிய வழிப்பறித் திருடன் இவன். இன்னொருத்தன் வழியிலேயும் கொள்ளையடிப் பான், வீடு புகுந்தும் கொள்ளையடிப்பான்!''

''எத்தினி வருசம் சார்?''

''அவனுக்கு அஞ்சு. இவனுக்கு ரெண்டு.''

அப்போது ராஜையன் கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்தான். தலை குனிந்த வாறு நடந்து வந்தவன், கான்ஸ்டபிளுக்குப் பக்கத்தில் ஒரு புதிய வெள்ளைச் சட்டை தெரியவும் நிமிர்ந்து பார்த்தான். முதலில் அவனுக்குச் சற்றுத் திகைப்பு ஏற்பட்டது.

பிறகு வெட்கமும் குழப்பமும் முகத்தைக் கவ்வ நின்றான். ஊதுவத்தி வியாபாரிக்கு அவனைக் கண்டதும் முகம் கறுத்தது. மனதில் எண்ணங்கள் விறுவிறுக்தன. ஆனால் கடைசியில், "அட,ராஜையா நீயாப்பா. சௌக்கியமா இருக்கிறாயா?" என்று கேட்டான்.

அவன் பேசாமல் போய் விடுவான்; அந்த அவமானம் உறுத்திக் கொண்டேயிருக்கும் என்று எதிர்பார்த்த ராஜையனுக்கு அவன் பேசியதைக் கேட்டதும் முகம் மலர்ந்தது. அவன் வலது கரத்தை இரண்டு கைகளாலும் பற்றிக் கொண்டு இலேசாகச் சிரித்தான்.



மிருதங்க வித்வான் ஸ்ரீ ராஜப்பையர் சமீபத்தில் காலமானார் என்ற செய்தி கேட்டு வருந்துகிறோம்.

"சௌக்கியத்துக்கு என்ன குறைச்சல் அப்பா? இப்ப கூடக் கோர்ட்டிலே 'அஞ்சுவருசம் தொரப்பாடியிலே சௌக்கியமா இரு' என்று நீட்டியிருக்காங்க!" என்று சிரிப்பு மாறாமல் சொல்லி விட்டு, "நீ எப்படி இருக்கே? நம்மளோட படிச்சவங்கள்ளே நீதான் ஹைஸ்கூல் வரைக்கும் டவுன்லே வந்து படிச்சேன்னு சொல்லிக்கிறாங்க..." என்று பேச்சை இழுத்தவாறு இருதாக் கிராப்புக்காரன் பக்கத்தில் உட்கார்ந்து இடது கையை நாயுடுவிடம் நீட்டினான்.

"பரவாயில்லேய்யா. சும்மா உக்காரு" என்று ஒரு பால்ய நண்பனோடு பேசும் ராஜையனின் சுயமரியாதைக்குக் கௌரவம் கொடுத்தார் நாயுடு.

செல்லப்பா அவனைப் பார்த்துப் பரிதாபமாகச் சிரித்து விட்டு "எஸ். எஸ். எல். சி. வரை படித்தேன் ராஜையா. நாலு தரம் பெயில் ஆயிட்டேன். இப்போ ஊதுவத்தி வியாபாரத்திலே இறங்கிட்டேன். சொந்தமாக வீட்டிலேயே செஞ்சு ஊர் ஊராக் கொண்டு போய்ப் போட்டுக்கிறு இருக்கேன்" என்றான்.

"அப்படியா. என்ன தாடி கீடியெல்லாம் வளர்த்துட்டே! கலியாணமாயிடுச்சி இல்லியா?" என்று கேட்டான் ராஜையன்.

"கலியாணமாயி ரெண்டு குழந்தை இருக்கப்பா. தாடிக்கும் அதுக்கும் ஒன்னும் சம்பந்தம் இல்லே. சும்மா வளர்க்கலாம்னு தோணுச்சி. வளர்க்கிறேன்."

"ஓ, அப்ப குடும்பஸ்தன் ஆயிட்டேன்னு சொல்லு!"

"ம்...ம்..." என்று தலையை ஆட்டியவாறு வாய்க்குள் சிரித்தான் செல்லப்பா.

"நம்ப பசங்கள்ளாம் சௌக்கியமா இருக்காளுங்களாடா செல்லா?"

"இருக்காங்கடா!" நீண்ட நாள் பிரிவின் காரணமாக அவர்களுள் நிலவிய போலி மரியாதை உடைத்தது. "ராகவன் ரயில்வேயிலே பம்பாயிலே வேலையா இருக்கானாம். கேசவன்... அதான்டா கொசவன், மிலிட்டரியிலே சேர்ந்துட்டான். இப்போ காங்கோவுக்குப் போயிருக்கானாம்."

"யாரு, ஒருவாட்டி மாங்காய் திருடறப்ப தோட்டக்காரன்கிட்டே மாட்டிக்கிட்டு அடி வாங்கினானே அவனுடா?"

"அவனேதான்."

"அடடா, சக்கைன்னுனும்!! அப்புறம் கோவிந்து என்ன பண்றான்?"

"கோவிந்தன் ஆம்பூர் சர்க்கரை மில்லிலே வேலை செஞ்சுக்கிறு இருந்து. மிஷின்லே மாட்டிக்கிறு செத்துட்டான்டா!"

"செத்துட்டானா?" ராஜையன் திடுக்கிட்டான். கலவரமற்ற குரலில் செல்லப்பா அதைக் கூறியது அவனை வியப்பில் ஆழ்த்தியது. சந்தர்ப்பவசத்தால் அவனே ஒரு கொலை செய்திருந்தாலும், நெருங்கிய நண்பனொருவன் மிஷினிலே மாட்டிக்கொண்டு இறந்து விட்டான் என்று கேள்விப்படும்போது மரணம் என்பது குரூர அர்த்தம் வாய்ந்ததாக, ரத்தத்தை உறைய வைக்கும் பயமாக, புதிய வடிவோடு அவன் மனத்தில் விசுவரூபம் கொண்டது. ராஜையன் முரடன். அபாரமான ஸ்தைரியம் வாய்ந்தவன். அவனுலேயே, அவனோடு ஒரு நாள் ஆடி ஓடிப் பழகிய நண்பன் பால்ய காலத்துச் சமர்க்களங்களிலும் விளையாட்டு மைதானங்களிலும் தோளோடு தோள் நின்ற சிநேகிதன் என்ற உயிருள்ள ஒரு மனிதன் மிஷினில் அரைபட்டு இன்று இல்லாமலே போய் விட்டான் என்ற நினைவைத் தாள முடியவில்லை.

"ஊம். அப்புறம்?" என்று தன்னைச் சமாளித்துக் கொண்டான் ராஜையன்.

"முனிசாமியும் கிருஷ்ணமூர்த்தியும் ஊரிலேயே விவசாயம் பண்றாங்க. வேலாயுதம் எங்கேயோ ஓடிட்டான். ஆங்... இன்னொன்னு ராமமூர்த்தி, ராமமூர்த்தின்னு சிவப்பா ஒரு பையன் வருவானே உனக்குத் தெரியுமா?"

"எந்த ராமமூர்த்திடா?"

"அதான்டா, மோட்டு நெலத்திலே தென்னந்தோப்புக்குப் பக்கத்திலே ஒரு குடிசை. அங்கே பக்கத்துக் கெணத்திலே தானே மொதல்லே பம்பு போட்டாங்க. நாம எல்லாருமா அந்தக் கெணத்திலே குதிச்சுக் கலக்கியிருக்கோமேடா."

"ஊம். சொல்லு. சொல்லு. ஒல்லியா இருப்பான். சிரிச்ச மொகம். பெரிய காது அவனுக்கு. சரிதானா?"

"அவன்தான். அவன் வாத்தியாராயிட்டான். நம்ப ஊருக்குப் பக்கத்திலேயே வேலை கிடைச்சுது."

"உம்ம்... ஊரெல்லாம் நல்லாயிருக்காடா செல்லா."

"ஊருக்கென்னடா குறைச்சல்? எப்பவும் போல் கோஷ்டிச் சண்டையும் குதர்க்கப் புத்தியுமாக் கெடக்கு. எவன்டா, உருப்



ஜூலை 14 முதல்
சாந்தி
(ஏர் கண்டிஷண்ட்)
பிரபாத்
சரஸ்வதி
மற்றும்
தென்னகமெங்கும்
சரவணா
பிலிம்ஸ்
பாத
காணிக்கை
டைரக்ஷன் · K. சங்கர்
தயாரிப்பு · G. N. வேலுமணி

மில்க் ஆப் மக்னீஷியா என்பது என்ன?

இது மெக்னீஷியம் ஹைட்ராக்ஸைடின் எமல்ஷன். அமில நாசினியும் மலமிளக்கியுமான இது இரைப்பை சம்பந்தமான (அஜீரணக்) கோளாறுகளின் சிகிச்சையில் ஏராளமாக உபயோகப்படுத்தப்படுகிறது.

மில்க் ஆப் மக்னீஷியாவிற்கு, மெக்னீஷியம் ஹைட்ராக்ஸைட் மிக்ஸ்சர் B.P., மெக்னீஷியா மாக்மா யு. எஸ். பி., க்ரீம் ஆப் மக்னீஷியா B. P. போன்ற பெயர்களும் உண்டு. எப்பெயரால் அழைக்கப்பட்டாலும் இதன் அடிப்படையான பொருள் ஒன்றே. மேலும் ஒரு அங்கீகாரமான ஔஷதகரண விதியின் கண்டிதமான நியதிக்கும், பிரமாணத்திற்கும் தக்கபடி இது உற்பத்தி செய்யப்படுகிறது. இது எந்த வர்த்தகப் பெயரில் விற்பனை செய்யப்பட்டாலும் சரி அப்பெயர் தயாரிப்பாளரை சுட்டிக் காட்ட அனுகூலமாகுமே தவிர இதன் தரத்தை உயர்த்தவோ, தாழ்த்தவோ செய்யாது.

இருந்தபோதிலும், விற்பனைப் பெயர், வாடிக்கையாளரை பொறுத்த மட்டில் மிகவும் முக்கியம். ஏனென்றால் நன்கு தெரிந்த ஒரு பெயர் அவருக்கு தயாரிப்பாளரின் நம்பகத்தன்மையைப் பற்றி உறுதியளிக்கிறது. இக்காரணத்தினால் தான் கணக்கற்ற வாடிக்கையாளர்கள் அன்றாடம் 'மந்த்' (MandH) மில்க் ஆப் மக்னீஷியாவை வாங்குகிறார்கள். இது யுனைடெட் ஸ்டேட்ஸ் ஔஷதகரண விதிகளின்படி தயாரிக்கப்பட்டு குணத்திற்கும் தரத்திற்கும் நன்கு பரிசீலனை செய்யப்படுகிறது. ஆகையால் இதன் தரமும், தூய்மையும் கேள்விக்கு இடமற்றதாக விளங்குகிறது. எல்லாவற்றிற்கும் மேலாக, மற்ற எல்லா 'மந்த்' (MandH) தயாரிப்புகளைப் போலவே, மருந்துகள் தயாரிப்பதில் 50 வருடங்களுக்கு மேலாக உள்ள அனுபவத்தின் சிறப்பையும் பெற்றுள்ளது.

மார்டின் & ஹாரிஸ் (பிரை) லிட்., மெர்கண்டைல் பில்டிங்ஸ், லால்பஜார், கல்கத்தா-1

M/P/1 TA

படியா முன்னுக்கு வருவான்; அவனைப் புடிச்சு எறக்கிப் பேசிக் காலத்தைக் கழிப் போம்னு பொழுது போகாதவங்களெல்லாம் திண்ணையிலே குந்திக்கிட்டிருக்காங்க. அது ஒழியட்டும். உங்க அம்மாவைப் பார்த் தேண்டா..." என்று மேற்கொண்டு எப்படிப் பேசுவது என்று செல்லப்பா நிறுத்தினான்.

இது வரையில் ஜன்னலுக்கு வெளியே பார்த்து வந்த கான்ஸ்டபிள் நாயுடு ராஜையனைப் பார்த்தார். இருவர் பார்வையும் சந்தித் துக் கொண்டன. நாயுடு பார்வையைத் தாழ்த்திச் சட்டைப் பையிலிருந்து சிகரெட் பாக்கெட்டை எடுத்து ஒன்றைப் பற்ற வைத் துக் கொண்டு மீண்டும் ஜன்னல் புறமாகத் திரும்பிக் கொண்டார்.

"உம். சொல்லு, செல்லா!"

"ரொம்பக் கஷ்டப்படறாங்க. ஒரு பைத் தியக்காரி மாதிரி அங்குமிங்கும் அலையறாங் கடா" என்றான் செல்லப்பா.

"என்னடாது. நான்தான் மாசத்துக்கு மாசம் மணியார்டர் பண்றேனே?"

"கஷ்டம்னு சோத்துக்கு இல்லேடா. மனக் கஷ்டம். உனக்குக் கலியாணம் பண்ணி நீ நல்ல வேலையிலே ஒழுங்காக் குடித்தனம் நடத்திப் பார்க்கணும்னு அவுங்களுக்கு எவ் வளவோ ஆசை தெரியுமா? திருட்டுப் பையன் அம்மான்னு ஊரெல்லாம் அவுங்களைக் கூப் புடுது. பைத்தியக்காரி மாதிரி நீ நல்லவனா திருந்திட்டுத் திரும்பி வருவேன்னு அவங்க எதிர்பார்த்தாங்க. அவுங்களுக்குத்தான் நீ கடுதாசிகூடப் போடறது கிடையாதே. எங்கே இருக்கிறே, என்ன ஆனேன்னுகூட அவங்க தெரிஞ்சிக்கிறதில்லே. ஒவ்வொரு தடவை யும் வெளியூருக்குப் போயிட்டு வர்றப்பல் லாம் என்னை, 'என் மகனை எங்கேயாவது பார்த்தியாப்பா, பார்த்தியாப்பா'ன்னு கேட் கறாங்க. என்னை மட்டுமில்லே. ஊரிலே யாரு வெளியூரு போயிட்டு வந்தாலும் இதே தான். இதிலேயே அவங்களுக்குப் பைத்தியம் பிடிச்சாலும் பிடிச்சுடும்டா."

"ஹூம்!" என்று பெருமூச்சு விட்டு, செல்லப்பாவையும், நாயுடுவையும் பார்க்க இஷ்டப்படாமல், 'பெர்த்' பலகையை அண் ணாந்து பார்த்தவாறு மௌனமானான் ராஜையன்.

ரயில் மீண்டும் ஒரு சிறு ஸ்டேஷனில் நின்று புறப்பட்டு விட்டது.

"இப்போ நீ எது வரைக்கும் போறே, செல்லா?"

"ஊருக்குத்தாண்டா போய்க்கிட்டிருக் கேன். அம்மாவைப் பார்ப்பேன். அவங்களா வீடு தேடிக்கிட்டு வந்து என்னைப் பார்ப்பாங்க. பார்த்தேன்னு சொல்லவா?"

ராஜையன் தலையைக் குனிந்து கொண்டு யோசிக்கலானான்.

"என்னடா?"

"செல்லா, தயவுசெஞ்சி எனக்காக, நீ அவங்ககிட்டே இதையெல்லாம் சொல்ல வாணாம்."

"சரி...சரி..."

நாயுடு சிகரெட்டை எறிந்து விட்டு, மெல்ல இருமினார். வண்டி ஓடிக் கொண்டிருந்தது. 304 குறட்டை விட ஆரம்பித்தார், மார் பின் மேல் தலை தொங்க, இருதாக் இராப் புக்காரன் தூங்கிக் கொண்டிருந்தான்.

"ஸ்டேஷன் வந்துக்கிட்டிருக்கு. வேறே ஏதாவது இருந்தா பேசடா, ராஜையா!" என்றான் செல்லப்பா.

"பேச என்னடா இருக்குது? நீ நல்லபடியா கொழந்தை குட்டிகளோடு இருந்தா சரிதான். வியாபாரத்தைப் பெரிசாப் பண்ணு....!"

"அப்போ நீ கலியாணம் பண்ணிக்கிற உத்தேசமில்லியா?"

"எனக்கெதுக்குடா கலியாணம்? அதெல் லாம் யோசிக்கலே. காலம் வந்தாப் பார்த் துக்கலாம்."

வண்டி நின்றது. செல்லப்பா இரண்டு பெரிய பைகளையும் எடுத்துக் கொண்டு எழுந் தான். ராஜையன் பைகளை ஏந்தி நின்ற அவனது கைகளை அன்போடு பற்றிக் கொண்டு, "நீ மாறிட்டிருப்பே. ஒரு ரௌடியோட பேச வெட்கப்பட்டுக் கம்முனு போயிடு வேன்னு நெனைச்சேண்டா செல்லா. நீ மாறல்லே. எனக்கு ரொம்ப சந்தோஷம். போயிட்டு வா!" என்றான்.

"வர்றேண்டா. நல்லவனா நீ திரும்பி வரணும்னு நான் ரொம்ப ஆசைப்பட்டேன்... வரட்டுமா சார்?" என்று விழித்தெழுந்த கான்ஸ்டபிள் நாயுடு பக்கம் திரும்பி விடை பெற்றுக் கொண்டு நடந்தான் செல்லப்பா.

இராஜையன் மிகவும் ஆவலோடு ஜன்னல் வழியாகத் தலையை நுழைத்துக் கொண்டு கண்ணுக்கெட்டிய தூரம் வரையில் ஸ்டே ஷனைப் பார்த்தான்.

"இதான் சார், எங்க ஊர் ஸ்டேஷன். இங்கிருந்து ரெண்டு மைல். ரயிலுக்கு வர்ற துன்னு, இங்கே வந்துதான் ஏறணும்...." என்று நாயுடுவிடம் சொல்லியவாறே, அபார மான காதல் வயப்பட்டவன் போல ஸ்டேஷ னைக் கவனிக்கலானான்.

"ஊம்" என்றார் நாயுடு.

"எத்தினியோ நாள் இங்கே கூட்டமா வந்து உக்காந்துக்குனு கதை பேசியிருக்கோம்; சார். அதெல்லாம் சின்ன வயசு...."

மணி அடித்து விட்டு இஞ்சின் சீறத் தொடங்கி விட்டது. ராஜையன் நாயுடுவைப் பார்த்தான். அவர் முகம் இப்போது மிக வருத்தமுற்றுக் கண்கள் கலங்குவன போல் தோற்றம் அளித்தன. வண்டி ஸ்டேஷனை விட்டுப் புறப்பட்டு விட்டது.

"சார், கேக்கிறேன்னு தப்பா எடுத்துக்கா தீங்க! நானும் வண்டியிலே ஏறினப்போ பிருந்து கவனிக்கிறேன். நீங்க ரொம்ப வருத்த மாக இருக்கிறீங்க. என்ன சார் விஷயம்?"

நாயுடு அவனை ஏறிட்டுப் பார்த்தார். சிரிக்க முயன்றார். முடியவில்லை. தொண்டை யைக் கனைத்துக் கொண்டு நெற்றியைக் கண் களை மூடியவாறு தேய்க்கலானார். பின்பு கண்களைத் திறக்காமலேயே பேசலானார்.

"எல்லாம் குடும்பக் கவலைதானய்யா."

"உங்களுக்கு எத்தனை பிள்ளைங்க சார்?"

"மூணு ஆண் பிள்ளைங்க. ஒருத்தனுக்கு உன் வயசு இருக்கும். மத்தது ரெண்டும் ஸ்கூல்லே படிக்குதுங்க."

"பெரியவரு என்ன பண்றாரு!"

"என்ன பண்றான்? மானத்தை வாங்காம இருந்தாப் போதாதா? ஊர் ஊராச் சுத்த றது. கண்டபடி ஆடறது. படிப்புமில்லே.

மன்னுமில்லே. அவன் பாழாய்ப் போயிட்டான். அவன் போனதோட நின்னுருந்தாப் பரவாயில்லே.''

நாயுடு மேலும் பேசுவதற்குச் சங்கடப்பட்டவாறு நிறுத்தினர். ராஜையனும் அவரைத் தூண்டாமல் அமைதியாக உட்கார்ந்திருந்தான்.

''வேலூரிலே எங்கேயோ மோட்டார்க் கம்பெனியிலே வேலை செய்யறேன்னு போனுன். என்னவோ சம்பாதிச்சான். எங்கேயோ ரூம் எடுத்துக்கிட்டு இருந்திருக்கான். சொல்ல நாக்குக் கூசுதய்யா. பக்கத்து வீட்டுலே வயசுவந்த பொண்ணு.... நீ சொன்னியே குழந்தை மாதிரி இருக்கும்னு. அது மாதிரி. நானும் ரெண்டு மூணு தடவை பார்த்திருக்கேன். 'அப்பா இதைக் கட்டி வை'யுன்னு என்கிட்டே ஒரு வார்த்தை சொல்லியிருந்தான்னு, தோலேடான்னு சாதி சனம் பாராம பண்ணிட்டிருப்பேன். பாவிப் பையன்...'' என்று விக்கினர். மூடியிருந்த கண்களிலிருந்து இரண்டு நீர்க் கோடுகள் இறங்கின. ''அதைக் கெடுத்துட்டு எங்கேயோ ஓடிட்டானேய்யா. அதுக்கு இப்போ ரெண்டு மாசம். கெணத்துலே குளத்திலே விழுந்துடப் போயிருக்குது. கஷ்டப்பட்டுத் தடுத்து நிறுத்தியிருக்காங்க. இப்ப ஜெயிலுக்குப் போயிட்டு நேரே நான் அங்கேதான் போகப் போறேன். அவங்க அப்பன் அம்மா காலிலே விழுந்து அதை வீட்டுக்கு அழைச்சிகிட்டு வந்துடப் போறேன். அதுதானய்யா என் மருமகள். அந்த ஊதாரிப் பையன் திரும்பி வந்தால் அவனை ஒதைச்சுச் சம்பிரதாயத்துக்குக் கலியாணம் பண்ணி வைச்சுடறேன்.''


நாயுடு சற்று மௌனமானுர்.

பிறகு அவரே தொடர்ந்து பேசினர்: ''நான் தாமதிக்கிற ஒவ்வொரு நிமிஷமும் அது உயிருக்கு ஆபத்து. உங்களைக் கொண்டு போயி 'ஹேண்ட்ஓவர்' பண்ணிட்டு என் அடுத்த காரியம் அதுதான். நான் நல்ல குடும்பத்திலே பொறந்து, நல்லபடியா எங்கப்பாருக்கு நல்ல பேர் சம்பாதிச்சுக் கொடுத்தேன். எனக்குப் பொறந்தது பண்ணின கொடுமைக்காக, அந்தப் பொண்ணுக்கு எந்த ஆபத்தும் வரக் கூடாதய்யா. குடும்ப மானமே போயிடும். மானம் கெடட்டும். அதைப் பெத்தவங்க மனசு என்ன பாடுபடும்? அவங்க என்னென்ன கோட்டை கட்டி வைச்சிருந்தாங்களோ! உங்கம்மா உன்னைப் பத்திக் கட்டி வைக்கலையா அந்த மாதிரி.''

நாயுடு பேச்சை நிறுத்திவிட்டார். நிரந்தரமாக நிறுத்தி விட்டதுபோல் உதடுகளை இறுக மூடிக் கொண்டு, பலகையின் மேல் சாய்ந்து உட்கார்ந்து கொண்டார்.

''ஸார், இந்த விலங்கைப் பூட்டிடுங்கோ!'' என்று ராஜையன் அவருக்கு ஞாபகமூட்டினன்.

நாயுடு அவனைப் பார்த்து விட்டு இடுப்பிலிருந்த சாவியை எடுத்து விலங்கைப் பூட்ட



''அடப்பாவி! 'டை'க்கு இவ்வளவு கஞ்சியா போடறது!''

அவன் கையின் மேல் குனிந்தார். கூடாக இரு சொட்டுக் கண்ணீர்த் துளிகள் கையின் மேல் விழுந்தன.

''சார், நீங்க ரொம்ப உத்தமர்'' என்று கண்ணீரின் ஸ்பரிசத்தால் உடல் சிலிர்ப்புறக் கூறினன் ராஜையன்.

ரயில் காட்பாடியை வந்தடைந்தது. களைப்பினுலும் வேதனையினுலும் சோர்வுற்றுத் தூங்கி விட்டிருந்த நாயுடுவைத் தட்டி எழுப்பினுன் ராஜையன். தோளின் மீது சாய்ந்து கொண்டு தூங்கி வழிந்த இருதாக் கிராப்புக்காரரையும், கான்ஸ்டபிள் 304யும் தட்டி எழுப்புவதற்கு அரும்பாடு படவேண்டியிருந்தது. ஜங்ஷனை விட்டு வெளியேறி ஒரு டாக்ஸியில் காட்பாடி போலீஸ் ஸ்டேஷனுக்குச் சென்ருர்கள்.

ஒரு வாரம் கழித்து நாயுடுவுக்கு ஸ்டேஷன் விலாசத்துக்கு ஒரு கடிதம் வந்தது. ராஜையன் எழுதியிருந்தான்.

''மதிப்புள்ள ஏட்டய்யா அவர்களுக்கு,

நமஸ்காரம் செய்து ராஜையன் எழுதிக் கொள்வது. நான் மூத்தாநான் ஜெயிலிலிருந்து தப்பி விட்டேன். நான் முன்னே சொன்னப்பிலே ஜெயிலு ஒரு நரகம். நான் ஜெயிலுக்குப் போகாமல் வழியிலேயே தப்பிச்சுக்கிட்டிருப்பேன். கக்கூசுக்குப் போனப்போ எனக்கு நேரம் இருந்தது. அப்புறமா நீங்க தூங்கிட்டீங்க. அப்பவும் எனக்கு நேரம் இருந்தது. விலங்கு எனக்குப் பிரமாதமில்லே. என்னைப் பொறுத்த வரைக்கும் சும்மா மரியாதைக்குக் கட்டுப்பட்டு அந்த வெறும் விலங்கைப் பூட்டிக்கிட்டுவந்தேன். துப்பாக்கிக்கெல்லாம் நான் சிக்கிறவன் இல்லே. எனக்கு ஓடறதுக்கு நிறைய வசதி இருந்தது. ஆனால் உங்களுக்கு அலைச்சல் கொடுத்துட்டு, உங்க மருமக உயிருக்கு ஆபத்து எதுவும் வரக் கூடாதேன்னுதான் நான் தப்பிக்கலே. மருமகளை வீட்டுக்கு அழைச்சுக்கிட்டு வந்திருப்பீங்க. அது நல்லபடியா வாழணும். நான் அம்மாவைப் போயப் பார்த்துட்டு வந்துட்டேன். செல்லய்யா என்கிட்டே அவங்களைப் பத்தி சொன்னதிலே இருந்த வெறியிலே உடனே குதிச்சு ஓடிட்டிருப்பேன். அப்போதான் நீங்க உங்க கதையைச் சொன்னீங்க. எனக்கு மனசு மாறிடுச்சு. சார், நீங்க நிரம்ப உத்தமமான மனுசர். என் வாழ்க்கையிலே நான் பார்த்த மொதல் நல்ல மனுசர் நீங்க. உங்களை மறக்க மாட்டேன்.

ராஜையன்''

கவரின் மேல் புறத்தில் இடப்பட்டிருந்த முத்திரையைப் பார்த்தார். வடக்கே பெல்காம் ரயில்வே ஸ்டேஷனின் முத்திரை யிருந்தது. எழுதியிருந்த கடிதத்தைப் போகிற வழியில் ஒரு ஸ்டேஷனில் இறங்கிப் போட்டிருக்கிறன். கடிதத்தை உறையோடு சேர்த்துச் சுக்கல் சுக்கலாகக் கிழித்துக் காற்றில் பறக்க விட்டார் நாயுடு.



சீரான ஆகாரமில்லாததால் நீங்கள் மெலிந்திருக்கிறீர்களா?

ஆல்போஸாங் சாப்பிடுங்கள்


மிகச் சிறந்தது
சாதாரண உணவுடன் சேர்ந்து
சிக்கனமான, விஞ்ஞான முறையில்
ஊட்டமளிப்பது

தேநீர், காப்பி, பால், கஞ்சி, பழரசம் முதலியவைகளுடன் சேர்த்து அருந்தினால் மிக ருசியாக இருக்கும். சிறு குழந்தைகளுக்கும், வளரும் பிராயத்திலும், பிரசவகாலத்தில் தாய்மார்களுக்கும், சிந்திக்கும் தொழிலாளிகளுக்கும், முதியவர்களுக்கும், பலவீனம் இரத்தமின்மை மற்றும் நோயிலிருந்து தேறி வரும் போதும் ஆல்போ-ஸாங் சிறந்த டானிக் உணவாகிறது.



பௌடர் மற்றும் மாத்திரைகளாகவும் கிடைக்கிறது.

ஜே. & ஜே. டீஷேன்,
ஹைதராபாத்—டெக்கான்



ஆதார சுருதி

நம் குடும்பங்களில் நிகழும் சாதாரண நிகழ்ச்சிகளை வைத்துக் கொண்டு ''ரஸவாதி'' மிக ரஸமான நாவலைப் புனைந்து விட்டார். இந்த நாவலில் கதைக்கென்று வலியப் புனையப்பட்ட சம்பவமோ, பாத்திரமோ இல்லை.

காதல் மணம் செய்து கொண்ட பாகீரதி மண வாழ்வில் சில குழந்தைகளுக்குத் தாயான பிறகு தன் கணவனின் நடத்தையில் மாசு படிந்து விட்டதைக் காண்கிறாள். இதன் காரணமாகப் பதின்மூன்று ஆண்டுகளைத் தனியே கழித்த பாகீரதியின் வாழ்க்கையில் அவள் கணவன் மீண்டும் வந்து சேருகிறான். அவனை அவள் ஏற்றுக்கொண்ட விதம்தான் இந்த நாவலின் சுவையான பகுதி.

பாகீரதியின் பிடிவாத குணம்தான் உறுதியான மனம் என்றும் சொல்லலாம் - இக்கதையின் ஆதார சுருதி.

பாகீரதியின் தந்தை ஒரு விதம்; தாயார் ஒருவிதம். கதையை உருவாக்க இருவரும் மிகவும் உதவியாயிருக்கிறார்கள். பாகீரதியின் பால்யத் தோழி கமலாசனியும் முக்கியமான திருப்பங்களுக்கெல்லாம் கடைசி வரையில் உறு துணையாயிருக்கிறாள்.

பாகீரதியின் தம்பி பாலு வேடிக்கையாகப் பேசிக் கொண்டே பல சந்தர்ப்பங்களிலும் கதை மேலே செல்ல உதவியாயிருக்கிறான்.

கதையின் ஆரம்பத்திலேயே, கணவனை விட்டுப் பிரிந்து சென்ற பாகீரதியின் மனக் குமைச்சலை ஆசிரியர் அற்புதமாக வெளிப்படுத்துகிறார். பிறந்தகத்துக்கு வந்த பாகீரதி நடந்தவற்றைப் பெற்றோர்களிடம் நேரில் சொல்ல முடியாமல் அவதிப்பட்டுத் தோழி கமலாசனியிடம் சொல்லி அவள் மூலம் பெற்றோர்களுக்கு அறிவிப்பதும், விஷயம் அறிந்து அவர்கள் துடித்து துடிப்பதும் ஒரு பெண்ணின் குடும்ப வாழ்வில் பக்கத்துக்கு இருக்கும் பெருமையை அழகாகச் சொல்லுகின்றன. ஆசிரியரின் தமிழ் நடை அலுப்புத் தட்டாத நல்ல நடை.

''ரஸவாதி'' தமிழ் வாசகர்களுக்குப் புதியவரல்லர். பல சிறுகதைகள் எழுதி எல்லோருக்கும் அறிமுகமானவர். இந்த நாவல் ஆசிரியரின் கன்னி முயற்சி. ''கலைமகள்''ளின் பரிசைப் பெற்று இது தன் தகுதியை நிலைநாட்டிக் கொண்டு விட்டது.

பிரசுரம்: கலைமகள் காரியாலயம், சென்னை–4; விலை: ரூ. 5.00

பல்கேரியக் கவிதைகள்

பல்கேரிய நாட்டின் விடுதலைப் போரில் ஈடுபட்டு, நாட்டு விடுதலைக்குச் சில ஆண்டுகளுக்கு முன்பே பாஸிஸக் கொடுங்கோலர்களால் மரண தண்டனை விதிக்கப்பட்ட நிக்கோலா வாப்ஸராவ் அந்நாட்டின் தேசிய கவி. மக்கள் விடுதலைக்காக மனங்குமுறி வீறு கொண்டெழுந்த வீரர் கவிஞர் வாப்ஸராவ். அவர் இயற்றிய கவிதைகளின் ஆங்கில மொழிபெயர்ப்பிலிருந்து இந்தத் தமிழ்க் கவிதைகள் பிறந்திருக்கின்றன. முகவை ராஜமாணிக்கம் தமிழில் இயற்றித் தந்திருக்கிறார். மொழிபெயர்ப்பாளரும் வீரம் பெயர்ந்து விடவில்லை என்பதை மெச்ச வேண்டியதுதான்.

கவிஞர் வாப்ஸராவின் வாழ்க்கை புரட்சிமயமானது. வேலையின்றிப் பல நாட்கள் அலைந்த அவருக்கு ஆலையில் தீயைக் கக்கும் நெருப்பு உலையில் வேலை கிடைத்தது; பிறகு ரயில் எஞ்சினில் வேலை பார்த்தார். இதனால் அவருக்குத் தொழிலாளர்களின் தொல்லைகளை நேரில் கண்டு உணரும் வாய்ப்பு கிடைத்தது. பல முற்போக்கு எழுத்தாளர்களின் தொடர்பும் அவருக்குக் கிட்டியது. அவரது இலக்கிய அறிவுக்கு மார்க்ஸியத் தத்துவங்கள் உரமூட்டின: மனித சமுதாயத்தை அச்சுறுத்தும் பயங்கரங்களைப் பசுமரத்தாணி போல் மக்கள் உள்ளங்களில் நன்கு பதிய வைக்கும் முறையில் விசையூட்டும் கவிதைகளை இயற்றும் ஆற்றலையும் அளித்தன. தமது புரட்சி நடவடிக்கைகளால் மட்டும் இன்றி, தமது ஆவேசம் மிக்க கவிதைகளினாலும் பாசிச எதிர்ப்புப் போராட்டத்தில் வாப்ஸராவ் தீவிரமான பங்கு கொண்டு இறுதியில் உயிர்த் தியாகமும் புரிந்தார். அவரது வீரத்தை உணர்த்தும் பாடல்களை இந்நூலில் காண முடிவது தமிழர்களின் பாக்கியம்.

விற்பனையாளர்: என் சி. பி. எச். (பி) லிமிடெட், சென்னை – 2; விலை: ரூ. 1.00.

முருகன் பரிபாடல்

குன்றுதோறாடும் குமரப் பெருமான் தமிழ்க் கடவுளல்லவா? குன்றுகண்ட இடமெல்லாம் குமரன் கோயில்; குமரன் உள்ள இடமெலாம் தமிழ்க் கவிதைச் சோலைகள் என்று வியந்து யாவரும் பாராட்டி மகிழும் வண்ணம் தமிழ் இலக்கியங்களில் குழந்தை



''ஏன்டா, உனக்குத்தான் பாடப் புஸ்தகங்களெல்லாம் வாங்கியாகி விட்டதே! இன்னும் என்ன வேணும்?''

''புஸ்தகங்களை எடுத்துக்கொண்டு போக ஒரு தள்ளு வண்டி வேணும், அப்பா!''

வேலன் இடம் பெற்றிருக்கிறான். சங்கத் தமிழ் நூல்களுள் முருகன் சிறப்பைக் கூறும் நூல்கள் அதிகம்.

இவற்றுள், குமரப் பெருமானைக் குன்றவர் போற்றும் கடவுளாக மட்டுமின்றி மக்கட் குலமனைத்தும் ஒருங்கே போற்றி வணங்கும் கடவுளாகவும் அறிமுகப்படுத்தும் சிறப்பு இயல்பைப்பெற்ற பாடல்கள் திருமுருகாற்றுப் படை, பரிபாடல் ஆகிய நூல்களில் அடங்கியுள்ளன. பரிபாடலில் முருகனைப் பற்றிக் கூறும் பாடல்களைத் தெளிவான உரையோடு விரிவாக வழங்குகின்றது இந்நூல்.

இந்நூலில் கொடுக்கப்பட்டிருக்கும் பாடல்களும், முருகனைத் தொடர்பாகக் கொண்ட பல நிகழ்ச்சிகளையும் கதைகளையும் சுவைபடக் கூறுவதைக் காணலாம்.

முருகப் பெருமானின் ஆறுபடை வீடுகளுள் ஒன்றான திருப்பரங்குன்றத்தைப் போற்றிக் கூறும் இப் பரிபாடல்கள் பல புலவர்களால் இயற்றப்பட்டவை. குமரன், குழந்தை வேலனாகவும், கார்த்திகேயனாகவும், குஞ்சரி தேவனாகவும், வள்ளி நாயகனாகவும் இன்னும் பலவாறாகவும் போற்றப்படுவதை இந்நூலில் காணலாம்.

கடுவன் இளவெயினனார், நல்லந்துவனார், குன்றம்பூதனார், கேசவனார், நல் அழிசியார், நப்பண்ணனார், நல்அச்சுதனார் ஆகிய பழம் பெரும் புலவர்களின் பாடல்கள் இந்நூலில் இடம் பெற்றிருக்கின்றன. ஆசிரியர் பாடல்களுக்குத் தந்திருக்கும் விளக்கங்கள் தெளிவாகவும், எளிமையாகவும், சுவையாகவும் உள்ளன. இந்த நன்முயற்சி தமிழ் அன்பர்கள் பலருக்கும் நல்விருந்தாகும்.

ஆசிரியர்: புலியூர்க் கேசிகன்; கிடைக்கும் இடம்: பாரி நிலையம்; 59, பிராட்வே, சென்னை – 1; விலை ரூ. 2.50.

குறைவற்ற செல்வம்

குறைவற்ற செல்வம் எது? பணமா, காசா? நிலமா, நீச்சா? எப்பொருள் யாரிடம் இல்லையோ, அது கிடைத்தால் நிறைவுற்ற செல்வமாக நினைப்பார்கள். ஆனால் பண்டைய காலந்தொட்டு 'குறைவற்ற செல்வம் நோயற்ற வாழ்வே' என்பது உறுதியாகி விட்டது.

சுவரை வைத்துக் கொண்டுதானே சித்திரம் வரைய வேண்டும்? இம் முதுமொழியின் படி நோயற்ற வாழ்வு வாழ்ந்தால், என்னற்ற செல்வங்களை ஈட்ட வழிவகைகள் செய்து கொள்ள முடியும் என்பது சர்வ நிச்சயம்.

இந்த நவீன யுகத்தில், பொழுது விடிந்தால் பொழுது போனால் மனிதன் டாக்டர் வீட்டை நாடிச் செல்கிறான். கியூவில் தவம் கிடந்து டாக்டரைப் பார்த்து மருந்தை வாங்கிச் சாப்பிட்டுவிட்டு வீடு வந்து, அவசரம் அவசரமாக அலுவலகம் நோக்கிச் செல்கிறான். எதற்கு? செல்வம் சம்பாதிக்க! சம்பாதித்து அதை மருந்துக்கும் மாயத்துக்கும் கொடுக்க.

நாள்தோறும் அவன் படும் சிரமங்கள் 'இந்தப் பணமும் வேண்டாம், காசும் வேண்டாம். நோயற்ற வாழ்வு வாழ்ந்தால் அதுவே பெருஞ் செல்வம்' என்ற எண்ணத்தை அவன் மனத்தில் ஆணியடித்தாற் போல் நிறுத்தி விடுகின்றன.


இயற்கையன்னை, மனிதன் தன் நிலை மறந்து பல காரியங்கள் செய்வான், நோயுற்று அவதிப்படுவான். அவனைக் காத்து ரட்சிக்க வேண்டும் என்ற கருணையுள்ளத்தோடு பலப்பல மூலிகைகளைப் படைத்திருக்கிறான். கக்கு – சித்தரத்தை போன்ற பல மருந்துப் பொருள்களைக் கொண்டு வெகு சுலபமாக மனிதனின் நோய்களைத் தீர்க்க வழியும் காட்டியிருக்கிறான்.

வீட்டு வைத்தியம், நாட்டு வைத்தியம், குடும்ப வைத்தியம் என்று பல நூல்களை எழுதி மக்களின் நலனில் அக்கறை கொண்டு அவர்களது வாழ்வை நோயற்ற வாழ்வாக்க முயன்று வரும் ஸ்ரீ ஹரி அவர்களே 'குறைவற்ற செல்வம்' என்னும் இந்த நூலையும் எழுதியுள்ளார்கள்.

குறைந்த செல்வமுள்ளவர்களும் வாங்கும் பொருட்டுக் குறைவற்ற செல்வத்தை ஒரு ரூபாய்க்கு வழங்கி விருப்பதைப் பாராட்டுகிறோம்.

ஆசிரியர் : ஸ்ரீ ஹரி, கிடைக்குமிடம்: கார்த்திகேயன் பப்ளிகேஷன்ஸ் 2–131 பிராட்வே, சென்னை-1.

Printed & Published by R. Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at the Kalki Press, Kilpauk, Madras-10.
Managing Editor, T. Sadasivam.



குந்தா ஹைட்ரோ-எலக்டிரிக் திட்டம், நீலகிரி

நம் நாட்டில் இதுவரையில் பயிர் செய்யப்படாமலிருந்த தரிசு நிலங்களிலும் பயிரேற்றி உணவு தானியங்களை விளைவிப்பதற்கு ஏராளமான தண்ணீரும் மின்சக்தியும் இன்றியமையாதவை; மேலும் வாழ்க்கைக்கு அத்தியாவசியமான வெளிச்சத்தைக் கொடுப்பதற்கும் மின்சக்தி தேவைப்படுகிறது. தண்ணீரும், மின்சக்தியும் இன்று நமக்குப் பெரும் அளவில் பக்ரா-நங்கல், கோனர், காந்தி ஸாகர், துங்கபத்ரா மற்றும் இதர அணைத் திட்டங்கள் மூலம் கிடைக்கின்றன. இந்தப் பிரம்மாண்டமான ஹைட்ரோ-எலக்டிரிக் திட்டங்கள் நம்முடைய மகத்தான சாதனைகளைப் பறைசாற்றுவதோடு மட்டுமல்லாமல், நம் நாட்டின் வளர்ச்சிக்கும் சுபிட்சத்துக்கும் கான்க்ரீட் செய்துவரும் அரும் சேவையையும் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றன.

மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் நீர்ப்பாசனம் மற்றும் மின்சக்தி உற்பத்திக்காக மட்டும் ஒதுக்கப்பட்டுள்ள தொகை ரூ. 1,712 கோடிகள். இத் திட்டங்களின் நிர்மாண வேலைக்கு ஏராளமான ஸிமெண்ட் தேவைப்படும். இத்திட்டங்களுக்கும் தனி நபர்களின் தேவைக்கும் வேண்டிய ஸிமெண்ட் ஏராளமாகக் கிடைக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு 1966 வருஷ வாக்கில் ஆண்டுக்கு ஒரு கோடியே ஐம்பது லக்ஷம் மெட்ரிக் டன்கள் ஸிமெண்ட் உற்பத்தி செய்யப்பட வேண்டும் என்று மூன்றாவது திட்டத்தில் இலக்காகக் கொள்ளப்பட்டிருக்கிறது. இந்த இலக்கை நிறைவேற்றுவதில் ஏஸிஸி மற்றும் இந்தியா ஸிமெண்ட்ஸ் பாக்டரிகளின் பெருகிவரும் உற்பத்தி உதவி புரியும்.

ஏஸிஸி மற்றும் சங்கர் பிராண்ட் ஸிமெண்ட்



தரிசு நிலத்தில் விளைந்த
உணவு தானியம்

தி ஸிமெண்ட் மார்க்கெட்டிங் கம்பெனி ஆப்
இந்தியா லிமிடெட்

தி அஸோஸியேட்டட் ஸிமெண்ட் கம்பெனீஸ் லிமிடெட்
தி இந்தியா ஸிமெண்ட்ஸ் லிமிடெட்

JWT/CHI-2853

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon





சினிமா
நட்சத்திரங்களின்
தூய, மெல்லிளம்
அழகுசாதன சோப்

'இனிய வண்ணங்கள் ஐந்து, இன்று நமக்கே!'
என்கிறார் எழிலரசி ஜமுனா

இந்துஸ்தான் லீவர் தயாரிப்பு

LTS. 119-X29 TM